கல்கி

KALKI
19-4-70
40
காசு




பொங்கும்
உவகையில்
குளித்
ததுண்டோ?
fanta
ஃபண்டா ஆரஞ்சு
சுவை இனிதே...
பருகிடவே
எடுக்காதோ தாகம்!
ஃபண்டா கோகா-கோலா
கம்பெனியின் தயாரிப்பு
FANTA IS A REGISTERED TRADE MARK OF THE COCA-COLA COMPANY
CMCF-I-152 TAM



"பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளுக்கும், பற்களுக்கும் தீங்கு இழைக்கக்கூடும்.."


கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களையும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!

வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய்நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

நவீன
பல் பராமரிப்பு முறைகளே **சிக்கனமாக** இருக்கும்போது பழைமையான பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!






TP. C. 19 Tm

கல்கி பொருளடக்கம்

சாதாரண, சித்திரை, 6 - 1970, ஏப்ரல் 19

"கல்கி"யில் வெளி வாரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00


உழைப்பு நெறியைக் குலைக்கும் திட்டம்
ஏன் உழைக்க வேண்டும்? லாட்டரிச் சீட்டு வாங்குவீர்!
சர்க்காரின் நிரந்தர ஊழியர்கள்
நீதி மன்றங்கள்
கப்பல் முழுகி விடுமோ?
அரசியல்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ● இதழ் 38

சாஸனம் சாகவில்லை!

அன்புள்ள வாசகர்களே! நமது அரசியல் சாஸனத்தைத் திறமைசாலிகளான தலைவர்கள் தீர விவாதித்து உருவாக்கினார்கள். அவர்கள் தேசபக்தி மிகுந்தவர்கள். தேசத்தின் க்ஷேமத்திலும், அபிவிருத்தியிலும் அக்கறை கொண்டவர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் தயாரித்த நமது அரசியல் சாஸனத்துக்கு என்ன நேர்ந்திருக்கிறது தெரியுமா? அதைக் கொலை செய்து விட்டது போன்ற மனப் போக்கு விளைவிக்கப் பட்டுள்ளது.

பெர்மிட் — லைசென்ஸ் அரசு நடக்கிறது. சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக இந்த அரசாட்சி முறை தருகிற அதிகாரங்களையும், வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொண்டு ஒரு பிரமையை உண்டுபண்ணி யிருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள அனைத்துமே அரசாங்கத்துக்குத்தான் சொந்தம்; அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான் பிரஜைகள் எதையும் அநுபவிக்கலாம் என்பதுதான் அந்தப் பிரமை. மக்கள் சுயமாகத் தாமே உரிமைகளை அநுபவிக்கலாம் என்பதை அரசியல் சாஸனத்தில் செப்பித் திட்டவட்டமான உத்தரவாதங்களை அளித்திருக்கிறார்கள். இதை மக்கள் உணராதபடி பிரமை பிடிக்கச் செய்து விட்டார்கள். ஒவ்வொரு தொழில் உற்பத்தியாளரும், மொத்த வியாபாரியும், சில்லறை வியாபாரியும், அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதால் தான் தாம் தொழில் நடத்த முடிகிறது என்று நினைக்கும் நிலைமை வந்துவிட்டது. தமது உடைமைக்கும் தொழிலுக்கும் அரசாங்கம் எந்த விதமான தடையும் விதிக்கலாம் என்ற எண்ணத்துக்கு நாட்டில் அனைவரும் அடிமையாகி விட்டனர்.

தனிமனிதரின் சுதந்திரமான முயற்சி கண்டனத்துக்கு உரியதாகி விட்டது. அதன் இடத்தை அடிமை மனப்பான்மை நிரப்பி விட்டது. இவ்வாறு சர்க்கார் செலுத்தும் சர்வாதிபத்தியம் அரசியல் சாஸனத்துக்கு விரோதமானது என்ற உணர்வே பலருக்கு இல்லை. தகப்பனைக் கொன்றுவிட்டு ஆட்சி உரிமையைக் கைப்பற்றிய கொடுங்கோலனை எவ்வித எதிர்ப்புமின்றி மறு தகப்பனாக ஏற்றுக் கொள்வது போன்ற நிலைமையைக் காண்கிறோம்.

சர்க்காருக்குச் சகல துறைகளிலும் பிரவேசிக்க உரிமை உண்டு என்பதாக வெறும் பிரமையை மக்களிடம் உண்டாக்கியதன் மூலம் அரசியல் சாஸனத்தின் அடிப்படையே மாற்றப் பட்டுள்ளது. இந்தப் பிரமையையே இனியும் உண்மை எனக் கருத அநுமதிக்கலாகுமா? அரசியல் சாஸனத்தை மீண்டும் அரியாசனத்தில் அமர்த்தும் சக்தியை நாம் இழந்து விட்டோமா? அதற்குரிய காலம் கடந்து விட்டதா? அரசியல் சாஸனம் இன்னும் சாகவில்லை; செத்து விட்டது என்ற பிரமையை அகற்றுவோம்.

பெரிய பாங்குகளை அரசு எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கவனிப்போம். முதலில் நிறைவேறிய சட்டம் செல்லாது என்று ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது. அச்சட்டத்துக்குப் பதிலாக வேறொரு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நஷ்டஈடு பற்றிய கோர்ட்டின் கட்டளைக்கு அது பணிந்து கொடுத்திருக்கிறது. ஆனால் ஒரு பிரமையை நிலைநிறுத்தப் புதிய சட்டம் முயல்கிறது. சர்க்காரின் நிர்வாகம் விவேகமுள்ளது என்ற கருத்தில், அந்த நிர்வாகத்தின் கீழ் எல்லாப் பாங்குகளும் ஒருருப்பாகி விட்டன என முடிவாக எண்ணுவதுதான் அப்பிரமை. 'எல்லா டெபாசிட்டுகளும் அரசாங்கத்தின் முழு அதிகாரத்துக்கு உட்பட்டவை; சம்மதம் அளித்தாலும் அளிக்காவிட்டாலும் டெபாசிட் செய்யும் எல்லோர் சார்பிலும் தர்மகர்த்தாவாக அரசு அவற்றைப் பரிபாலிக்கிறது' என்பது மற்றொரு பிரமை. பிரச்னையின் இந்த அம்சத்தைப் பற்றி ஸுப்ரீம் கோர்ட் எடுத்துக் கொண்ட நிலை சரியானதுதானா என்று தட்டிக் கேட்கும் மனப்பான்மை மக்களிடம் தென்படவில்லை. பாங்குப் பங்கு

தாரர்களின் நஷ்டஈடு விஷயம் முக்கியமானது தான்; ஆனால் அதற்கு அளித்த முக்கியத்துவத்தின் விளைவாக, டெபாஸிட் செய்துள்ளோரின் உரிமைகள் விஷயமாக ஸுப்ரீம் கோர்ட் தவறு இழைத்து விட்டது என்று நான் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன் சேமிப்பை ஒருவன் தான் விரும்பும் பாங்கில் போட்டு வைக்கிறான். அதற்கு அரசாங்கம் தர்மகர்த்தா ஆகிவிடும் நிலைமைக்கு உட்பட வேண்டும் என அவனை நிர்ப்பந்திக்க முடியாது. இவ்வாறே ஆஸ்திரேலியாவில் முடிவு செய்திருக்கிறார்கள்; ஆனால் இந்தியாவில் உள்ள ஸுப்ரீம் கோர்ட் இதை ஏற்கும் என்று சொல்வதற்கில்லை என்கிறார் ஸ்ரீ பால்கிவாலா. நம் நாட்டில் நீதி அமுலாவது சாத்தியமல்ல என்ற மனப்பான்மையை என்னென்பது?

அரசியல் சாஸனத்தை நாம் உறுதியுடன் பாதுகாத்தாக வேண்டும். சர்க்கார் சர்வாதிபத்தியத்துக்கு அது அனுமதி அளிக்கவில்லை. மக்களின் க்ஷேமத்துக்கான அரசாங்கம் செயல்படும் அமைப்பை நோக்கிப் படிப்படியாக முன்னேற வேண்டும் என்றுதான் அது பணிக்கிறது. சாஸனம் விதிக்கும் ஆட்சி முறையில் அரசு மக்களின் பணியாளாக உழைக்கும்; இன்று போல் மக்கள் அரசாங்கத்தின் அடிமையாக மாட்டார்கள்.

நமது முயற்சி தோல்வியுறக் கூடுமே என்ற பயத்தில், செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டு விடக் கூடாது. வெற்றி, தோல்வியைப் பொருட்படுத்தலாகாது. தோல்வி நேரிடுமோ என்று அஞ்சாமல் ஸுப்ரீம் கோர்ட் தவறாக முடிவு செய்திருக்கக் கூடிய விஷயத்தில் மறு பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டாக வேண்டும். செயலற்றுக் கிடப்பதுதான் நமக்குள்ள பெரும் பகை. அதுவே பெரிய அபாயமுமாகும். இதை பகவத்கீதையும் போதிக்கிறது.

டெபாஸிட்டர்களுக்கு என்று ஓர் அகில இந்திய ஸ்தாபனம் இருக்கிறது. புதிய சட்டம் செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்குமாறு கோரும் ரிட் மனுவை டெபாஸிட்டர்களின் சார்பில் இந்த ஸ்தாபனம் தாக்கல் செய்து, இவ்விஷயமாக முந்திய தீர்ப்பில் செய்த முடிவுகளை மறு பரிசீலனை செய்வதற்கு முற்பட வேண்டும். அரசியல் சாஸனம் சொத்துரிமைக்கு உத்தரவாதம் அளிக்கிறது. பாங்குகளை அரசுடைமையாக்கியது டெபாஸிட்டர்களின் சொத்து உரிமையில் குறுக்கிடுவதாகும். பாங்குகள் தர்மகர்த்தாப் பொறுப்புக்களை உடையவை. அவை டெபாஸிட்டர்களின் நிதிகளுக்குத் தர்மகர்த்தாக்கள். இந்த அம்சத்தை அலட்சியம் செய்யலாகாது. நஷ்டஈடு கொடுத்துத் திருப்தி செய்விக்கக் கூடிய பங்குதாரர்களின் ஸ்தாபனங்கள் என்று மட்டுமே பாங்குகளை மதிக்கலாகாது. டெபாஸிட்டர்களின் உரிமையையும் கவனிக்க வேண்டும்.

பிரமைகளை அகற்றி, அரசியல் சாஸனத்துக்குப் புதுப் பொலிவு தரவேண்டும்.

(''ஸ்வராஜ்யா''வில் ராஜாஜி எழுதியது.)

லாட்டரியும் ராஜாஜியும் ராஷ்டிரபதியும்

ராஜ்ய அரசாங்கங்களுக்கு லாட்டரி நடத்த அரசியல் சாஸனப்படி அதிகாரம் இல்லை என்ற ராஜாஜியின் கருத்தை மக்கள் அறிவர். இவ்விஷயமாக அவர் ராஷ்டிரபதியுடன் கொண்டிருந்த கடிதத் தொடர்பைச் சுருக்கமாக நேயர்கள் முன் வைக்கிறோம்.

ராஜாஜி, சென்ற டிசம்பர் 31ந் தேதி ராஷ்டிரபதிக்கு ஒரு கடிதம் எழுதினார். இக்கடிதத்தில் அவர் கூறினார்: ''சூது வசியத்தைக் காட்டி லட்சக்கணக்கான மக்களிடமிருந்து ராஜ்ய சர்க்கார்கள் பணம் திரட்டுகின்றன. இந்தப் பணத்தில் ஒரு பகுதியை ஒரு பெரிய பரிசாகவும், மற்றும் பத்துப் பன்னிரண்டு கணிசமான பரிசுகளாகவும் வழங்குகின்றன. இது தொழிலாளர் சமூகம் முழுவதன் உழைப்பு நெறியையும் சிதைக்கிறது. இந்த லாட்டரிகளுக்கு முடிவு கட்டியாக வேண்டுமென உறுதியாக உணர்கிறேன். ராஜ்ய அரசாங்கங்கள் பெரிய சூதாட்டச் சாலைகளாவது விரும்பத் தகாத நிலை என்பது மட்டுமல்ல. மேற்படி பரிசுகளால் திடீரென்று சிலர் செல்வந்தராகி சோஷலிஸக் கொள்கைக்கே முற்றும் விரோதமான ஏற்றத் தாழ்வுகள் உண்டாக்கப்படுகின்றன. மனக் குழப்பங்களும் மலிகின்றன. ஏமாற்றுக் காரர்கள் பரிசு பெற்றவர்களைச் சுரண்டுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

''மத்திய பார்லிமெண்டின் அதிகாரபூர்வமான அனுமதியின்றி ராஜ்ய அரசாங்கங்கள் இவ்விதம் லாட்டரி நடத்த உரிமை பெற்றிருக்கவில்லை என்ற சட்ட அம்சம் தெளிவாக உள்ளது. லாட்டரிகள் அரசியல் சாஸனத்துக்கு முரணாக இருந்தாலுங்கூட, அவற்றால் எந்தத் தனிப்பட்ட மனிதரும் பிரத்தியேகமாகப் பாதிக்கப்படாததால், லாட்டரியைத் தடுக்க எவரும் 'ரிட்' போடுவதற்கில்லை என்ற அடிப்படையில் பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. இந்த அடிப்படை அடியோடு தவறானது என்று எனக்குத் தோன்றுகிறது. லாட்டரிகளால் நாடு முழுவதுமே பாதிக்கப்படுவதால், ஒவ்வொரு தனி நபருக்கும் இவ்விஷயத்தில் தலையிட உரிமை உண்டு. இவ்விஷயமாக ஸுப்ரீம் கோர்ட்டின் கருத்தை அறிவதற்கு இந்திய சர்க்காரை நீங்கள் சட்ட பூர்வமாக வற்புறுத்த வேண்டும் எனக் கோருகிறேன்.''

ராஜாஜியின் இக்கடிதத்துக்கு 1970 ஜனவரி 2ந் தேதி ராஷ்டிரபதியவர்கள் பதில் எழுதினார். இப்பதில் கடிதத்தில், ''தங்களது கடிதத்தின் பிரதியைப் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ளேன். இவ்விஷயமாகக் கவனிக்கும்படி அவரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதன்பின் ஜனவரி 16ந் தேதியன்று ராஜாஜி, ராஷ்டிரபதிக்கு மீண்டும் எழுதினார். ''லாட்டரி விஷயத்தில் ஸுப்ரீம் கோர்ட்டின் ஆலோசனை கேட்பது பற்றி யூனியன் சர்க்கார் முடிவு செய்து, அம் முடிவின் மீதே

தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில்லை. ராஷ்டிரபதி பிறப்பிக்கும் **உத்தரவுகள்** சர்க்காரின் யோசனையின் பேரில் வெளியிடப்படவேண்டும் என்று சம்பிரதாயம் இருப்பது வாஸ்தவம். ஆனால் ஸுப்ரீம் கோர்ட்டிடம் ஒரு விஷயமாக **ஆலோசனை கேட்பது** உத்தரவாகாது.... எனவே, சட்ட மந்திராலயம் இவ்விஷயத்தில் எக்கருத்துக் கொண்டிருப்பினும், தாங்கள் சாஸனப்படி பெற்றுள்ள அதிகார உரிமையைப் பிரயோகித்து ஸுப்ரீம் கோர்ட்டின் கருத்தைப் பெறுவீர்கள் என நம்புகிறேன்.''

இக்கடிதத்துக்கு ராஷ்டிரபதி ஜனவரி 23ந் தேதி எழுதிய பதிலில் ''நீங்கள் சொல்வதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறி யிருந்தார்.

இதன்பின் இரண்டு மாதங்களுக்கு மேலாக எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் ராஜாஜி இந்த ஏப்ரல் முதல் தேதி ராஷ்டிரபதிக்கு ஒரு கடிதம் எழுதினார்: ''விஷயம் முற்றுப் பெற்று விட்டதாகவே தாங்கள் எண்ணுவதாகத் தோன்றுகிறது. இந்த என் அனுமானம் சரியாக இருப்பின், நம் கடிதப் போக்குவரத்தைப் பொதுமக்களுக்கு வெளியிட விரும்புகிறேன். தங்களுக்கு ஆட்சேபம் இருப்பின் தெரிவிக்கவும்'' என்று ராஜாஜி கோரி யிருந்தார்.

இம்மாதம் 9ந் தேதியன்று இதற்கு ராஷ்டிரபதியின் பதில், தந்தியாக வந்தது. ''தங்களுக்கு 1968 நவம்பர் 13, 14 தேதிகளில் உள்துறை மந்திராலயம் எழுதிய கடிதத்தில் சர்க்காரின் கருத்து அடங்கியுள்ளது. அதன்படி நிலைமையைத் தாங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். நம் கடிதப் போக்குவரத்தை வெளியிடும் விஷயமாகத் தங்கள் உசிதப்படி செய்யவும்'' என்று அதில் ராஷ்டிரபதி கூறியிருந்தார்.

இத்தந்தியில் குறிப்பிடப்படும், 1968ம் வருட நவம்பர் 13ந் தேதியிட்ட உள்துறை மந்திராலயக் கடிதம் ஸ்ரீ சவான் அவர்களால் ராஜாஜிக்கு எழுதப்பட்டது. அதன் சாரம்:

''ராஜ்ய சர்க்கார்கள் நடத்தும் லாட்டரிகளை ஒழுங்குபடுத்துவது பற்றிய சட்டபூர்வமான, சாஸன பூர்வமான நிலைமை ஓரளவு சுரொட்டாக இருக்கிறது. (சாஸனத்தில்) ராஜ்ய சர்க்காருக்குரிய விஷயங்களின் பட்டியலில் 34-வது அம்சப்படி, லாட்டரி ராஜ்ய அரசுகளின் ஆணை எல்லைக்கு உட்பட்டதே என எங்களுக்கு ஆலோசனை தரப்பட்டிருக்கிறது. எனவே, ஒரு ராஜ்ய சர்க்கார் தானே லாட்டரி நடத்தவும், பிறர் லாட்டரி நடத்துவதற்கு அனுமதி தரவும் உரிமை பெற்றுள்ளது. யூனியன் அரசாங்கத்தின் ஆணை எல்லைக்கு உட்பட்ட விஷயங்களின் பட்டியலில் 40வது அம்சப்படி, ராஜ்ய சர்க்கார் நடத்தும் லாட்டரிகள் மத்திய சர்க்காரின் சட்டபூர்வமான, நிருவாகபூர்வமான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டன என்று கூறப்பட்டிருப்பது வாஸ்தவம். ஆயினும், தற்போது ராஜ்ய சர்க்கார்கள் நடத்தும் லாட்டரிகளை ஒழுங்குபடுத்தச் சட்டம் ஏதும் இல்லை. ஏனெனில், இந்திய குற்றச் சட்டத்தின் 294-ஏ பிரிவு, எந்த ராஜ்ய சர்க்காரின் அனுமதியும் இன்றித் தனி மனிதர்கள் நடத்தும் லாட்டரிக்கு மட்டுமே தண்டனை விதிக்கிறது.

''இதில் எல்லா அம்சங்களையும் ஆராய்ந்த பின், லாட்டரி நடத்துவது யுக்தமா என்பதை ராஜ்ய சர்க்கார்கள் தாமாகவே முடிவு செய்து கொள்ளட்டும் என்று விட்டு விட்டோம். எனினும், லாட்டரியை ஆட்சேபிக்கும் ராஜ்யங்களுக்குக் காப்பாக, மேற்படி ராஜ்யங்களின் அரசாங்க அனுமதியின்றிப் பிற ராஜ்ய லாட்டரிச் சீட்டுகளை அங்கு விற்பதைக் குற்றமாகக் கருதும் விதத்தில் இந்திய குற்றச் சட்டத்தின் 294- ஏ பிரிவைத் திருத்துவதற்கு உத்தேசித்துள்ளோம்.

''மேலே விளக்கப்பட்டுள்ள இச்சூழ்நிலையில் ஸுப்ரீம் கோர்ட்டை ஆலோசனைக்காக அணுக வேண்டிய அவசியமில்லை.''

இக்கடிதத்தில் உள்துறை மந்திரி ராஜ்யப் பட்டியலின் 34-வது அம்சத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த ஷரத்தின்படி, சர்க்கார் தவிர ஏனைய தனி மனிதர்களோ நிறுவனங்களோ சூதாட்டம் நடத்துவது குறித்து நடவடிக்கை எடுப்பதற்குத்தான் ஒரு ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் வழக்கறிஞர்களுக்கு மட்டுமின்றிச் சாமானிய மக்களுக்குங்கூடத் தெளிவாகத் தெரியும். எனவே, ராஜ்ய சர்க்காருக்குத் தானே லாட்டரி நடத்த இந்த ஷரத்து அதிகார உரிமை தருவதாக உள்துறை மந்திரி எண்ணுவது முற்றிலும் தவறாகும்.

ராமனுக்கு ஒரு கோடி

திருவனந்தபுரம் ஸ்ரீ சீதாராம பக்த சபையினர் ஸ்ரீ ராமநவமியை யொட்டி ஒரு மகத்தான புண்ணியப் பணிக்கு ஏற்பாடு செய்துள்ளனர். இம்மாதம் 6ந் தேதியிலிருந்து மே மாதம் 11ந் தேதி வரையில் ஸ்ரீ ராம சகஸ்ரநாம கோடி அர்ச்சனை நடத்துகிறார்கள். இந்தக் கோடி அர்ச்சனையில் அன்பர்கள் கலந்துகொள்ள எளிதமான ஆராதனை முறைகளை ஏற்படுத்தி, அவற்றுக்கு எளிதமான கட்டணம் நிர்ணயித்திருக்கிறார்கள். குறைந்தபட்சமாக ரூ. 11 அனுப்பினால் கோடிசகஸ்ரநாம யக்ஞத்தில் பங்கு கிடைக்கும்.

கோடி அர்ச்சனையில் கிடைக்கும் நிதியத்தினால் ஸ்ரீ ஸீதாராம கலியாண மண்டபத்தைப் பூர்த்தி செய்ய இருப்பது குறிப்பிட வேண்டிய விஷயம். இந்த விசேஷத்தைப் பயனுக்கிக் கொள்ள விரும்புகிறவர்கள் **பொருளாளர், ஸ்ரீ சீதாராம பக்த சபா, முதல் புத்தன் தெரு,** (First Puthen St.) **திருவனந்தபுரம் – 9** என்ற முகவரிக்குக் காணிக்கை அனுப்பிவைக்கவும்.



மன்னர் மறைந்தார்

அவர் பிறந்த ஊர் மகாராஜபுரம். அவருக்குச் சூட்டப்பெற்ற பட்டம் சங்கீத பூபதி. வாஸ்தவமாகவே சங்கீதத்தில் மன்னாதி மன்னனாக விளங்கிய ஸ்ரீ விசுவநாதய்யர் அவர்கள் அரியாசனத்தைச் சூனியமாக்கி மறைந்து விட்டார்.

தமது பதினாறாவது வயதிலேயே இசை உலகில் ஜொலிக்கத் தொடங்கியவர் மகாராஜபுரம் ஸ்ரீ விசுவநாதய்யர். புஷ்பவனம் போன்ற பழம்பெரும் வித்வான்கள் காலத்திலேயே இளைஞர் விசுவநாதய்யர் ரசிகர் குழாத்தைப் பெருமளவில் கவர்ந்திழுக்கத் தொடங்கி விட்டார். குருநாதராகிய உமையாள்புரம் சுவாமிநாதய்யர் வழியாக சங்கீத சத்குரு தியாகையரின் அருள் இவருள் பாய்ந்து, உலகை யெல்லாம் தன் குழலில் இழுத்துக்கொண்டது.

அவரது சாரீரத்தின் நுட்ப சௌந்தரியம், அவருடைய எல்லையற்ற கற்பனை வளம், 'வித்வத்' என்பதன் நெருடுகள் இல்லாமல் கறந்த பாலைக் கறந்தபடி தருவது போன்ற ஒரு கள்ளமற்ற வெள்ளையான சங்கீத சிந்தனை, 'பாண்டித்தியத்தின்' பிருவைவிட மனோரஞ்சகத்தின் மிருதுத் தன்மை கூடியிருக்கும் சொகுசு—இவற்றையெல்லாம் ஸ்ரீ விசுவநாதய்யரிடம் அநுபவித்தது போல் யாரிடம் கேட்கப் போகிறோம்? வாழ்க்கையை மதுரமாகச் சுவைக்க ஆசைப்பட்ட ஒரு நல்ல உள்ளத்தின் நல்ல கானமாக இருந்தது அவரது இசை. அவரது தனி அழகு பொருந்திய நாயகியும் தர்பாரும், தேவகாந்தாரியும் ஆரபியும், மோகனமும் அடாணாவும், தர்பாரி கானடாவும் ஹம்ஸாநந்தியும் நினைக்கும்போதெல்லாம் ஸ்வப்பன லோகக் கிளுகிளுப்பைத் தந்து கொண்டே இருக்கும். ராகஸ்வரூபங்களை ஸ்வச்சமாக வடிப்பதிலும், தியாகைய கிருதிகளின் ரூபத்தைத் தெற்றெனத் தீட்டுவதிலும் அவருக்கிணை அவரே எனலாம்.

மனம் விட்டுக் குழந்தையாகப் பழகுவதிலும் நகைச்சுவையிலும் கூட மன்னனாக இருந்தார்.

சரீரம், சாரீரம் இரண்டுமே நலிவுற்றுத் தமது ராஜ கம்பீர சக்தி குன்றியதில் மனம் குமைந்தவர் கடைசியில் நாதப்பிரம்மத்தில் லயமாகிவிட்டார்.

அவரது புத்திரரும், சீடரும், அவரது சங்கீத பத்ததியைத் தொடர்ந்து வளர்க்க வேண்டியவருமான மகாராஜபுரம் ஸ்ரீ சந்தானத்துக்கும், அவரது தலைமாணுக்கர் செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யருக்கும் நமது அநுதாபங்கள்.

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

முப்பத்தேழாம் அத்தியாயம்

வேஷம் வெளிப்பட்டது!

பயங்கரத் தோற்றம் கொண்டிருந்த அந்தக் காளாமுக சைவரை அந்த நேரத்தில் அந்த இடத்தில் பார்த்ததும் வந்தியத்தேவன் ஒரு கணம் திகில் அடைந்தான். பிறகு அவனுக்கு இயற்கையான துணிச்சல் திகிலை விரட்டியடித்தது. "இவனை எங்கேயோ பார்த்திருக்கிறேனே? எங்கே?" என்று சிந்தித்தான். ஆம், ஆம்; அரிச்சந்திர நதிக் கரையில் மரத்தடியில் படுத்திருந்தபோது இரண்டு பேர் வந்து உற்றுப் பார்த்துவிட்டுப் போகவில்லையா? அவர்களில் ஒருவன் இவன்! அவ்வளவு தானா? ஒரு தடவை மட்டும் பார்த்தமுகமா இது? அந்தக் கூரிய பார்வையுள்ள கண்களை வேறு எங்கேயும் பார்த்ததில்லையா?

இதற்குள் காளாமுக சைவன் அவனை உற்றுப் பார்த்துவிட்டு, "ஹா! ஹா! ஹா!" என்று சிரித்தான். அந்தக் குரல்! — அடிக்கடி கேட்ட குரல் போல இருக்கிறதே?

"அட சே! நீதானா? உனக்காகவா இந்த நள்ளிரவில் இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தேன்?" என்று காளாமுக சைவன் கூறிய போது, அவன் வேண்டுமென்று சிறிது குரலை மாற்றிக் கொண்டு பேசியதாகத் தோன்றியது.

"பின்னே, யாருக்காக வந்தாய்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இளவரசரைத் தேடிக்கொண்டு வந்தேன்!" என்றான் காளாமுகன்.

"எந்த இளவரசரை?"

"உனக்கென்ன அதைப் பற்றி? நீ ஏன் கேட்கிறாய்?"

"நானும் ஓர் இளவரசன் தான்; அதனால்தான் கேட்டேன்."

"இளவரசனுடைய முக லட்சணத்தைப் பார்!...."

"என் முக லட்சணத்துக்கு என்ன ஐயா, குறைவு? உம்மைப் போல் தாடி மீசையும் சடை முடியும் எலும்பு மாலை



யும் அணிந்தால் என் முகம் இலட்சண மாகி விடுமா?''

''அணிந்து பாரேன் ! அப்போது தெரியும்.''

''தாடி மீசையும் ஜடை முடியும் எத்தனை நாளில் வளரும்?''

''அது என்ன பிரமாதம்? ஒரு நாளில் வளர்ந்து விடும். வேண்டுமென்ருல் ஒரு நாழிகையில்கூட....''

''அப்படித்தான் இருக்குமென்று நானும் நினைத்தேன்....''

''என்ன நினைத்தாய் ?''

''ஒன்றுமில்லை. என்னைக் கட்டியிருக்கும் கட்டுக்களை அவிழ்த்துவிடு. நானும் உங்கள் கோஷ்டியில் சேர்ந்து விடுகிறேன்.''

''போதும் போதும்! உன்னைப் போன்ற ஒற்றர்கள் இன்னும் யாரோ எங்கள் கூட்டத்தில் இருக்கிருர்கள். அதனல்தான் எங்கள் மகாசங்கம் இன்று அப்படி முடிந்தது.''

''எப்படி முடிந்தது?''

''மகாசங்கத்துக்கு இளவரசர் வரப் போகிருர், அவர் சிம்மாசனம் ஏறியதும் எங்கள் மகா குருவை இராஜ குருவாக ஏற்றுக் கொள்வதாய் வாக்களிக்கப் போகிருர் என்று காத்திருந்தோம் ; இளவரசர் வரவேயில்லை.''

''என்னைக் கட்டு அவிழ்த்து விடு ; இளவரசர் ஏன் வரவில்லையென்று நான் தெரியப்படுத்துகிறேன்.''

''எந்த இளவரசர் ?''

''வேறு யார் ? கண்டராதித்தரின் குமாரர் மதுராந்தகர் தான்!''

''நான் ஊகித்தது சரி !''

''என்ன ஊகித்தாய்?''

''நீ ஒற்றன் என்று ஊகித்ததைத் தான் சொல்கிறேன்.''

''எதை . கொண்டு ஊகித்தாய்?''

'' வ 'சரைத் தேடிக் கொண்டு வந்தபோது. ந்தக்காட்டுக்குள்ளிருந்து சிலர் வெளியேறுவதைப் பார்த்தேன். அவர்கள் இன்னர் என்று எனக்குத் தெரியும். நீ ஒற்றன் என்று சந்தேகித்துத்தான் அவர்கள் உன்னைக் கட்டிப் போட்டிருக்க வேண்டும். ஆனல் உன்னை உயிரோடு ஏன் விட்டு விட்டுப் போனர்கள் என்றுதான்தெரியவில்லை.''

''அதை நான் சொல்கிறேன்; என்னைக் கட்டு அவிழ்த்து விடு!''

''நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். உன்னைக் கட்டு அவிழ்த்துவிடவும் முடியாது. நான் சொல்கிறபடி செய்கிறதாக ஒப்புக் கொண்டால்....''

''நீ சொல்கிறபடி என்ன செய்ய வேண்டும் ?''

''உனக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடுவதில்லை யென்று ஒப்புக் கொண்டு நூற்றெட்டுத் தோப்புக்கரணம் போட வேண்டும்!''

''அப்படியா சமாசாரம்?'' என்ருன் வந்தியத் தேவன்.

இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த போதெல்லாம் அவனுடைய கைகள் சும்மா இருக்கவில்லை. மெள்ள மெள்ளக் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டே யிருந்தன. ''நூற்றெட்டு தோப்புக்கரணம் போட வேண்டும்'' என்று காளாமுகன் கூறியபோது, எல்



லாக் கட்டுக்களும் அவிழ்ந்து விட்டன. அவ்வளவுதான்; ஒரே பாய்ச்சலாகக் காளாமுகன் மீது பாய்ந்தான் வந்தியத் தேவன். அவனைக் கீழே தள்ளினான். காளாமுகன் கையில் ஏந்தியிருந்த சுளுந்து பக்கத்தில் விழுந்தது: ஆனால் அடியோடு அணைந்து விடாமல் சிறிது வெளிச்சம்கொடுத்துக்கொண்டிருந்தது.

கீழே விழுந்த காளாமுகன் மார்பின் மீது வந்தியத் தேவன் ஏறி உட்கார்ந்து கொண்டு அவன் முக தாடியைப் பிடித்துக் குலுக்கினான். தாடி வந்தியத்தேவனுடைய கையோடு வந்துவிட்டது. அதே சமயத்தில் காளாமுகன்வந்தியத்தேவனை உதறித் தள்ளிவிட்டு எழுந்து நின்றான்.

தரையில் கிடந்து அணைந்து போகும் தறுவாயிலிருந்த சுளுந்தை வந்தியத் தேவன் எடுத்துத் தூக்கிப் பிடித்தான்.

தாடியும் சடையும் இழந்த காளாமுகனுடைய முகம் சாக்ஷாத் வீரவைஷ்ணவ



ஆழ்வார்க்கடியானுடைய முகமாகக் காட்சி அளித்தது.

இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துச் சிறிது நேரம் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

"வைஷ்ணவரே! சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடக் கூடாது என்று எனக்குச் சொன்னீரே? நீர் மட்டும் என்ன செய்கிறீராம்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"உன்னைப் போல் நான் அபாயத்தில் அகப்பட்டுக் கொள்ளவில்லையே, அப்பனே! நான் மட்டும் இப்போது வந்திராவிட்டால்...."

"நீர்தான் என் கட்டுக்களை அவிழ்த்து விட்டதாக எண்ணமா?"

"நீயே கட்டு அவிழ்த்துக் கொண்டிருந்தாலும் இந்தக் காட்டிலிருந்து என் உதவியில்லாமல் வெளியே போக முடியாது. நரிகளுக்கு இரையாக வேண்டியதுதான்."

"நரிகள் கிடக்கட்டும். இங்கே சற்று முன் வந்து கூடியிருந்த மந்திரவாதி நரிகளை நீர் பார்த்திருந்தால்....அந்த நரிகளிடமிருந்து நான் தப்பியதுதான் பெரிய காரியம்!"

"அந்த மந்திரவாதிகளை எனக்கும் தெரியும். மந்திரவாதிகள் மட்டுந்தான் வந்திருந்தார்களா? இன்னும் யாராவது வந்திருந்தார்களா?"

"சிறிய மீன் ஒன்று வந்திருந்தது. புலியை விழுங்க ஆசைப்படும் அதிசயமான மீன் அது!"

"ஆகா! சொல்! சொல்! யார் யார் வந்திருந்தார்கள், என்னென்ன நடந்தது, விவரமாகச் சொல்!"

"நீர் எதற்காக இந்த வேஷம் தரித்தீர்? சாயங்காலம் எங்கே போயிருந்தீர்? போயிருந்த இடத்தில் என்ன நடந்தது? — அதையெல்லாம் சொன்னால் இங்கே நடந்ததை நான் சொல்கிறேன்!"

"நான் சொல்வதற்கு அதிகமாக ஒன்றுமில்லை. இன்று முன்னிரவில் கொள்ளிடக் கரையில் காளாமுகர் மகாசங்கம் கூடும் என்று தெரிந்தது. அங்கே என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காகத்தான் இந்த வேஷம் போட்டுக் கொண்டு போனேன். பார்த்துவிட்டுக் கொள்ளிடக்கரைத் தோணித் துறையில் உன்னை வந்து சந்திக்கலாம் என்று எண்ணினேன். மகாசங்கம் கூடிற்று. பெரிய பழுவேட்டரையர் வந்திருந்தார். காளாமுகர்களின் பெரிய குருவும் வந்திருந்தார். ஆனால் முக்கியமாக யார் வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களோ, அவர் வரவேயில்லை!"

"இளவரசர் மதுராந்தகரைத்தானே எதிர்பார்த்தார்கள்?"

"ஆம்; அது எப்படி உனக்குத் தெரிந்தது?"

"மதுராந்தகர் தஞ்சைச் சிம்மாசனத்தில் ஏறினால் இராஜ்ய பாரம் அழகாய்த்தான் நடைபெறும்!"

"ஏன் அவ்விதம் சொல்கிறாய்?"

"ஒரு முரட்டுக் குதிரையை அடக்கி ஆள அவரால் முடியவில்லையே? பழுவேட்டரையர் போன்ற சிற்றரசர்களையும், கலகமூட்டும் காளாமுக சைவர்களையும், சண்டைக்கார வீர வைஷ்ணவர்களையும் அவரால் எப்படி அடக்கி ஆள முடியும்?"

ஆழ்வார்க்கடியான் நகைத்துவிட்டு, "நீ வரும் வழியில் மதுராந்தகரைப் பார்த்தாயா? அவருக்கு என்ன நேர்ந்தது, தெரியுமா?" என்று கேட்டான்.

வந்தியத்தேவன் தான் மதுராந்தகரைத் தொடர்ந்து வந்ததையும், திடீரென்று நீவர்த்தியைக் கண்டு அவருடைய குதிரை தெறிகெட்டு ஓடியதையும், தான் அவரைச் சிறிது தூரம் தேடிப் போனதையும், கடைசியில் களத்து மேட்டில் குதிரையை மட்டும் பார்த்ததையும் கூறினான்.

"ஐயோ! பாவம்! குதிரை அவரை எங்கே தள்ளிற்றோ, என்னமோ? அவருடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்தாலும் நேர்ந்திருக்கலாம். அதனால் தான் அவர் உங்கள் மகாசங்கத்துக்கு வரவில்லை. நாம் மறுபடியும் போய் அவரைத் தேடிப் பார்க்கலாமா?"

"அழகுதான்! அதைப் பற்றி நமக்கு என்ன? நம்முடைய வேலையை நாம் பார்க்கலாம் வா! புறப்படு உடனே! பொழுது விடிவதற்குள் நாம் கொள்ளிட நதியின் தோணித் துறையில் இருக்க வேண்டும்."

"மதுராந்தகர் வாய்க்காலிலோ, வயல் வரப்பிலோ விழுந்து செத்துக் கிடந்தாரானால்? .... அப்போதுகூட நமக்கு என்ன கவலை என்று சொல்வீரா?"

"அப்படியெல்லாம் நேர்ந்திராது. அநிருத்தர் அதற்கு முன்னாக்கிரதையாக ஏற்பாடு செய்திருப்பார்."

"முதன்மந்திரி அநிருத்தரா? அவருக்கு என்ன இதைப்பற்றித் தெரியும்?"

"ஆகா! அது என்ன அப்படிக் கேட்கிறாய்? அன்பில் அநிருத்தருக்குத் தெரியாமல் இந்த ராஜ்யத்தில் எந்த இடத்திலும் எதுவுமே நடக்க முடியாது."

"ஓகோ! கடம்பூர் மாளிகையில் நடந்த சதிக் கூட்டத்தைப் பற்றிய விஷயமும் அவருக்குத் தெரியுமா?"

"ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்திக் கொள். வீர நாராயணபுரத்துத் திரு

விழாவின் போது பழுவூர் ராணியின் பல்லக்குப் போனதை நாம் இருவர் ஒரு மரத்தடியில் நின்று பார்த்தோம் அல்லவா ?''

''ஆம்! பல்லக்கின் திரை விலகியதும் நீ அடைந்த பரபரப்பு இன்னும் என் ஞாபகத்திலிருக்கிறது. பழுவூர் ராணியிடம் ஒரு ஓலை கொடுக்க முடியுமா என்று நீ என்னைக் கேட்டாய்!''

''நீ அதற்குச் 'சீச்சீ! அது என்ன வேலை?' என்றாய். நான் ஏதோ காதல் ஓலை கொடுக்க விரும்பியதாகவே நீ எண்ணினாய். சதிகாரர்களின் பேச்சை நம்பி மோசம் போக வேண்டாம் என்று மதுராந்தகருக்கு எச்சரிக்கை செய்யவே நான் விரும்பினேன்; முதன் மந்திரியின் கட்டளைப்படி !''

''பல்லக்கில் இருந்தது மதுராந்தகர் என்று உனக்குத் தெரியுமா?''

''முதலில் சந்தேகித்தேன். திரை விலகியதும் அந்த இரகசியம் தெரிந்தது. நீ நல்ல அழுத்தக்காரன். நான் எவ்வளவோ பிரயத்தனம் செய்தும், நீ பல்லக்கில் இருந்தது பழுவூர் ராணி அல்ல மதுராந்தகர் என்று சொல்ல மறுத்து விட்டாய் அல்லவா ?''

''நீ மாத்திரம் அழுத்தக்காரன் இல்லையா? இன்று சாயங்காலம் நீ எங்கே போகப் போகிறாய் என்றுகூடச் சொல்ல மறுத்து விட்டாயே?''

''சொன்னால் நீ அதிலும் தலையிட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்திருப்பாய்! இப்போதே இவ்வளவு சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டாய், பார் ! இனிமேலாவது....''

''காளாமுகர் கூட்டத்தைப் பற்றியும் மதுராந்தகர் அங்கே போக உத்தேசித்திருப்பது பற்றியும் முதன்மந்திரிக்குத் தெரியுமா ?''

''தெரியாமலா என்னை அனுப்பினார்? அதே சமயத்தில் மதுராந்தகர் அங்கே போய்ச் சேராதிருப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார். யாரோ இவர்த்தியைத் தூக்கிப் பிடித்தான் என்று சொன்னாயே? அவனும் அநிருத்தரின் ஆளாகத்தான் இருந்திருப்பான். வேண்டுமென்றே குதிரையை மிரட்டித் தெறிகெட்டு ஓடும்படி செய்திருப்பான். தரையில் விழுந்த இளவரசரை யாராவது எடுத்துக் காப்பாற்றியிருப்பார்கள்.

''இத்தனை நேரம் அநேகமாக அவர் ரதத்திலோ, பல்லக்கிலோ ஏறித் தஞ்சையை நோக்கிப் போய்க் கொண்டிருப்பார். வா! நாமும் நம் வழியே போகலாம்.''

''வைஷ்ணவரே ! நான் வர முடியாது.''

''இது என்ன? நீ ஒப்புக் கொண்ட காரியம் என்ன ஆயிற்று? காஞ்சியிலிருந்து ஆதித்த கரிகாலர் புறப்பட்டு விட்டதாகக் கேள்விப்படுகிறேன். நாம் உடனே வாயு வேக மனோ வேகமாகப் போனால்தான்.....''

''ஆதித்த கரிகாலரிடம் கொடுக்க வேண்டிய ஓலையை நீரே கொடுத்துவிடலாமே? அவர் மதுராந்தகரைப் போல் ஸ்திரீ வேஷத்திலும் வரமாட்டார்; இரவில் ஒளிந்தும் பிரயாணம் செய்ய மாட்டார்.....''

''நீ என்ன செய்யப் போகிறாய்?''

''உண்மையில் நான் மதுராந்தகரைப் பின்தொடர்ந்து இன்று சாயங்காலம் புறப்படவில்லை. வேறொருவரைத் தொடர்ந்து போக ஆரம்பித்ததில் மதுராந்தகரை வழியில் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது.''

''நான் ஒரு ஜோஸியம் சொல்லுகிறேன். நீ தொடர்ந்து போக ஆரம்பித்தது ஒரு பெண்மணியாக இருக்கும்.''

''நீர் பொல்லாத வைஷ்ணவர்! ஒரு நாள் உம்முடைய மண்டையை உடைத்து விட்டு மறு காரியம் பார்க்கப் போகிறேன்.''

''அது உன்னால் முடியாத காரியம். ஏற்கனவே என் மண்டையை ஒரு காளாமுகனுக்கு அடகு வைத்திருக்கிறேன். அது போனால் போகட்டும். நீ குடந்தையிலிருந்து யாரைத் தொடர்ந்து புறப்பட்டாய்? அந்தப் பெண் யார்?''

''கொடும்பாளூர் இளவரசி குடந்தை சோதிடர் வீட்டுக்கு வந்திருந்தாள். பல்லக்கில் ஏறிக் கொண்டு தனியாகப் புறப்பட்டுப் போனாள். உண்மையில் அந்தச் சித்தப் பிரமை கொண்ட பெண்ணைத் தொடர்ந்து நான் கிளம்பவில்லை. அவளுடைய பல்லக்கு நான் போக வேண்டிய பாதையில் கொஞ்ச தூரம் போயிற்று. திடீரென்று அந்தப் பல்லக்கைச் சில மனிதர்கள் வந்து தாக்கினார்கள். கூடப்போன தாதிப் பெண்ணை மரத்தில் கட்டிப் போட்டு விட்டு வானதியை மட்டும் கொண்டு போனார்கள். வைஷ்ணவரே! அந்தப் பெண்ணின் கதி என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ளாமல் உம்மோடு வர எனக்கு இஷ்டமில்லை.''

''அந்தப் பெண்ணைப் பற்றி உனக்கு என்ன அவ்வளவு கவலை?''

''அது என்ன அப்படிச் சொல்கிறீர்? ஈழத்துப்பட்ட மகாவீரர் சிறிய வேளாரின் புதல்வியல்லவா ? பழையாறை இளைய பிராட்டியின் மனத்துக்குகந்த தோழியல்லவா? இன்னும், பொன்னியின் செல்வருக்கு வானதி தேவியை

மணம் செய்விக்கப் போவதாகவும் ஒரு பிரஸ்தாபம் இருந்ததல்லவா?''

''அப்பனே! பொன்னியின் செல்வர் தான் கடலில் முழுகி இறந்துவிட்டாரே? அவருடைய திருமணத்தைப் பற்றி இப்போது என்ன கவலை?''

''அவர் இறந்து விட்டார் என்பது என்ன நிச்சயம்! உனக்குத்தானே ?''

'' அப்படியானால் அவர் உயிரோடு இருக்கலாம் என்று நீ நினைக்கிறாயா?''

''வைஷ்ணவரே ! என்னுடைய வாயைப் பிடுங்கி ஏதேனும் இரகசியத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்பது உங்கள் உத்தேசமாயிருந்தால், அதை மறந்து விடும்!''

''சரி! சரி! நீ பெரிய அழுத்தக்காரன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் வானதி தேவியைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். இளையபிராட்டிக்கு அவள் பேரில் உயிர் என்பதுதான் உனக்கு நன்றாகத் தெரியுமே?''

''அதனாலேதான் நானும் கவலைப்படுகிறேன். வானதி தேவிக்கு இந்த ஆபத்து வந்தது இளையபிராட்டிக்குத் தெரியாமல் இருக்கலாம் அல்லவா ?''

''இன்றைக்குத் தெரியாவிட்டால் நாளைக்குத் தெரிந்து விடுகிறது.''

''நாளைக்குத் தெரிந்து என்ன பயன்? காளாமுகர்கள் அந்தக் கன்னிப் பெண்ணை இன்றிரவு பலி கொடுத்து விட்டால்....?''

''வானதியைக் காளாமுகர்கள் தாக்கிப் பிடித்துக் கொண்டு போனதாகவா சொல்லுகிறாய்?''

''அப்படித்தான் எனக்குத் தோன்றியது. வானதியின் தோழியும் அப்படித் தான் என்னிடம் கூறினாள்.''

''அது உண்மையானால், நீ கொஞ்சம் கூடக் கவலைப்பட வேண்டியதில்லை. கொடும்பாளூர் வம்சத்தார் காளாமுகத்தைச் சேர்ந்தவர்கள். வானதி தேவி கொடும்பாளூர்ப் பெண் என்று தெரிந்தால், அவளுக்குக் காளாமுகர்கள் இராஜோபசாரம் செய்வார்கள்!''

''ஓகோ! இது எனக்குத் தெரியாமல் போயிற்றே ?''

''ஆகையினால்தான் காளாமுகர்கள் மதுராந்தகத் தேவருக்கு எதிராக இருக்கிறார்கள்......''

''இந்த மண்டையோட்டுச் சாமியார்கள் எதிராக இருந்தால், என்ன வந்து விடப் போகிறது?''

''உனக்குத் தெரியாது. இந்த நாட்டில் மிகப் பெரிய குடும்பங்கள் காளாமுகத்தைச் சேர்ந்தவை. சைன்யத்திலும் அத்தகைய பலர் இருக்கிறார்கள். அதனாலேயே பழுவேட்டரையர் இன்றைக்கு இந்த ஏற்பாடு செய்திருந்தார். மதுராந்தகருக்குக் காளாமுகர்களின் ஆதரவைத் தேட முயன்றார். அது ஒரு குதிரை செய்த கோளாறினால் பலிக்காமற் போயிற்று. நீ புறப்படு, போகலாம். வருகிறாயா ? அல்லது நான் கிளம்பட்டுமா ?''

வந்தியத்தேவன் வேண்டா வெறுப்பாக எழுந்து குதிரையையும் கையில் பிடித்துக் கொண்டான். அடர்ந்த காடுகளின் ஊடே ஆள் நுழையக்கூடிய வழியைக் கண்டுபிடித்து அவர்கள் வெளியே வந்தார்கள்.

'' அதோ பார் !'' என்று ஆழ்வார்க்கடியான் வானத்தைச் சுட்டிக் காட்டினான்.

முன் எப்போதையும்விடத் தூமகேதுவின் வால் நீண்டு, வானத்தின் ஒரு பாதி முழுவதிலும் வியாபித்திருப்பதை வந்தியத்தேவன் பார்த்தான்.

குளிர்ந்த வாடைக் காற்று வீசிற்று. வந்தியத் தேவனுடைய உடம்பு சிலிர்த்தது.

தூரத்தில் கிராமத்து நாய் ஒன்று தீனமான சோகக் குரலில் அழுதது.

முப்பத்தெட்டாம் அத்தியாயம்

வானதிக்கு நேர்ந்தது

சூரியன் மறைந்து நாலு திக்கிலும் இருள் சூழ்ந்து வந்த நேரத்தில் வானதி குடந்தை—திருவாரூர்ச் சாலையில் பல்லக்கில் போய்க் கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் குழம்பியிருந்தது. நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குப் போக வேண்டும் என்றும், அங்கே காய்ச்சல் வந்து படுத்திருக்கும் இளவரசருக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்றும் அவள் மனம் துடித்தது. ஆனால் அது எப்படிச் சாத்தியமாகும்? புத்தபிக்ஷுக்களின் விஹாரத்துக்குள் தன்னை அனுமதிப்பார்களா, அங்கே இளவரசரைத் தான் பார்க்க இயலுமா, பார்த்தாலும் பணிவிடை செய்ய முடியுமா,—என்பதையெல்லாம் எண்ணியபோது ஒரே மலைப்பாயிருந்தது. நாகைப்பட்டினத்துக்குத் தனிமையாகப் பிரயாணம் செய்யவேண்டியிருப்பதை எண்ணியபோது அதைரியம் உண்

டாயிற்று. அதைரியத்தைப் போக்கி மனத்தில் உறுதி உண்டு பண்ணிக் கொள்ள முயன்றாள். உலகில் பெரிய காரியம் எதுதான் எளிதில் சாத்திய மாகும்? ஒவ்வொருவர் எடுத்த காரியத்தைச் சாதிப்பதற்கு எவ்வளவு கஷ்டப் படுகிறார்கள்? அந்த ஓடக்காரப் பெண் கடலில் தனியாகப் படகு செலுத்திக் கொண்டு போக எவ்வளவு நெஞ்சத் துணிவு உள்ளவளா யிருக்க வேண்டும்? புயலிலும் மழையிலும் மலை போன்ற அலைகளுக்கு மத்தியில் படகு விட்டுக் கொண்டு போய் இளவரசரைக் காப்பாற்றியதற்கு எவ்வளவு நெஞ்சுத் துணிவு அவளுக்கு இருக்க வேண்டும்? தான் இந்தச் சிறிய பிரயாணத்தைக் குறித்துப் பயப்படுவது எவ்வளவு பேதைமை? சூடாமணி விஹாரத்துக்குள் உடனே போக முடியாவிட்டால் பாதகமில்லை. அக்கம் பக்கத்தில் இருந்து இளவரசரைப் பற்றிய செய்தி தெரிந்து கொண்டிருந்தாலும் போதும். இளவரசரைப் பார்க்கமுடியாவிட்டாலும் பாதகமில்லை; அந்த ஓடக்காரப் பெண்ணையாவது பார்க்க முடிந்தால் போதும். ஆம், அதுதான் சரி! அவளை எப்படியாவது தெரிந்து கொண்டால், அவள் மூலமாக இளவரசரைப் பார்க்க முடிந்தாலும் முடியலாம். அவரிடம் தனக்குள்ள அன்பு ஏதோ ஒரு பிரயோஜனத்தை எதிர்பார்த்ததல்ல என்பதை எப்படியாவது நிரூபித்துக் காட்டிவிட வேண்டும். அதற்குப் பிறகு இந்த உயிரை விட்டாலும் விட்டுவிடலாம்; அல்லது புத்த சங்கத்தில் சேர்ந்து பிக்ஷுணி ஆனாலும் ஆகிவிடலாம்.....

மறு நாள் எந்த நேரத்துக்கு நாகைப் பட்டினம் போய்ச் சேரலாம் என்று பல்லக்குச் சுமப்பவர்களை விசாரிப்பதற்காக வானதி பல்லக்கின் திரையை விலக்கி வெளியில் பார்த்தாள். சாலை ஓரத்தில் ஓங்கி வளர்ந்திருந்த மரங்களுக்குப் பின்னால் சில உருவங்கள் மறைந்து நிற்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. இன்னும் சிறிது கவனமாக உற்றுப் பார்த்தாள். மறைந்து நின்றவர்கள் வீர சைவ காளாமுகர்கள் என்று தெரிந்தது. இதைக் குறித்து வானதிக்குச் சிறிதும் கவலை உண்டாகவில்லை. அவள் கொடும்பாளூர் அரண்மனையில் வளர்ந்த காலத்தில் அடிக்கடி காளாமுகர்கள் அங்கே வருவதுண்டு. அவளுடைய பெரிய தந்தையிடம் பேசித் தங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுப் போவதுண்டு. காளாமுகர்களின் பெரிய குருவே ஒருசமயம் கொடும்பாளூர் வந்திருக்கிறார். அவருக்கு உபசாரங்கள் — பூஜைகள் எல்லாம் நடந்தன. அவளுடைய பெரிய தகப்பனார் பூதிவிக்கிரம கேசரி பல திருக் கோயில்களில் காளாமுகர்களுக்கு அன்னம் படைப்பதற்கென்றே நிவந்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையால் காளாமுகர்கள் தனக்குக் கெடுதல் ஒன்றும் செய்ய மாட்டார்கள். ஒருவேளை உதவி செய்தாலும் செய்வார்கள். இன்றைக்கு அவர்களுடைய மகாசங்கம் கூடுகிறதென்பதும் வானதிக்குத் தெரிந்திருந்தது. ஆகையால் அன்று பழையாறையிலிருந்து குடந்தைக்கு வந்த போதுகூடச் சாலையில் காளாமுகர் கூட்டங்களை அவள் பார்க்கும்படி நேர்ந்தது. ஆனாலும், இவர்கள் எதற்காக மரத்தின் பின்னால் ஒளிந்து நிற்கிறார்கள்? தன்னை ஒரு வேளை வேறு யாராவது என்று அவர்கள் எண்ணிக் கொண்டு ஏதாவது தீங்கு செய்யலாம் அல்லவா?....

இப்படி அவள் எண்ணிக் கொண்டிருந்த போதே, மறைந்திருந்தவர்கள் திடு திடு வென்று ஓடி வந்தார்கள். பல்லக்கைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்போதும் அவள் பயப்படவில்லை. தான் யார் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க எண்ணினாள். எப்படி அதைச் சொல்வது என்று யோசிப்பதற்குள், பல்லக்குடன் வந்த பணிப் பெண்ணை இரண்டு பேர் பிடித்து மரத்தோடு கட்டுவதைப் பார்த்தாள். உடனே அவளை அறியாமல் பீதியுடன் கூடிய கூச்சல் ஒன்று அவள் வாயிலிருந்து வந்தது. பல்லக்கைச் சூழ்ந்திருந்த காளாமுகர்களில் ஒருவன் ஒரு திரிசூலத்தை எடுத்து அவள் முகத்துக்கு நேரே காட்டி, "பெண்ணே, கூச்சல் போடாதே! கூச்சல் போடாதிருந்தால் உன்னை ஒன்றும் செய்ய மாட்டோம். இல்லாவிட்டால், இந்தத் திரிசூலத்தினால் குத்திக் கொன்று விடுவோம்!" என்றான்.

வானதிக்குச் சிறிது தைரியம் வந்தது. கம்பீரமாகப் பேச எண்ணிக் கொண்டு, "நான் யார் தெரியுமா? கொடும்பாளூர் வேளார் மகள். என்னைத் தொட்டீர்களானால் நீங்கள் நிர்மூலமாவீர்கள்" என்றாள். அவளுடைய மனத்தில் தைரியம் இருந்ததே தவிர, பேசும் போது குரல் நடுங்கிற்று. அதைக் கேட்ட காளாமுகன், "எல்லாம் எங்களுக்குத் தெரியும். தெரிந்துதான் உனக்காகக் காத்திருந்தோம். சற்று நேரம் சத்தமிடாமலிரு! இல்லாவிட்டால் ...." என்று மறுபடியும் திரிசூலத்தை எடுத்து நீட்டினான்.

அதே சமயத்தில் சாட்டையினால் 'சுளீர்' 'சுளீர்' என்று அடிக்கும் சத்த

மும், 'ஐயோ' 'ஐயோ' என்ற குரலும் கேட்டது. அப்படி அடிபட்டு அலறிய வர்கள் சிவிகை தூக்குவோர் என்பதை வானதி அறிந்தாள். அவர்களைச் சில காளாமுகர்கள் சாட்டையினால் அடித்திருக்க வேண்டும்!

அதைப் பற்றி வானதி ஆத்திரப் பட்டுப் பல்லக்கிலிருந்து கீழே இறங்கி விட எண்ணினாள். அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஏனெனில், சிவிகை தூக்கிகள் பல்லக்கைச் சுமந்து கொண்டு ஓடத் தொடங்கினார்கள். காளாமுகர் களும் பல்லக்கைச் சூழ்ந்த வண்ணம் ஓடி வந்தார்கள். ஓடும்போது அவர்கள் பயங்கரமாகக் கூச்சல் போட்டுக் கொண்டு ஓடினார்கள். ஆகையால், வானதி தான் கூச்சல் போடுவதில் பய னில்லை என்பதை உணர்ந்தாள். ஓடும் பல்லக்கிலிருந்து கீழே குதிப்பதும் இய லாத காரியம். அப்படிக் குதித்தாலும், இந்தப் பயங்கர மனிதர்களுக்கு மத்தி யில்தானே குதிக்க வேண்டும்? இவர்கள் எங்கேதான் தன்னைக் கொண்டு போகி றார்கள், எதற்காகக் கொண்டு போகி றார்கள் பார்க்கலாம் என்ற எண்ண மும் இடை இடையே தோன்றியது.

சுமார் அரை நாழிகை நேரம் ஓடிய பிறகு, மரங்களின் மறைவிலிருந்த ஒரு பழைய துர்க்கை கோயிலுக்கு அருகில் வந்து நின்றார்கள். இதற்குள் நன்றாக இருள் சூழ்ந்து விட்டது. ஒருவன் கோயிலுக்குள் சென்று அங்கே எரிந்து கொண்டிருந்த தீபத்தை எடுத்துக் கொண்டு வந்து வானதியின் முகத்துக்கு எதிரே காட்டினான். காளாமுகர்களில் ஒருவன் வானதியை உற்றுப் பார்த்து, ''பெண்ணே! நாங்கள் கேட்கும் விவரத் தைச் சொல்லி விடு! உன்னை நாங்கள் ஒன்றும் செய்யாமல் விட்டு விடுகிறோம். அல்லது நீ எங்கே போக விரும்புகி றாயோ, அங்கே கொண்டு போய்ப் பத்தி ரமாய்ச் சேர்த்து விடுகிறோம்'' என்றான்.

வானதியின் மனத்தில் இதுவரை தோன்றாத சந்தேகம் உதித்தது. ''எனக்கு என்ன விவரம் தெரியும்? என்னை என்ன கேட்கப் போகிறீர்கள்?'' என்றாள்.

''பெண்ணே! நீ யாரோ ஒருவரை அந்தரங்கமாகச் சந்திப்பதற்கே இப் படித் தனியாகப் பிரயாணம் தொடங் கினாய் அல்லவா? அவர் யார்? யாரைச் சந்திப்பதற்காகப் புறப்பட்டாய்?''

வானதியின் சந்தேகம் உறுதிப் பட்டது. ஒரு கண நேரத்தில் அவ ளுடைய உள்ளத்தில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. ஒரு சிறிய சத்தத்தைக் கேட்டாலும் பயந்து மிரண்டு கொண்டிருந்த பெண் மான் உலகில் எதற்கும் அஞ்சாத பெண் சிங்கமாக மாறியது.

''நான் யாரைச் சந்திக்கப் புறப்பட் டால் உங்களுக்கென்ன? நீங்கள் யார் அதைப் பற்றிக் கேட்பதற்கு? சொல்ல முடியாது!'' என்றாள் வானதி.

காளாமுகன் சிரித்தான்.

''அதை நீ சொல்ல வேண்டாம். எங் களுக்கே தெரியும். இளவரசன் அருள் மொழி வர்மனைச் சந்திப்பதற்குத்தான் நீ புறப்பட்டாய். அவன் எங்கே ஒளிந் திருக்கிறான் என்று சொல்லி விடு. உன்னை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடு கிறோம்'' என்றான்.

''நீங்கள் என்ன வேணுமானாலும் செய்து கொள்ளுங்கள். என்னிடமிருந்து எந்த விவரமும் நீங்கள் தெரிந்து கொள்ள முடியாது'' என்று வானதி அழுத்தம் திருத்தமாய்க் கூறினாள்.

''உன்னை என்ன வேணுமானாலும் செய்து கொள்ளலாம் என்றா சொல் கிறாய்? நாங்கள் செய்யப் போவது என்னவென்று அறிந்தால் இப்படிச் சொல்லத் துணிய மாட்டாய்!''

''என்ன செய்யப் போகிறீர்கள்? அதையும் சொல்லிப் பார்த்து விடுங்கள்!''

''முதலில் உன் அழகான பூப்போன்ற கரங்களில் ஒன்றை இந்தத் தீவர்த்திப் பிழம்பில் வைத்துக் கொளுத்துவோம். பிறகு இன்னொரு கையையும் கொளுத்து வோம். பின்னர் உன் கரிய கூந்தலில் தீவர்த்தியைக் காட்டி எரிப்போம்....''

''நன்றாகச் செய்து கொள்ளுங்கள். இதோ என் கை! தீவர்த்தியை அருகில் கொண்டுவாருங்கள்'' என்றாள் வானதி.

இராஜ்யத்தில் நடந்து வந்த சூழ்ச்சிகள், சதிகள் எல்லாம் ஓரளவு வானதிக்குத் தெரிந்துதானிருந்தது. இந் தத் துஷ்டர்கள் சதிகாரர்களின் ஆட் களாயிருக்க வேண்டும். இளவரசர் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கப் பார்க்கிறார்கள். அவருக்குக் கெடுதி செய்யும் நோக்கத்துடனேதான் இருக்க வேண்டும். இளவரசருக்காக, அவ ருடைய பாதுகாப்புக்காக, தான் இத்த கைய கொடூரங்களை அநுபவிக்கும்படி நேர்ந்தால், அதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் என்ன இருக்கிறது? — இவ் வாறு எண்ணினாள் கொடும்பாளூர் இள வரசி வானதி. அந்த எண்ணந்தான்

அவளுக்கு அத்தகைய மனோதைரியத்தை அளித்தது.

''பெண்ணே! யோசித்துச் சொல்! வீண் பிடிவாதம் வேண்டாம். பிறகு வருத்தப்படுவாய்! உன் ஆயுள் உள்ள வரையில் கண் தெரியாத குருடியாய் இருப்பாய்!'' என்றான் காளாமுகன்.

''என்னை நீங்கள் அணு அணுவாகக் கொளுத்துங்கள்; என் சதையைத் துண்டு துண்டாக வெட்டுங்கள். ஆனாலும் என்னிடமிருந்து ஒரு விவரமும் அறிய மாட்டீர்கள்!'' என்றாள்.

''அப்படியானால் எங்களுடைய காரியத்தைப் பார்க்க வேண்டியதுதான்! சீடா! கொண்டு வா, அந்தத் தீவர்த்தியை இங்கே!'' என்றான் காளாமுகன். அச்சமயம் வானதியின் கவனம் சற்றுத் தூரத்தில் சென்றது. யானைகள், குதிரைகள், பல்லக்குகள், காலாள் வீரர்கள் முதலியவர்கள் அடங்கிய நீண்ட ஊர்வலம் ஒன்று அவர்கள் இருந்த இடத்தை நெருங்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்தாள். தெய்வத்தின் அருளால் தனக்கு ஏதோ எதிர்பாராத உதவி வருகிறது என்று எண்ணினாள்.

''ஜாக்கிரதை! அதோ பாருங்கள்!'' என்று சுட்டிக் காட்டினாள்.

காளாமுகன் மறுபடியும் சிரித்தான்.

''வருகிறது யார் என்று உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''முதன் மந்திரி அநிருத்தர் மாதிரி இருக்கிறது. நான் இப்போது கூச்சல் போட்டால் அவர்களுக்குக் காது கேட்கும். ஜாக்கிரதை! என்னை விட்டு விட்டு ஓடிப் போய் விடுங்கள்! இல்லாவிட்டால்....'' என்றாள் வானதி.

''ஆம், பெண்ணே! வருகிறவர் முதன் மந்திரி அன்பில் அநிருத்தர்தான். அவருடைய கட்டளையின் பேரில்தான் உன்னை நாங்கள் பிடித்துக்கொண்டு வந்தோம்'' என்றான் காளாமுகன்.

இப்போது வானதியை மறுபடியும் திகில் பற்றிக் கொண்டது. அவளை அறியாமல் பீதி நிறைந்த கூச்சல் ஒன்று அவள் தொண்டையிலிருந்து வந்தது. அதை அடக்கிக் கொள்ளுவதற்காகத் தன்னுடைய வாயைத் தானே பொத்திக் கொள்ள முயன்றாள். (தொடரும்)

வெற்றியின் கண்ணீர்!

1961ம் வருஷம் சந்தனா பிரெஞ்சு டென்னிஸ் போட்டியில் ஆடிக் கொண்டிருந்தார். கடைசி வெற்றி 'ஷாட்' அடித்ததும் அவர் கையை விட்டு மட்டை நழுவியது. கண்கள் கண்ணீரால் குளமாயின. எதிர்த் தரப்பில் இருந்த பெட்ராங்கிலி தம் மட்டையைப் போட்டுவிட்டு ஓடி வந்து சந்தனாவைக் கட்டி அணைத்துக் கொண்டார்.

'ஜெயித்துவிட்டு யாராவது அழுவார்களா?' என்று கேட்பது போல் தட்டிக் கொடுத்தார்.

சந்தனா ஏன் அழுதார்? பழைய ஞாபகங்கள்தான் காரணமாக இருக்க வேண்டும்.

மாட்ரிட் தெருக்களில் நான்கு சிறுவர்கள் அல்லாடிக் கொண்டிருந்தார்கள். அடுத்த வேளை சாப்பாட்டுக்கு வழியில்லை.

"எனக்கு ஒரு யோசனை தோணுது. மாட்ரிட் டென்னிஸ் கிளப்பிலே பந்து பொறுக்கிப் போடலாம், காசு கிடைக்கும்!" என்றான் சந்தனா.

சொல்லைச் செயலாக்க முற்பட்டான். மாட்ரிட் டென்னிஸ் கிளப்பில் எல்லா எடுபிடி வேலைகளையும் மனம் கோணாமல் செய்தான். பந்து பொறுக்கிப் போட்டுப் போட்டு டென்னிஸ் ஆட்டத்தில் அவனுக்கு ருசி பிறந்தது: திறமை வளர்ந்தது.

1961ல் பிரெஞ்சு சாம்பியனான சந்தனா பின்னால் 1966ல் ரால்ட்ஸனைத் தோல்வியடையச் செய்து விம்பிள்டன் சாம்பியனாகவும் ஆகிவிட்டார்.

— குண்டுமணி.



விளையாட்டுக்குள் ஒரு விளையாட்டு

இவரிடமிருப்பது பிரஸ்டிஜ் Prestige இவரிடமிருப்பது ப்ரீத் PREETT



இவர் இருப்பது இந்தியாவில்



இவர் இருப்பது வெளிநாட்டில்

இருவரும் உபயோகிப்பது
ஒரே பிரஷர் குக்கர்தான்
இரண்டுமே டிடி.(பிரைவேட்) லிமிடெட் தயாரிப்புதான்
– பெயர் மட்டுமே வித்தியாசம்

இந்தியாவில் பிரஸ்டிஜ் என்றும், ஏற்றுமதிக்கு ப்ரீத் என்றும் தயாரிக்கப்படும் இரண்டு குக்கர்களும் எவ்வகையிலும் ஒன்றுதான். எட்டு லட்சத்திற்கும் அதிகமான குடும்பத் தலைவிகள் இவற்றை நாள்தோறும், ஆண்டுக்கணக்கில் பயன்படுத்துகிறார்கள்.

உங்கள் பிரஷர் குக்கர் பிரஸ்டிஜானாலும் சரி, ப்ரீத்தானாலும் சரி அவை பயன்படுத்தப் பத்திரமானது. ஆயுள்கால உத்தரவாதம் கொண்டது. நாடெங்கும் விற்பனைக்குப் பின்னரும் பராமரிப்புக்கு வசதியுள்ள பிரஷர் குக்கர் இது ஒன்றே.

சீக்கிரமாயும் சுலபமாயும் சமைக்க உதவுபவை, ப்ரீத் 'ஸ்டீம்-இட்', ஸ்கில்லெட், ஸாஸ்பான் பாத்திரங்கள்.

HTA-TTP-3691



டிடி. (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர் 16

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

25

"பிரார்த்தனை என்னத்திற்கு? ஆண்டவன் ஒருவன் இருந்தால் நம்முடைய விஷயம் அவனுக்குத் தெரியாதா? அவனுக்கு நாம் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? அவன் செய்ய வேண்டியதை நாம் அவனுக்குச் சொல்லிக் காட்ட வேண்டுமா?"

"இல்லை, ஆண்டவனுக்கு நாம் நினைவூட்ட வேண்டியதில்லை. அவன் வெகு தூரத்தில் இல்லை. நமக்குள்ளேயே இருக்கிறான். அவன் அநுமதியின்றி எதுவும் நடப்பதில்லை. நம்முடைய பிரார்த்தனை நம்முடைய உள்ளத்தைச் சுத்தப்படுத்துவதற்காகவே தான் அவசியமாகிறது. ஆண்டவனுடைய அருள் இன்றி நாம் ஒன்றுமே செய்து முடிக்க இயலாது என்பதைப் பிரார்த்தனையினால் நமக்கு நாம் நினைவூட்டிக் கொள்கிறோம்."

எந்த முயற்சியும் பிரார்த்தனையின்றிச் செய்தால் அது முயற்சியாகாது. ஆண்டவனுடைய அருள் கிட்டாமல், மனிதனுடைய எந்தப் பெருமுயற்சியும் ஒரு பயனும் பெறாது என்பதை நாம் உணர வேண்டும். இந்த அடக்கத்தைப் பெறுவதற்குப் பிரார்த்தனை செய்கிறோம். உள்ளத்தில் உள்ள அழுக்கைத் துடைப்பதற்காகவே இதைச் செய்ய வேண்டும். (ஹரிஜன் 8-6-35)

ராமன், ரஹிமான், அஹுரமஸ்தா, பகவான், கிருஷ்ணன், ஆங்கிலத்தில் GOD இவை அனைத்தும் சக்திகளுக்குள் பராசக்தியான சக்திக்கு, மனிதன் ஒரு பெயர் வைத்து அழைக்கும் முயற்சியாகும். அவ்வளவே.

குறையும் குற்றமும் நிறைந்த மனிதன் தன் குறையை நீக்கிக் கொள்ளச் சதா முயல்கிறான். குழந்தை நடக்கப் பார்ப்பதுபோல் நடந்தும் விழுந்தும் எழுந்தும் நம்முடைய அறிவைக் கொண்டு பராசக்தியை உணர்ந்து கொள்ளப் பார்க்கிறோம். அறிவுக்கு எட்டாத ஒரு பொருளை அறிவைக் கொண்டு எட்டப் பார்க்கிறோம். குழந்தை நடக்கக் கற்றுக் கொள்வதற்கும் இதற்கும் பேதம் இல்லை. இப்படிச் சொல்வதில் மிகை ஒன்றுமில்லை. மனிதன் வழங்கும் சொற்களில் ஈசன் அடங்குவானா? அடங்காமற் போனாலும் அடங்கியதாக வைத்துக் கொண்டு பேசுகிறோம். சொல்லினைக் கடந்த அவனுக்கு நாம் சொல்லி விளக்க வேண்டிய அவசியமில்லை. நமக்குத்தான் வேண்டும், ஒருவாறு அவனைக் குறிக்கும் சொற்கள். இதை ஒப்புக் கொண்டால் பிரார்த்தனைச் சொற்கள் என்னத்திற்கு என்று கேட்க மாட்டீர்கள். நம்முடைய குறைபட்ட அறிவைக் கொண்டு முற்றுப் பொருளை உணரப் பார்க்கிறோம். ஈசனாகிய பெரும் பொருள் கடலைப் போன்றது. நம்முடைய அறிவு ஒரு நீர்த் துளி. சமுத்திரத்தை உணர வேண்டுமானால் அதில் விழுந்து மூழ்கித் தீர்ந்து போனால்தான் காண்போம். இது நம்மால் செய்ய முடியுமா? ஆனபடியினால் எந்த முறையில் பிரார்த்தனை செய்தபோதிலும் நம்மை ஓரளவு சுத்தப் படுத்திக் கொண்டு பார்க்கிறோமே தவிர, உண்மையில் நாம் ஆண்டவன் தரிசனத்தை அடைவதில்லை என்று ஒரு காலத்தில் ப்ளவாட்ஸ்கி அம்மையார் சொன்னது உண்மை. நமக்குள் ஈசன் இருக்கிறான் என்பதை முற்றிலும் உணர்ந்து நிச்சய ஞானம் பெற்றால்தான் நம்முடைய பிரார்த்தனை பலன் பெறும். தனக்குள் ஈசன் இருப்பதை ஒப்புக் கொள்ளாதவன் பிரார்த்தனை செய்ய வேண்டியதே யில்லை. அதனால் ஆண்டவன் கோபித்துக் கொள்ள மாட்டான். நமக்குத்தான் நஷ்டம். இதை என் அநுபவத்தில் கண்டு நான் சொல்கிறேன்.

நான் மேலே சொன்னதை எல்லாம் ஒப்புக் கொண்டால் ஆண்டவனை எந்த வடிவத்தில் தியானித்தாலும் சரியே ஆகும் என்பது விளங்கும். ஒருவன் ஆண்டவனை ஆண் வடிவத்தில் தியானிக்கலாம். மற்றொருவன் தாய் வடிவம் தந்து வணங்கலாம். வேறு சிலர் அவனை வடிவமற்ற ஒரு சக்தியாகவே வைத்துக் கொண்டு வழிபடலாம். அவரவர்களுக்கு அவரவர்களின் பாவனை சரியானதே யாகும். தத்தம் பாவனா சக்தியைக் கடந்து அதற்கு அப்பாற்பட்ட வழி ஒன்றைத் தேடுவதில் பயனில்லை. அப்பாற்பட்டது அப்பாற்பட்டே நிற்கும். அனைத்துக்கும் மேலான சக்தி என்று ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டால் போதும். அனைத்திலும் பரந்து அனைத்தையும் தன்னுள் அடக்கி, மனிதனுடைய அறிவைக் கடந்து, உயிருக்கு உயிராகியும், சக்திக்குச் சக்தியாகவும் இருக்கும் பரம்பொருளை ஈசன் என்று பெயர் வைத்து வழிபடுகிறோம்.

(ஹரிஜன் 18-8-46)



கிண்டி ரேஸ் மைதானத்தில் பாருங்கள்! ஆண்களின் தலைகள்தானே அதிகமாகத் தெரிகின்றன....!



பெண்களால் முடியாது!

திரு எஸ். வைத்தியநாதன்
அகௌண்டெண்ட் ஜெனரல் ஆபீஸ்:

வம்பளக்காமல் பெண்களால் இருக்கவே முடியாது! அரட்டை அடிக்காத பெண்ணும் அரைக்கப்படாத சட்னியும் உண்டா? — இது அடியேன் உருவாக்கிய புதுமொழி.

உணவு, உறக்கம் கூட இல்லாமல் பெண்களால் இருக்க முடியும். இன்னொரு பெண்ணைச் சந்தித்து வம்பு பேசாமல் இருக்கவே முடியாது.

அதற்குக் காலம், இடம் என்று யாரும் தேடிக் கொண்டிருப்பது கிடையாது. ஏழை—பணக்காரி, எஜமானி — வேலைக்காரி, கிழவி—குமரி என்ற வித்தியாசமே இல்லை! வம்பு பேசுவதில் மட்டும் நம் பெண்மணிகள் தீவிர சோஷலிஸ்டுகள்!

கல்யாண வீடுகள், சபாக்கள், கோவில் திருவிழா எங்கேயானாலும் பெண்கள் கூட்டத்தில் கொடி கட்டிப் பறப்பது இந்த வம்புப் பேச்சுத்தானே!

வங்காள அரசியல் நெருக்கடி, கேரளாவின் கவலையான போக்கு, பட்ஜெட்டால் விலையேற்றம் இதெல்லாமா அந்த வம்புப் பேச்சில் அடிபடும்? புதிய பாணி நகை, புடவை டிசைன், சிநேகிதி வீட்டுத் திருமணம், திருநெல்வேலியில் நடைபெற்ற சம்பந்திச் சண்டை, அமெரிக்காவுக்குக் குடிபோன பக்கத்து வீட்டுப் பெண் பிரசவித்த கதை முதலியவைதான் அந்தக் கூட்டங்களில் இடம் பெறும் முக்கிய பிரச்னைகள்.

நாட்டில் எதற்கு வேண்டுமானாலும் பஞ்சம் வரும். ஆனால் பெண்களின் வம்புக்குப் பஞ்சமே கிடையாது. பெண்களுக்கு வம்பு ஒரு டானிக் போன்றது.

திரு எஸ். கிருஷ்ணமூர்த்தி, பி.இ.,
சீனியர் கமர்ஷியல் என்ஜினீயர், பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ்:

ஆண்களால் மாதக் கணக்கில்கூட மௌன விரதம் இருக்க முடியும். ஆனால், பெண்ணால் ஒரு நாள் கூட மௌன விரதத்தை அனுஷ்டிக்க இயலாது.

வம்புப் பேச்சில் ஈடுபட்டு விட்டால் பெண்களுக்குத் தூக்கம் இலேசில் வராது!

ஆண்பிள்ளைகள் வேலைக்குப் போக வேண்டியதுதான்; அவர்கள் தலை மறைந்ததும், 'வம்பர் மகாநாடு' தொடங்கிவிடும்.

பெண்கள் ஏன் வம்பில் ஈடுபடுகிறார்கள்? பிறர் வீட்டு ரகசியங்களை அறியும் ஆசைத் துடிப்பு அவர்களுக்கு மிகுதி.

ஆண்பிள்ளைகளில் கட்டுப்பாடான சிலர் தங்கள் மனைவியை இன்னொரு வீட்டுக்கு வம்பு பேசப் போகாதே எனத் தடை உத்தரவு விதித்திருப்பார்கள். ஆனாலும் புத்தகம் கேட்கும் சாக்கிலோ, குழந்தைக்குக் கைவைத்தியம் விசாரித்து வரும் சாக்கிலோ சென்று பெண்கள் வம்பு பேசிவிட்டே வருவார்கள்!

இந்த வம்புகளில் தற்பெருமையான பிரதாபங்களும், தங்கள் திறமையால் கணவன்மார்களைச் சரணாகதியடைய வைத்த நிகழ்ச்சிகளும் தலையாய இடம் பெற்றிருக்கும்!

டி. கோவிந்த சிங்,
டெலிபோன் ஆபரேட்டர்,
விஜயா — வாஹினி ஸ்டுடியோஸ்:

நேரில் சந்தித்தால்தான் வம்பு பேச முடியுமா என்ன?...

ரொம்ப அவசரமாக ஒருவருடன் டெலிபோன் தொடர்பு கொள்ள நினைப்போம். அரை மணி நேரம் 'எங்கேஜ்ட்' ஆகவே இருக்கும். ஒரு வழியாக 'லைன்' கிடைத்து விசாரித்தால், ''என் 'ஒய்ப்' தன் தோழியுடன் பேசிக் கொண்டிருந்தாள்'' என்று பதில் கிடைக்கும்.

சராசரி பெண்மணி ஒருத்தி ஸ்டுடியோக்களைச் சுற்றிப் பார்த்து வந்துவிட்டாள் அதைப் பற்றி ஆறு மாதங்களுக்குக் குறையாமல் சந்திப்போரிடம் பேசுவாள். நாளுக்கு நாள் அவள் கற்பனைத் திறனும் வளரும்.

ஆண்களால் முடியாது!

ஸ்ரீமதி பிரேமா கிருஷ்ணமூர்த்தி,
எம். எஸ்ஸி.

பொதுவாக ஆண்களிடம் சிக்கனம் இருக்கிறதில்லை. ஓர் உதாரணம் சொல்கிறேன்:

சின்னப் பையன் ஒருவனிடம் இரண்டு ரூபாய் கொடுங்கள்; அதேபோல் ஒரு சின்னப் பெண்ணிடம் இரண்டு ரூபாய் கொடுங்கள்.

அதன் முடிவு இப்படி இருக்கக் காணலாம்:

பையன் இரண்டு ரூபாய் பணத்துடன் தெருவுக்குள் சென்று மற்ற பையன்களோடு சேர்ந்து, சாக்லேட், பிஸ்கட், ஐஸ்கிரீம், பம்பரம் இப்படி ஏதேனும் வாங்கி விட்டு வீடு வந்து சேருவான்.

சிறுமியிடம் கொடுத்த பணத்தில் அதிக பட்சம் கால் அல்லது அரைக்கு மேல் செலவு ஆகியிராது. மீதியைப் பத்திரமாக வைத்திருப்பாள்! எனவே சிக்கனமாக இருப்பதென்பது ஆண்களால் முடியாது!

சின்ன வயது முதலே வெளி உலகில் அதிகமாகச் சஞ்சரிப்பதால் ஆண்களுக்குக் கையில் உள்ள பணத்தைச் செலவு செய்தே வழக்கமாகிவிடுகிறது.

பஸ்ஸில் போகும் சிறு தூரத்துக்குக் கூட டாக்ஸியில் போகலாமா என்பார்கள். ஒன்றரை ரூபாய் டிக்கட் வாங்கிச் செல்லக்கூடிய தியேட்டர் படக் காட்சிக்கு ஜம்மென்று முதல் வகுப்புக்குப் போக டிக்கட் வாங்குவார்கள். ஏனென்றால், அங்கே தன் ஆபீசில் தன்னைவிடக் கீழே வேலை பார்க்கும் ஒருவன் உயர் வகுப்பு டிக்கட் வாங்குவதைக் கண்டு, தன் அந்தஸ்து குறைந்து விடுமோ என்று பயந்து, காசைக் கணக்குப் பார்க்காமல் செலவு செய்வார்கள்.

ஆனால் பொதுவாகப் பெண்களுக்குச் சிக்கனம் பிடிக்கத்தான் தோன்றுகிறது. குடும்பப் பொறுப்பை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தான் காசின் அருமை தெரியும்!

குமாரி வி. சாந்தி தேவி, பி.ஏ.,
(பொருளாதாரம்) இரண்டாம் ஆண்டு,
எத்திராஜ் கல்லூரி

டிபன்பாக்ஸ் கையில் எடுத்துக் கொண்டு காரியாலயம் போகத் தயங்கும் ஆண்கள் இல்லையா? நண்பர்களுடன் குஷியாக ஹோட்டலுக்குச் சென்று டிபன் சாப்பிட்டுவிட்டு வருவதில்தான் எத்தனை ஆர்வம்!

மனைவி உப்புமா தயாரித்தால், 'இதென்ன வேண்டியிருக்கு?' என்று சலித்துக் கொள்வார்கள். ஆனால் ஹோட்டலில் அதே தயாரிப்பு 'பாத்' என்ற லேபிளுடன் டேபிளில் தட்டில் வைக்கப்படும்போது இந்திரசபையில் இருப்பதாக நினைத்துக் கொண்டு விடுவார்கள்!

திருமண வைபவங்களுக்குப் பரிசுப் பொருள் வாங்கித் தருவதில் குடும்பப் பொருளாதார நிலையையும் பார்க்க வேண்டியது அவசியம். பரிசு தரவேண்டியதைப் பெண்களுடன் கலந்து ஆலோசித்தால் பொருள் உபயோகமாகவும், கையிருப்புக்கு ஏற்ற வகையிலும் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் ஆண்கள் தாங்களாகவே வாங்கி வரும்போது வாங்கிய விலை வேறாகவும் வீட்டில் சொல்லும் விலை ஒன்றாகவும் இருக்கும். 'பிரஸ்டீஜ்' பாயிண்ட் அவர்களுக்குப் பரிசுப் பொருள்கள் விஷயத்தில் ரொம்ப அதிகம்.

ஐந்து ரூபாய் அதிகப்படியாகச் சர்க்காருக்கு வரி கட்டுவதாய் நினைத்துக் கொள்கிறேன் என்று சொல்லிக் கொண்டு வருஷத்தில் அறுபது ரூபாயைத் தப்பாமல் லாட்டரிச் சீட்டில் கரியாக்குவோர் உண்டு.

கிண்டி ரேஸ் மைதானத்தில் பாருங்கள்! ஆண்களின் தலைகள்தானே அதிகமாகத் தெரிகின்றன! தலையை அடகு வைத்தாவது சூதாட்டத்துக்குப் பணம் வாங்கிச் செலவு செய்கிறார்கள்.

பிளாக் மார்க்கெட்டில் திரைப் பட டிக்கட் வாங்க ஆண்கள் அஞ்சுவதே இல்லை.

இப்படி ஆயிரம் அடுக்கிக் கொண்டே போகலாம், சிக்கனம் தெரியாத ஆண்களின் தண்டச் செலவுகளைப் பற்றி!

ஸ்ரீமதி ஜெயமணி ரகுநாதன்,
ராயப்பேட்டை

''ஸார்!... நீங்கள் கொஞ்சம் நேரில் வந்து சொன்னால் காரியம் நடக்கும்...'' என யாரேனும் ஒருவர் வந்து பசப்புரை பேசுவார்.

''அப்படியா?... இதோ போகலாம்!'' என மறுமொழி கூறி, வந்தவருடன் டாக்ஸியிலோ ஆட்டோவிலோ ஏறிப் போய் விடுவார்கள். பல்லைக் காட்டிக் கொண்டு வந்தவர் பர்ஸைத் திறந்தாலும் வேண்டாம் என்று கூறி ஜம்பமாக இவர்களே பணம் எடுத்துக் கொடுப்பார்கள். இவரைப் பெரிய மனிதர் என்று கருதி வந்துவிட்டாரல்லவா அவர்? அதனால் இவர் ரொம்பப் பெரிய மனிதர் தோரணையிலேதான் நடந்து கொள்ள வேண்டும்!

ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. என் கணவருக்கு அறிமுகமான ஓர் அரசு ஊழியர் தமக்குப் பிரமோஷன் வந்ததைத் தெரிவிக்க ஒரு நாள் மாலை எழுபது ரூபாய் செலவு செய்துவிட்டார்! செலவினங்களில் 'தர்பார்' நடத்துவது ஆண்கள்தான். அவர்களால் அதைக் கட்டுப்படுத்தவே முடியாது...

தீபாவளியின் போது ஆண்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பட்டாஸ் வாங்குவதைக் கவனியுங்கள். கடைக்காரரிடம் கத்தை கத்தையாகப் பணம் தந்து கொண்டிருப்பார்கள். அத்தனையும் கரி!

யாரேனும் நண்பர் ஒருவர் ''ரொம்ப அவசரம்... கடன் வேண்டும்'' எனக் கேட்டால், குடும்ப நிலைமையைக் கூடக் கவனியாமல் கடன் தந்து அனுப்புவோர் ஆண்கள்தான். அந்தக் கடன் என்று திரும்பி வருமோ? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

ஆபீசருக்குப் பார்ட்டி, பியூனுக்கு பக்ஷீஸ், நண்பர்களுக்கு ஹோட்டல், சினிமாச் செலவு, இவற்றிலெல்லாம் ஆண்களுக்கு உள்ள அந்தத் தாராள மனப்பான்மை எங்களுக்குக் கிடையவே கிடையாது!

பேட்டி: **ஏ. சுவாமிநாதன்**

ராமாயணம்

ராஜாஜி



தெய்வம் எல்லாவிதத்திலும் விபத்துக்கு ஏற்பாடு செய்து விட்டது. சாதாரணமாக லக்ஷ்மணன் பரபரப்பாக இருப்பான். இந்தச் சமயத்தில் அவனுக்குச் சந்தேகம் உண்டாகி எச்சரிக்கை செய்தான். அதற்கு எதிரிடையாக, எப்போதும் மிக ஜாக்கிரதையாக இருந்த ராமச்சந்திரன் இந்தச் சமயம் சீதையின் இஷ்டத்தைச் சிறிய விஷயத்திலும் பூர்த்தி செய்ய வேண்டும் என்று லக்ஷ்மணன் சொன்னதைத் தட்டி, மாய மானைத் தொடர்ந்து போய் விட்டான்.


* * *

ராமன் செல்வது லக்ஷ்மணனுக்குச் சம்மதமில்லை. ஆயினும் ராமன் வில்லும் கையுமாக மானைத் தொடர்ந்து சென்றான்.

''லக்ஷ்மணா, ஜாக்கிரதை! சீதையைப் பார்த்துக் கொள். மானைக் கொன்றுவிட்டுச் சீக்கிரம் கொண்டு வந்து விடுகிறேன். கவலைப்படாதே. ராக்ஷஸனா யிருந்தாலுமென்ன? வாதாபியின் கதி இந்த ராக்ஷஸனுக்கும் ஆகும். மோசம் செய்ய வந்திருந்தால் அகஸ்தியரைப் போல் நானும் மோசக்கார ராக்ஷசனை அவன் மோசத்துக்கே அவனை இரையாக்கி விட்டு ஒழிப்பேன். என்னை இந்த மான் என்ன செய்யும்? மானாக இருந்தாலும் சரி, அரக்கனாக இருந்தாலும் சரி'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

''ஜாக்கிரதை! சீதையைப் பார்த்துக்கொள். எந்தச் சமயத்தில் எது நேருமோ என்று வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். அலட்சியமாக இருக்காதே!'' என்று போகும் போது சொல்லிவிட்டுப் போனான்.

ராவணனுக்குப் போதிய அவகாசமும் சந்தர்ப்பமும் தருவதற்காகக் கைக்குச் சிக்குவது போலவே காட்டிக் கொண்டு மானானது ராமனை வெகு தூரம்,—விதி மனிதனை இழுத்துச் செல்வதுபோல் - இழுத்துக் கொண்டு போய் விட்டது.



மெல்ல மெல்லக் கால் எடுத்து வைக்கும். ஓடாமல் அங்கே நின்று வெறித்துப் பார்க்கும். திடீர் என்று பயந்தாற்போல் மேலே குதிக்கும். காதை நீட்டும். உடனே நாலு குளம்புகளையும் மார்போடு சேர்த்து மேலே துள்ளும். ஒரே பாய்ச்சலாகக் காட்டுக்குள் காற்று வேகமாக ஓடி மறையும்.

மிதித்தது மெல்ல மெல்ல
வெறித்தது. வெருவி மீதில்
குதித்தது. செவியை நீட்டிக்
குரபதம் உரத்தில் கூட்டி
உதித்தெழும் ஊதை உள்ளம்
என்றிவை உருவச் செல்லும்
கதிக்கொரு கதியும் வேறே
காட்டிய(து) ஒத்த தன்றே.

மறைந்த மாதிரி கொஞ்ச நேரம் இருந்து திடீரென்று ஓர் உயர்ந்த இடத்தில் நின்று தன் அழகைத் தனியாகக் காட்டும். மேகங்கள் ஆகாயத்தில் உலாவ அவற்றோடு கலந்து காட்சி தரும். பிடித்துவிடலாம் போல் கிட்ட நிற்கும். கிட்டப் போனால் தூரமாகப் போய் விடும். நின்றது போல் இருக்கும். அப்படியே மறைந்து விடும்.

குன்றிடை இவரும் மேகக்
குழுவிடைக் குதிக்கும் கூடச்
சென்றிடின் அகலும் தாழில்
தீண்டலாம் தகைமைத் தாகும்
நின்றதே போல நீங்கும்
நிறிவழி ஜேயம் நீட்டும்
மன்றலங் கோதை மாதர்
மனம் எனப் போயிற் றம்மா!

மாரீசனுக்கும் மரணம் கிட்டியது என்று பட்டு விட்டது. அதே கணத்தில் ராமனும் 'இனிப் போதும் தொடர்ந்தது' என்று வில்லை வளைத்து அம்பைச் செலுத்தினான். மாரீசன் ''ஐயோ, சீதையே! ஐயோ லக்ஷ்மணா!'' என்று ராமன் குரலில் உரக்கக் கத்திவிட்டு மாண்டான். மாளும் சமயம் நிஜ வடிவம் வந்து விட்டது. மலை போன்ற சரீரத்துடன் மாரீசன் ரத்தம் பெருகப் பூமியில் விழுந்து புரண்டு இறந்தான்.

''லக்ஷ்மணன் சொன்னது மெய்யாயிற்று'' என்றான் ராமன். மோசத்தைக் கண்டான்.



''இந்தக் கூக்குரலைக் கேட்டுச் சீதை என்னென்னவோ எண்ணிப் பயப்படுவாளே!'' என்று யோசித்தான்.

பிறகு 'ஆனால் பயம் என்ன? லக்ஷ்மணன் பக்கத்தில் இருக்கிறானல்லவா?' என்று சமாதானப் படுத்திக்கொண்டான்.

வெய்ய வன்தன் உருவொடு வீழ்தலும்
செய்ய(து)அன்றெனச் செப்பிய தம்பியை
'ஐயன் வல்லன்! என் ஆருயிர் வல்லன்! நான்
உய்ய வந்தவன் வல்லன்!' என் றுன்னினான்.

''எத்தகைய தம்பியை நான் பெற்றேன்! வனத்தில் எனக்கு எத்தகைய துணைவனைப் பெற்றேன்!'' என்று ராமன் தன் அன்புக்குரிய இளைய பெருமானை நினைத்து நினைத்து மனத்தில் பாராட்டுகிறான். அடுத்த கணம் தம்பிக்கு என்ன நேரிடுகிறது? அவன் காதில் எத்தகைய நாராச மொழிகளைக் கேட்க வேண்டியதாகிறது என்பதை அறியான் ராமன். விதியோ விதி!

50. கழுகின் வீரம்

''ஐயோ சீதா! ஐயோ லக்ஷ்மணா!'' என்று மாரீசன் கதறியதைக் கேட்ட சீதை, அது ராமன் கதறியதே என்று எண்ணி விட்டாள். பெருங் கழற்காற்றில் அகப்பட்ட வாழை மரத்தைப் போல் நடுங்கிப் பதை பதைத்து, ''லக்ஷ்மணா! அதோ அண்ணன் குரல் தெரியவில்லையா? ஓடு ஓடு'' என்றாள்.

தாங்க முடியாத நிலைடைந்து லக்ஷ்மணனைப் பார்த்து, ''நாயகனுடைய துயரக் குரல் கேட்கிறதே! ஐயோ, என் உயிர் நிற்காது, நான் மாய்வேன்! போ! போ! நிற்காதே!'' என்று பொறுக்க முடியாத துயரத்திலும் பயத்திலும் தத்தளித்துக் கதறினாள்.

''காட்டில் ஏதோ அபாயத்தில் சிக்கி விட்டார். பெருங் கூச்சல் போட்டாரே, கேட்கவில்லையா? இன்னும் இங்கே நிற்கிறாயே!'' என்று அழுதாள்.

''ராக்ஷசர்களிடையில் உன் அண்ணன் அகப்பட்டுக் கொண்டு கதறுகிறார். ஒரே பாய்ச்சலாக ஓடி அவரைக் காப்பாற்ற வேண்டாமா? சும்மா நிற்கிறாயே!'' என்று கதறினாள்.

அரக்கர்களுடைய மோசத்தை அறிந்த லக்ஷ்மணன் அண்ணன் இட்ட ஆணையை நினைவில் கொண்டு அசையாமல் நின்றான்.


ஜானகிக்கு உண்டான கோபமே கோபம்! வயிற்றில் இரண்டு கைகளாலும் அடித்துக் கொண்டு, ''சுமத்திரையின் மகனே! சத்துருவாகி விட்டாயா? இவ்வளவு நாளும் வேஷம் போட்டாயா? ராமனுடைய மரணத்துக்கா இவ்வளவு நாள் காத்திருந்தாய்? அவன் இறந்தால் அவனுக்குப் பின் என்னை அடைந்துவிடலாம் என்று எண்ணி, இத்தனை நாள் ஏமாற்றினாயா? துஷ்டனே, ராமன் கதறிக் கூவுவதைக் கேட்டும் போகாமல் இங்கே நிற்கிறாயே? அண்ணனிடம் நீ காட்டிக் கொண்ட பிரியமெல்லாம் பெருஞ் சூழ்ச்சியா? துன்மார்க்கனே!'' என்றாள்.

லக்ஷ்மணன் காதுகளை மூடிக் கொண்டான்.

துயரத்தால் துடிதுடித்துக் கொண்டு உடலெல்லாம் கண்ணீரில் தோய்ந்து புத்தி முற்றிலும் இழந்து போய் இப்படிப் பேசிய சீதையைப் பார்த்து லக்ஷ்மணன் மெதுவாகச் சொன்னான்:

''வைதேகி! உன் புருஷன் தேவ அசுர மானுட ஜாதிகளில் எவன் எதிர்த்தாலும் அவனுடன் போர் செய்து கொன்று விட்டுத் திரும்பி வருவான். இது நிச்சயம், பயப்படாதே! என் அம்மையே, புத்தியைச் சுவாதீனப்படுத்திக் கொள். பயப்பட வேண்டாம்! நம் ராமனை எந்த அரக்கனும், எந்த மிருகமும், எந்தப் பட்சியும், எந்தப் பேயும், எந்தக் கந்தர்வனும், எந்தத் தேவனும், எந்த அசுரனும் தீண்ட முடியாது. நீ இப்படிப் பேசலாகாது. என் அருமைத் தாயே! ராமனுடைய பலம் எனக்குத் தெரியும்; மூன்று உலகத்தில் யார் வந்து அவனை எதிர்த்தாலும் ராமனுடைய வெற்றி நிச்சயம். நீ துயரப்பட வேண்டாம். கொஞ்ச நேரத்தில் உன் நாயகன் அந்த மானைக் கொன்று விட்டு எடுத்துக் கொண்டே வருவான். நீயே பார்ப்பாய்! இந்தக் குரல் அவனுடைய குரல் அல்ல. இது ராக்ஷசனுடைய மாயை. அதனால் நீ ஏமாந்து துயரப்பட வேண்டாம். உன்னை அண்ணன் என்னிடம் ஒப்புவித்து விட்டுப் போயிருக்கிறான். உன்னைத் தனியாக விட்டு விட்டு என்னைப் போகச் சொல்ல வேண்டாம். அண்ணன் ஆணையை நான் மீறலாகாது. ஜனஸ்தான ராக்ஷஸர்களை நாம் கொன்றதனால் பழி வாங்க இப்படி ராக்ஷசர்கள் பலவித மோசம் செய்து வருகிறார்கள். அவர்கள் போடும் வேஷங்களையும் மாற்றுக் குரல்களையும் நம்பலாகாது. இது ராமன் போட்ட கூக்குரல் அல்ல; நீ கொஞ்சமும் பயப்பட வேண்டாம்'' என்றான். (தொடரும்)





அட்டைப் படம்: தாய்லாந்து நடனம்.
வண்ணப் படம் அனுப்பியவர்: கட்டுரை ஆசிரியை.

புது வருடத்துக்கு எது தேவதை?


— கோமளா வரதன் —

தமிழர்களாகிய நமக்குப் புது வருடம் பிறக்கும் ஏப்ரல் மாத நடுவிலேயே தாய்லாந்துக் (சயாம்)காரர்களுக்கும் புது வருடம் பிறக்கிறது. வருடப் பிறப்பை அவர்கள் சொங்க்ரான் என்று அழைத்துப் பெரிய திருநாளாகக் கொண்டாடுகிறார்கள். சங்கராந்தி என்ற சம்ஸ்கிருத வார்த்தையின் திரிபுதான் சொங்க்ரான் ஆகும். ஒவ்வொரு மாதமும் சூரியன் ஒவ்வொரு ராசியில் நுழைவதையும் சொங்க்ரான் என்றே குறித்தாலும், சித்திரை மாதம் மேஷ ராசியில் நுழைவது மஹா சொங்க்ரானும் வருடப் பிறப்புமாகும். நாம் தை மாதம் சங்கராந்தியை மூன்று நாட்கள் கொண்டாடுவது போல் அவர்கள் சித்திரை மாதம் சொங்க்ரானை ஏப்ரல் 13, 14, 15 ஆகிய மூன்று நாட்களிலும் கொண்டாடுகிறார்கள்.

இதைக் குறித்துக் கர்ண பரம்பரையான கதை ஒன்றும் சொல்லுகிறார்கள். சகல வித்தைகளிலும் பாஷைகளிலும் வல்லவனான இளைஞனொருவனைக் கண்டு கபில மஹா ப்ரோம் என்ற தேவதை மிகவும் பொறாமை அடைந்து அவனை வாதுக்கு அழைத்து முடிவில் தானே தோற்று விட்டதாம். நிபந்தனைப்படி தன் தலையைத் தானே கொய்து கொண்டும் விட்டதாம். அந்தத் தலை மிக மிக உஷ்ணமானதாம். அது நிலத்தில் விழுந்தால் சகலமும் பற்றி எரிந்துவிடுமானபடியினால், அந்தத் தேவதையின் ஏழு பெண்களும் அதைக் கீழே விழுந்துவிடாமல் மாற்றி மாற்றித் தாங்கி ஏந்திக் கொண்டு, வருடத்துக்கொரு முறை மேரு மலையை வலம் வந்து அதில் உள்ள இருண்ட குகையில் வைத்து விடுகிறார்களாம். ஆம், நம் புராண இதிகாசங்களில் குறிப்பிட்டுள்ள மேரு மலையைத்தான்.

புது வருடத்தன்று இந்த ஏழு கன்னிகைகளில் ஒருத்தி எந்த மிருக வாஹனத்தில், எந்தத் தோற்றத்தோடு, எந்த நிலையில் ஏறி வருகிறாள் என்பதைப் பொறுத்து அந்த வருடத்துக்குரிய பலன்களை நிர்ணயிப்பார்கள். அரண்மனையில் அரசாங்க சோதிடர்கள் பஞ்சாங்கம் படிப்பதும், ஆருடம் கூறுவதும் உண்டு. அந்த வருட தேவதைக்குரிய படத்தையும் பெரிய அளவில் வரைந்து பொதுமக்கள் பார்வைக்கு வைப்பார்கள்.

மக்கள் புத்தாடை அணிந்தும் வீட்டில் பெரியவர்களை நீராட்டியும், கூட்டில் அடைத்த பறவைகளை விடுவித்தும் பிக்ஷுகளுக்கு அன்னமிட்டும் வருடப் பிறப்பை வரவேற்கிறார்கள்.



காணக் கிடைக்காத தங்கம்

அத்தியாயம் இரண்டு

பெங்களூரில் உள்ள பெரும்பாலான சாலைகள் ஏற்ற இறக்கமானவை. அந்தச் சாலைகளில் வாகனங்களை ஓட்டிச் செல்வதற்கு ஒரு தனித் திறமையும் பயிற்சியும் வேண்டும். குறிப்பாக ஜட்கா வண்டி, ரிக்ஷா, சைக்கிள் முதலானவற்றை ஓட்டுவது அத்தனை சாமானிய காரியம் அல்ல. 'வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும்' என்று வேதாந்திகள் சொல்கிறார்களே, அதை அங்கு நிதர்சனமாகக் காணலாம். சாலையின் ஏற்றத்தில் ரிக்ஷாக்காரன் குடற் கொடிகளெல்லாம் அறுந்து இரத்த வாந்தி எடுப்பது போன்ற நிலையில் முக்கி முனகி ரிக்ஷாவைத் தள்ளிச் செல்வதையும், ஜட்கா வண்டியில் பூட்டிய குதிரை நொப்பும் நுரையும் வழிய வழிய நெம்பி நெளிந்து வண்டியை இழுத்துப் போவதையும், முதுகு எலும்பு வில்லாக வளைய ஒரேயடியாகக் கூனிக் குனிந்து மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கச் சைக்கிளை மிதித்துச் செல்லும் மனிதரையும் கண் கொண்டு காணச் சகிக்காது. இப்படி அல்லாடி மல்லுக் கொடுத்துச் சாலையின் ஏற்றப் பகுதியை ஒருநிலுசாக ஏறிக் கடந்து இறக்கத்தை எட்டிய பின் அவர்களைப் பார்க்க வேண்டுமே! பஞ்ச கல்யாணி குதிரை பூட்டிய புஷ்பக விமானமாகி விடும் ஜட்கா; ரோல்ஸ்ராய் காரை ஓட்டும் சாரதியாகிவிடுவான் ரிக்ஷாக்காரன்; சைக்கிள்தாரியோ சூப்பர்ஸானிக் விமானத்தில் ஆரோகணித்துப் பறப்பவராகக் காட்சியளிப்பார்!

இப்போது அருணகிரியும் அம்மாதிரியான ஒரு சாலையில்தான் தன்னால் ரிப்பேர் செய்யப்பட்ட சைக்கிளை 'வெள்ளோட்டம்' விட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பார்சி கோயில் ஒன்றின் முனையிலிருந்து மேற்கு — கிழக்காக அமைந்த சாலை அது. அளவுக்கு மீறி இறக்கமான அந்தச் சாலை சிவாஜி சர்க்கிள் பஸ் நிலையம் வரை கிடுகிடுவென இறங்கிப் பிறகு மாதா கோயில் வரை சம கதியில் போய் ரஸ்ஸல் மார்க்கெட்டின் எதிர்ச் சாலையோடு இணைந்து முடிந்து விடும். இந்தச் சாலையின் ஏற்றத்தில் — மேற்கு நோக்கி — மிகுந்த பிரயாசையுடன் தன் சைக்கிளை மிதித்துக்கொண்டு சென்றான் அருணகிரி.

மேலே ஏற ஏறச் சிரமம் அதிகமாகியது. எதிர்க் காற்று வேறு பலமாக வீசியது. எப்படியோ முக்கால் பகுதி மேட்டைக் கடந்து வந்த அவன் பந்தயக்குதிரையை ஓட்டிச் செல்லும் ஜாக்கி போல் ஒரேயடியாக முதுகை வளைத்துத் தலை குனிந்தபடி ஹாண்டில் பாரை அழுத்திப் பிடித்துக் கொண்டு தன் பலத்தையெல்லாம் கால்களில் இறக்கி பெடலை மிதித்தான். அப்போதும் அவனுடைய கவனம் முழுதும் சைக்கிளின் சக்கரங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் கண்டறிவதிலேயே லயித்திருந்தது.

''ஹா!...அம்மாடீ!''

இந்தத் திடீர் அலறல் ஒலியைக் கேட்டுத் திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்த அருணகிரி சட்டென்று சைக்கிளுக்குப் பிரேக் போட்டவாறு கீழே குதித்தான். அதே சமயம் அவனுக்கு இடது பக்கவாட்டின் நடைபாதை மேல் ஓர் இளம் பெண் தட்டுத் தடுமாறிக் கால்களைப் பரப்பிக் கொண்டு தொப்பென்று உட்கார, அவளது தலையிலிருந்த சோற்றுக் கூடை ஒருக்களித்துச் சாய்ந்து, அதில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த தூக்குப் பாத்திரங்களும், திருகு செம்புகளும் சரிந்து உருண்டன. இது நடக்கும் போதே வலது பக்கம் தார்ச் சாலையில் மற்றோர் அழகிய பெண் சைக்கிளைப் போட்டுக் கொண்டு விழ, அந்தச் சைக்கிளில் தொங்கிய பிரம்புக் கூடையிலிருந்து புத்தகங்களும் நோட்டுக்களும் நழுவிச் சிதறின.

கண் மூடிக் கண் திறக்கும் நொடிப் பொழுதில் தனக்கு இருபுறமும் இரண்டு பெண்கள் எக்கச்சக்கமான நிலையிலே விழுந்து விட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தவனாய்த் திருதிருவென விழித்துக்கொண்டு நின்ற அருணகிரி, அதற்கான காரணத்தை அந்தக் கணமே புரிந்து கொண்டான்.

ஆமாம்; அந்தச் சாலையின் ஏற்றத்தில் தன் சைக்கிளை வெகு பிரயாசை

ஜெகசிற்பியன்

யுடன் ஓட்டிச் செல்வதிலும், அப்படி ஓட்டும்போது பழுதுபார்க்கப்பட்ட சக்கரங்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை ஆராய்வதிலுமே கவனமாயிருந்த அவன், எதிரே சோற்றுக் கூடைச் சுமையுடன் வந்த பெண்ணையோ, அவனுக்குப் பின்னால் சைக்கிளில் வந்த யுவதியையோ பார்க்கவில்லை. சோற்றுக் கூடைக்காரி அவனுடைய சைக்கிள் தன்மீது மோதிவிடுமோ எனப் பயந்து அவசரமாகப் பக்கவாட்டில் திரும்பும்போது நடைபாதை மேட்டில் காலிடறி விழுந்து விட்டிருக்கிறாள்; சாலை இறக்கத்தில் வெகு வேகமாய்ச் சைக்கிளைச் செலுத்தி வந்த யுவதியும் இதனால் நிதானம் தவறிச் சடாரெனப் பிரேக் போட்டு வலது பக்கம் ஒடித்துத் திருப்புகையில் சக்கரம் ஒரேயடியாக முறுக்கிக் கொண்டு சாய்ந்து அவளையும் கவிழ்த்து விட்டிருக்கிறது!....

என்ன செய்வதென்று தோன்றாமல் ஒரு கணம் திகைத்து நின்ற அருணகிரி சட்டென்று தன் சைக்கிளுக்கு ஸ்டாண்டு போட்டு நிறுத்தி விட்டு அவ்விரு பெண்களையும் பரபரப்புடன் மாறி மாறிப் பார்த்தான். எந்தப் பெண்ணை முதலில் போய்த் தூக்கி விடுவது என்ற யோசனையோடுதான் அவ்வாறு பார்த்தான். அதில் அவன் ஒரு முடிவுக்கு வருவதற்குள்ளாகச் சைக்கிளைப் போட்டுக் கொண்டு ஒருக்களித்து விழுந்து கிடந்த யுவதி ஒரு துள்ளுத் துள்ளி எழுந்து நின்று கொண்டாள்.

அவளுக்கு வயசு பதினாறு அல்லது பதினேழு இருக்கும். நல்ல அழகி. செல்வச் செழிப்பான தேகவாகு. பருவத்தின் சகல சௌந்தர்யங்களும் அதிலே கொழித்துக் கிடந்தன. சல்வார்-கம்மீஸ் அணிந்திருந்தாள். மார்பில் போட்டிருந்த மேலாக்குத் துகில் சரிந்து கீழே கிடந்தது. குட்டையான இரட்டைப் பின்னல். ஒரு பின்னலில் மட்டும் மஞ்சள் ரோஜா மலர் ஒன்று செருகப்பட்டிருந்தது. இன்னொரு பின்னலி



விருந்த மலர் கீழே உதிர்ந்து கிடந்தது. அவளைப் பார்த்தால் தமிழ்ப் பெண்ணாகத் தெரியவில்லை. கன்னட அல்லது பார்ஸி இனத்தவள் போலத் தோன்றியது. ஒருகால் தமிழ்ப் பெண்ணாகவே கூட இருக்கலாம். பெங்களூர் ஒரு கலப்பட நாகரிக நகரம் அல்லவா?

எழுந்து நின்ற அதே வேகத்தில் தன் கைமுட்டிகளையும், கால் முட்டிகளையும் அழகிய மேனியைப் பின்புறத்திலும் தட்டித் துடைத்து விட்டுக் கொண்டாள் அவள். நல்ல வேளையாக இரத்தக் காயம் ஏதும் படவில்லை என்றே தோன்றியது. எங்காவது இலேசாகச் சிராய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தனது உடைகளில் அப்பிக் கொண்டிருந்த மண்ணையும் தூசுதும்புகளையும் தட்டிச் சத்தப்படுத்திக் கொள்வதிலேயே அவளது முழுக் கவனமும் சென்றது.

அருணகிரி நடைபாதைமீது விழுந்து கிடந்த பெண்ணை நோக்கித் தாவிச் சென்றான். ஏனென்றால் இன்னமும் அவளால் சுதாரித்துக் கொண்டு எழுந்து நிற்க முடியவில்லை. அப்படி அவளை எழுந்திருக்க விடாமல் சோற்றுக் கூடை தோள்பட்டைமேல் சாய்ந்து அழுத்திக் கொண்டிருந்தது. சற்றே அவள் நெளிந்து நிமிர்ந்தாலும் அந்தக் கூடையிலிருந்த டிபன் செட்டுகளும், காரியர்களும், தண்ணீர்ச் செம்புகளும் ஒரேயடியாகத் தரையில் சரிந்து கவிழ்ந்து விடக்கூடிய நிலையில் இருந்தன.

விரைந்து வந்த அருணகிரி சோற்றுக் கூடையை நிமிர்த்தி இழுத்துத் தரையில் வைத்துவிட்டு அந்தப் பெண்ணின் இரு தோள்பட்டைகளையும் பிடித்து மேலே தூக்கி நிறுத்தினான். இந்நேரம் வரையில் கீழே விழுந்த அதிர்ச்சியில் பிரமை பிடித்தவள் போல் கைகளை ஊன்றி உட்கார்ந்திருந்த அவள் — ஓர் ஆண் மகன் தன்னைத் தொட்டுத் தூக்கியதாலோ என்னவோ — மிரட்சியடைந்தவளாய் அவனது பிடியிலிருந்து வெடுக்கென உருவிக்கொண்டு பின்னால் நகர்ந்து, அலங்கோலமாய்க் கலைந்திருந்த தன் ஆடைகளைப் பரபரப்புடன் சரி செய்து கொள்வதில் முனைந்தாள்.

அருணகிரி இதைக் கவனியாமல் மீண்டும் அந்த இரட்டைப் பின்னல்காரியை நோக்கி ஓடினான். அவள் தன் மேலாக்குத் துகிலை எடுத்துச் சாவதானமாகத் தோள்களில் சரியப் போட்டுக் கொண்டு கீழே விழுந்து கிடந்த சைக்கிளைத் தூக்கி நிறுத்தினாள். முன் சக்கரத்துக்குச் சளுக்குப் பிடித்து விட்டிருந்தது. அதனால் ஹாண்டில்பாரை நேராகப் பிடித்தாலும் இடதுபுறமாக முறுக்கிக்கொண்டு போயிற்று. என்ன செய்வதென்று தெரியாமல் அப்படியும் இப்படியுமாகக் குனிந்து பார்த்தாள் அவள்.

''அது ஒன்றுமில்லை; இதோ, சரிப்படுத்திடறேன்!'' என்று சொல்லிக் கொண்டே அவளிடமிருந்து சைக்கிளை வாங்கிய அருணகிரி வெகு அலட்சியமாக முன் சக்கரத்தைத் தன் கால் தொடைகளின் இடுக்கில் விட்டு அழுத்திக்கொண்டு ஹாண்டில்பாரை இரண்டு கைகளாலும் பிடித்துச் சிவுக்கென்று ஒரு திருப்புத் திருப்பினான். சைக்கிள் சக்கரம் நேராகி விட்டது. உடனே அதை ஸ்டாண்டு போட்டு நிறுத்தி விட்டுச் சாலையில் இறைந்து கிடந்த புத்தகங்களையும் நோட்டுக்களையும் அவசரமாகப் பொறுக்கியெடுத்து அடுக்கிக் கொண்டு வந்து பிரம்புக் கூடையில் வைத்தான்.

இவ்வளவு நேரம் அவனையே விழியசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண் வெடுக்கென்று தன் சைக்கிளைப் பிடித்து முன்னால் தள்ளி ஸ்டாண்டைக் காலால் தட்டி விட்டாள். பிறகு, ''ரோட்டிலே எதிரில் வருகிறவர்களைப் பார்த்துச் சைக்கிள் ஓட்டறதில்லையா? செம்மறி ஆடு மாதிரி தலையைக் குனிஞ்சுக்கிட்டா வர்றது? நான்-சென்ஸ்!'' என்று கோபக் கடுப்புடன் சொல்லிக் கொண்டே எம்பிக் குதித்து ஏறி அமர்ந்தாள். மறு கணம் சாலை இறக்கத்தில் விர்ரென்று விரைந்து ஓடியது சைக்கிள்.


விக்கித்துப் போன அருணகிரி சைக்கிளில் விரைந்து சென்ற அந்தப் பெண்ணையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான். 'புதுசா சைக்கிள் விடக் கத்துக்கிட்ட பணக்கார வீட்டுப் பொண்ணு போல இருக்குது; அதான் இந்த இறக்கத்திலே கண்ட்ரோல் பண்ணத் தெரியாம கவுந்துட்டிருக்கிறாள்! பாவம், முழங்கால் முட்டியெல்லாம் தோல் வயண்டு போச்சு! அதுக்கு நான் என்ன பண்ணுவேன்? என்னைத் திட்டி விட்டுப் போறாளே! ரைட் சைடில் வந்தது அவளோட தப்புத்தானே?' — இளநகையுடன் மெல்லத் தலையாட்டியபடி, சோற்றுக் கூடைக்காரியை நோக்கித் தயக்கத்துடன் வந்தான்.

அவள் தட்டுத் தடுமாறி விழுந்த போது கூடையிலிருந்த பாத்திரங்களும் கூஜாக்களும் ஒன்றன்மீது ஒன்று இடிபட்டுக் குலுங்கிச் சாய்ந்ததால் அவற்றிலிருந்த சாம்பார், ரசம், மோர், தண்ணீர் ஆகியவை ததும்பி வெளியே



சென்னை தியாகராயநகர் இந்து தர்ம மன்றத்தார் நடத்திய ராஜராஜ சோழன் ஆயிரமாவது சதயத் திருவிழாவை அறநிலைய அமைச்சர் திரு சுப்பையா தொடங்கி வைத்தார். அவ்விழாவில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளால் அளிக்கப் பட்ட பொன்னாடையை விழாத் தலைவர் காஞ்சி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், ஓவியர் 'சில்பி'க்குப் போர்த்தினார்; பாராட்டினார்.

• • •



சமீபத்தில் சென்னை மீனம்பாக்கத்தை அடுத்த நங்கைநல்லூரில் ஸ்ரீராஜராஜேசுவரிக்கு நூதன ஆலயம் அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

வழிந்து கொண்டிருந்தன. அவற்றைக் கண்டு திகிலடைந்த அவள் அப் பாத்திரங்களை அவசரம் அவசரமாக நிமிர்த்தித் துடைத்துக் கூடையில் அடுக்கி வைப்பதில் முனைந்திருந்தாள்.

அவளுக்கு வயசு பதினேழுக்குமேல் இருக்கும். பருவ எழில் பொங்கிப் பூரிக்கும் கட்டான உடல். நிறம் அவ்வளவு எடுப்பாயில்லையானாலும் கறுப்பு இல்லை; செப்பு நிறம். அடர்த்தியான கருங்கூந்தலை அலட்சியமாகக் கோதி முடிந்த முறுக்குக் கொண்டை. விலை மலிவான அச்சு வாயல் சேலை. அதற்குக் கொஞ்சமும் பொருத்தமில்லாத கத்தான் பட்டுச் சோளி. அணிமணிகளெல்லாம் கமர்ஷியல் தெரு பிளாஸ்டிக் சரக்குகள் ஆனாலும் அவளது முகப் பொலிவு? அது எங்கோ இருக்க வேண்டியது. இடம் மாறிக் குடியேறி விட்டிருக்கிறது!...

''அடடா! குழம்பு, ரசம் மோரெல்லாம் கொட்டிப் போச்சே!'' என்று கையை உதறி அநுதாபத்துடன் சொன்னான் அருணகிரி. ''நல்லவேளை, சோறு கறி கொட்டிப் போகல்லே. ஆனாலும் சோத்துக்குச் சொந்தக்காரங்க திட்டுவாங்க, இல்லையா?''

குனிந்து, கூடையில் பாத்திரங்களை அடுக்கிக் கொண்டிருந்த அவள் பதில் ஏதும் சொல்லாமல் நிமிர்ந்தாள்.

''இந்தச் சாப்பாடெல்லாம் எங்கே போகுது? ஏதானும் ஓர்க்ஷாப் வேலைக்காரங்களுக்கா? இல்லே, பள்ளிக்கூடப் பசங்களுக்கா?''

இதற்கும் அவள் மறுமொழி கூறாமல் தன் முன்றானையை முறுக்கிச் சும்மாடு கோலுவதில் கவனமாயிருந்தாள்.

''சரி; அப்படியே நில்லு! நான் தூக்கி வைக்கிறேன்!'' என்றவாறு சோற்றுக் கூடையைத் தூக்கி அவள் தலைமீது மெல்ல வைத்தான் அருணகிரி.

அவள் இரண்டு கைகளையும் மேலே உயர்த்திக் கூடையை வசமாகத் தலையில் நகர்த்தி வைத்துக் கொண்டு ஓர் இனிய புன்னகையுடன் அவனைக் கடைக்கண்ணால் நோக்கினாள். அந்த அழகிய கோணத்தில் அவனைப் பார்த்த அருணகிரிக்கு என்ன 'ஆயிற்றோ தெரிய

வில்லை. திடுமென்று பார்வையைத் தாழ்த்தி உடம்பை ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்துக் கொண்டு பின்னால் நகர்ந்தான்.

"என்னவோ ஞாபகத்திலே வேறு எங்கோ பார்த்துக்கிட்டு வந்துட்டேன். பாவம், உங்களுக்கு வீணா திட்டுக் கிடைச்சுது! மன்னிச்சுடுங்க!" என்று அநுதாபமும் அச்சமும் கலந்த குரலில் கூறிக் கொண்டே அங்கிருந்து விடுவிடென்று நடந்தாள் அந்தப் பெண்.

அவளையே பார்த்துக் கொண்டு சிறு பொழுது மரமாய் நின்ற அருணகிரி தனக்குள் மெல்லச் சிரித்தவாறு சைக்கிளைத் தள்ளிக் கொண்டு மெல்ல நடந்தான்.

'இன்னும் ஏன் போக வேண்டும்? இவ்வளவு தூரம் ஓட்டிப் பார்த்தது போதாதா? கோளாறு எதுவும் இல்லை; திரும்பிப் போய் விடலாமே!' என்று எண்ணிச் சற்றே தயங்கிய அவன் உடனே, 'வேண்டாம்' என்பதுபோல் தலையாட்டிக் கொண்டான். இப்போது இதே சாலை வழியாகத் திரும்பிப் போனால் அந்தச் சோற்றுக் கூடைக்காரப் பெண்ணைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும். அப்படிச் சென்றால், நான் போகிற காரியத்தை விட்டுவிட்டுத் தன்னைப் பின்தொடர்ந்து வருவதாக அவள் எண்ணிவிடலாம் அல்லவா?'

சாலையின் மேட்டைக் கடந்து பார்சி கோயில் எதிரே வந்து சேர்ந்த அருணகிரி சைக்கிளில் ஏறி அமர்ந்து மில்லர் ஏரிச் சாலை வழியாகத் திருப்பி ஓட்டினான். அந்தச் சாலையில் இருந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் அப்போதுதான் இடைவேளை விடப்பட்டு மாணவிகள் கும்பல் கும்பலாக வெளியே வந்து கொண்டிருந்தனர். கார்களும் ரிக்ஷாக்களும், சைக்கிள்களும் ஏக நெரிசலாக ரோட்டை இரு புறமும் அடைத்துக் கொண்டு சென்றன. சற்று முன் பக்கத்துச் சாலைச் சரிவில் சைக்கிளைப் போட்டுக் கொண்டு விழுந்து எழுந்து தன்னைத் திட்டிவிட்டுப் போன அந்தச் சல்வார்—கம்மீஸ் அழகி இந்தப் பள்ளியில் படிப்பவளாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக்கொண்ட அருணகிரிக்குச் சிரிப்பு வந்தது.

பார்சி கோயிலுக்குப் பின்புறமாய் முனுசாமி சாலையில் திரும்பி அதன் இறக்கத்தில் விர்ரெனச் சைக்கிளைச் செலுத்தி ஐந்தே நிமிடங்களில் தன் கடையை அடைந்த அவனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. ஆமாம்; அங்கே அந்த இரட்டைப் பின்னல்காரி தன் சைக்கிளுடன் நின்றிருந்தாள்.

அருணகிரி அவளைப் பார்த்துப் பயந்து போனான். 'இந்தச் சைக்கிள் ரிப்பேர் கடையில் நான் வேலை பார்க்கிறவன் என்பதைத் தெரிந்து கொண்டு என்னைப் பற்றி முதலாளியிடம் புகார் பண்ண இவள் வந்திருப்பாளோ?' என்று எண்ணியே அவன் அவ்வாறு பயந்தான். 'வேண்டுமென்றே தன் சைக்கிளின்மீது என் சைக்கிளைக் கொண்டு வந்து இடித்ததாக இவள் சொல்லி விட்டால் என்ன செய்வது? முன்கோபக்காரனான ஏழுமலை இவள் எதிரிலேயே என்னை அடித்து நொறுக்கி விடுவானே!'

அருணகிரிக்கு வியர்த்துக் கொட்டியது. அந்தப் பெண் நின்ற பக்கமே பார்வையைத் திருப்பாமல் தான் ஓட்டி வந்த சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டு, "அப்போவ்! இதை நல்லா டெஸ்ட் பண்ணிப்பிட்டேன். ட்ரபிள் ஒண்ணுமில்லை. அந்த ஆள் வந்தாரா? வந்தால் கொடுத்துடலாம்" என்றவாறு நெற்றியில் வழிந்த வியர்வையை வழித்து விட்டுக் கொண்டான்.

ஏழுமலை சாப்பிட்டுவிட்டு வெற்றிலை போட்டுக் கொண்டிருந்ததாலோ என்னவோ அவனுடைய குணமும் அப்போது நன்றாயிருந்தது.


"சரி; அதை வைச்சுட்டு இந்த வண்டிக்குக் காத்து அடிச்சுக் கொடு ராஜா! பாவம், அந்தப் புள்ளே ரொம்ப நேரமா நிற்குது!" என்றான் கனிவான குரலில்.

போன உயிர் திரும்பி வந்தாற் போல் ஆயிற்று அருணகிரிக்கு. அத்துடன் ஏழுமலை, 'டேய், சோங்குப் பயலே!' என்று வழக்கமான கொச்சைப் பெயரிட்டுத் தன்னைக் கூப்பிடாமல், 'ராஜா' என்று அன்பாக விளித்ததைக் கேட்டு உள்ளூற மகிழ்ச்சியும் அடைந்தான்.

சுறுசுறுப்பாகப் பம்ப்பை எடுத்துக் கொண்டு அந்தப் பெண்ணை நோக்கிச் சென்ற அவன், "எந்தச் சக்கரத்திலே காத்து இறங்கியிருக்குது?" என்று கேட்டவாறு அப்போதுதான் அவளைப் புதிதாகப் பார்ப்பவன் போல் தலை நிமிர்ந்து பார்த்தான்.


இந்நேரம் வரை அவனைக் கவனித்துக் கொண்டிருந்த அவள், 'இதைக் கேட்டுத்தான் தெரிஞ்சு கொள்ள வேண்டுமா, முட்டாள்!' என்னும் பாவனையில் முகத்தைச் சுளித்தபடி தன் இடது கால் பெருவிரலால் முன் சக்கரத்தின் டயரை மிதித்துக் காட்டினாள். அது பசித்த பாம்பின் வயிறு போல் காற்று இறங்கித் தொய்ந்து தரையில் பிதுங்கிக் கிடந்தது.

(தொடரும்)


சிறு தொழிலுக்கு
எம்ஐஐஸி
நிதியுதவி
சிறு தொழில் ஒன்றினை ஆரம்பிக்கத் திட்டம் இருக்கிறதா?
அல்லது இப்பொழுதுள்ள தொழிலை விஸ்தரிக்க வேண்டுமா?
எதுவாயினும் எம் ஐ ஐ ஸி உங்களுக்கு உதவத் தயாராக உள்ளது.
எம் ஐ ஐ ஸியை அணுகுங்கள்.
நடுத்தர மற்றும் பெரு தொழிலுக்கும் எம் ஐ ஐ ஸி உதவி எப்பொழுதும் போல் கிடைக்கும்.
எம்ஐஐஸி
இதயபூர்வமான நிதியுதவி
மதரூஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்பொரேஷன் லிமிடெட்.
எல். எல். ஏ. கட்டிடம்,
150-A மவுண்ட் ரோடு, சென்னை-2,
கிளை: 1231, தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர்.
Criterion MIIC 2339



கம்பன் பல்கலைக் கழகம்







சென்னை பல்கலைக் கழகம், மதுரை பல்கலைக் கழகம் என்பது போல் கம்பன் பல்கலைக் கழகமும் ஒன்று இருக்கத்தான் செய்கிறது; யோசிக்க வேண்டாம்! கம்பனை ஒரு பல்கலைக் கழகம் என்று கூறுகிறவர் திரு சா. கணேசன். கம்பனை ஆழ்ந்து படித்து, ஆராய்ந்து, ரசித்து, ஆனந்தித்து, பிறருக்கு அவன் பாடல்களின் சுவையை எடுத்துச் சொல்லி, ரசிகமணி டி. கே. சி.யின் இலக்கியத் தோழராய் விளங்கி, கம்பனுக்கு விழா எடுத்து, அவன் புகழ் பரப்பித் தொண்டாற்றிய வகையில் ஸ்ரீ கணேசன் அவர்களை ஒரு ''கம்பன் பல்கலைக் கழகம்'' என்றே வர்ணிக்கலாம்.

''கம்பன் வாழ்க! கம்பன் புகழ் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க!''



இந்த ஒப்பரிய நிகழ்ச்சிக்குத் தமிழக அமைச்சர்கள் மாண்புமிகு நெடுஞ்செழியனும் மதியழகனும் வருகை தந்தனர். கம்பனது செஞ்சொற் கவி இன்பத்தை யெல்லாம் வானளாவப் புகழ்ந்து தமக்குள்ள இப்போதைய ஈடுபாட்டினைப் புலப்படுத்திக் கொண்டனர். நிதியமைச்சர் திரு மதியழகன் மணிமண்டபத்துக்கான அடிக்கல்லை நிறுவினார்.

கம்பனுக்கு எடுக்கப்படும் இந்த மணிமண்டபம் தமிழ்த் தாய் திருக்கோவிலாகத் திகழப் போகிறது என்றும், பன்னரும் பெரும் புகழ்ப் பழந்தமிழ்க் கலைகள் பயன்தரும் கூடங்கள் எல்லாம் இங்கு அமையப் போகின்றன என்றும் திரு சா. கணேசன் தம் வணக்க உரையில் கூறினார்.

மாலையில் சா. கணேசனுக்கு மணி விழா நான்கு மணிக்குத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. விழாவில் கலந்துகொள்ள இசைந்திருந்த அமைச்சர்கள் வருகையை நோக்கி எல்லோரும் காத்திருந்தனர். ''கம்பன் திருநாள் நிகழ்ச்சிகளின் போதெல்லாம் விநாடி பிசகாமல் நிகழ்ச்சிகளை நடத்தி நடத்திப் பழக்கிய சா. கணேசன் மணி விழா, தாமதமாவதா?'' என்று ஓரன்பர் சற்றுச்

என்று கணீரென முழங்கிக் கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாகக் காரைக்குடியில் 'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்ட' கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கு விழா எடுத்து வருகிறார் திரு சா. கணேசன். அவரது மணிவிழா 19-3-70ல் காரைக்குடியில் அன்பர்களால் சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

சா. கணேசன் அவர்கள் மணிவிழா வயதினை எட்டி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்போதே நல்லன்பர்கள் விழாக் கொண்டாட வேண்டுமென முற்பட்டபோது, தமக்கென எந்த ஒரு சிறு நிகழ்ச்சியும் நடத்தப்படக்கூடாது என்று வழக்கம் போல் அடித்துப் பேசி நிறுத்தி விட்டார். ''என்மேல் உள்ள அன்பினை, கம்பன் மீது காட்டுங்கள், அவன் புகழும், தமிழ்ச் செல்வமும் பரவ ஆவன செய்யுங்கள்'' என்று திசை திருப்பி விட்டார். அவ்வகையில் முயற்சிகளை மேற்கொண்ட அன்பர்கள் கம்பன் மணி மண்டபம் ஒன்றினைக் காரைக்குடியில் நிறுவத் தலைப்பட்டனர். அத்தோடு மணிவிழாச் சிறப்பினையும் ஏற்குமாறு சா. கணேசன் மனத்தையும் திருப்பி விட்டார்கள்.





1. கம்பன் மணிமண்டப அடிக்கல் நாட்டு விழாவில் தமிழக மந்திரிகளும் திரு சா. கணேசனும். 2. பாண்டிச்சேரி கம்பன் கழகத் தலைவர் திரு வேங்கடசுப்ப ரெட்டியார் திரு சா. கணேசனுக்குப் பொன்னுடை போர்த்துகிறார். 3. நாட்டரசன் கோட்டையில் கம்பன் சமாதியில் வழிபாடு - மலர் வணக்கத்துடன் தொடங்குகிறது. 4. திரு மகராஜன் உரை நிகழ்த்துகிறார். 5. தமிழ்க்கடல் திரு இராய சொக்கலிங்கம் அவர்கள்.



"பூ! காப்பியா இது? விளக்கெண்ணெய் மாதிரின்னு இருக்கு?"

"காளியம்மா நீ வாழ்க! இது என்ன திரவம் என்று இதுவரை புரியாமல் நான் திண்டாடிக் கொண்டிருந்தேன். நீயாவது கண்டு பிடிச்சியே! உனக்கு தாங்ஸ்!"

சத்தம் போட்டே கேட்டு வைத்தார். இதைக் கேட்ட கணேசன் சொன்னார்: "அழைப்பிதழில் என் கையெழுத்துப் போட்டிருந்தேனேயாகில் எப்படியும் நேரம் தவறாது! பிறரல்லவா போட்டிருக்கிறார்கள். அவர்களைக் கேளுங்கள்!"

ஒரு வழியாக அமைச்சர்கள் வந்தார்கள். விழாத் தொடங்கியது. முன்னாள் அமைச்சர் மன்றாடியார் வர இயலாது போனதால், தமிழ்க் கடல் இராய. சொக்கலிங்கனார் தலைமை ஏற்றார். தருமபுர ஆதீனம் உட்படப் பல சமயக் குரவர்களும், பேரறிஞர்களும் இலக்கிய ரசிகர்களும், அன்பர்களும் கலந்து கொண்டு, சா. கணேசனால் தாம் பெற்ற நன்மைகளுக்கெல்லாம் நெஞ்சார நன்றி கூறி வாழ்த்தினர். நாவலர் திரு நெடுஞ்செழியன், திரு கணேசனின் சோதர அன்பை, நட்புச் செல்வத்தைப் போற்றினார். உலகத் தமிழ் மாநாட்டில் அவர் அமைத்த காட்சிக் கூடச் சிறப்பையும், கல்வெட்டு ஆராய்ச்சி உலகில் அவர் ஆற்றும் ஒப்பரிய பணிகளையும் பட்டியலிட்டார். பொன்னாடை பெறப் பொருத்தம் உடையவர், எல்லா வகையிலும் தகுதி உடையவர் அண்ணன் கணேசனே என்று பொன்னாடையினை அணிவித்தார் நாவலர். அப்போது மங்கல வாத்தியம் விண்ணெட்ட முழங்கியது!

அன்பர்களால் தொகுக்கப்பெற்ற ஒரு லட்சத்து ஓராயிரத்து ஒரு ரூபாய் நிதியை, கம்பன் மணி மண்டபத்துக்கெனத் திரு கணேசனிடம் வழங்கிப் பேசிய நிதியமைச்சர் திரு மதியழகன், அடுத்த ஆண்டுக்குள்ளேயே மண்டபம் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று உற்சாகம் தந்தார்.

மதுரை பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீ. அவர்கள் மணி மண்டபத்துக்கு மட்டுமல்ல, கணேசனார் மேற்கொண்ட பணிகள் ஊழூழி காலம் நீடிக்க இன்று அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது என்றார்.

நீதிபதி எஸ். மகராஜன் அவர்கள், டி. கே. சி.க்கும் கணேசனுக்கும் இருந்த அன்பைப் புலப்படுத்தி, எல்லாருடனும் நேய உறவோடு பழகி, அளப்பரிய தமிழ்க் காதலை அனைவரிடமும் ஊட்டுவித்த கணேசன், ஒரு பெரிய அறிவுக் களஞ்சியம் என்றார். "நான் எங்காவது கப்பலில் பிரயாணம் செய்ய நேரிட்டால் அப்போது கப்பல் உடைந்து எங்கேனும் தீவாந்தரத்தில் ராபின்சன் குருசோ போல் தனித்திருக்க நேரிட்டால் என்னோடு சா. கணேசன் மட்டும் இருந்தால் போதும். உலகம் முடியும் வரை உயிர் வாழ்ந்தாலும் எனக்கு அலுப்புத் தட்டாது!" என்று பாராட்டினார்.

பேராசிரியர் அ. சீநிவாச ராகவன் சா. கணேசனின் பலதுறை அறிவையும் ஆங்கில மொழி ஈடுபாட்டையும் அழகுபட எடுத்துச் சொன்னார். 'கம்பன் என்றென்றும் வாழ்வதற்காக கணேசனும் நீடு வாழ்க' என்று முடித்தார். பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் கணேசனின் வாதத் திறமையையும், பிறரைப் புண்படுத்தாத நாட்டத்தையும் விளக்கினார். திரு சி. வி. சி. டி. வெங்கடாசலம் செட்டியார், திருமதி உமையாள் ராமனாதன், அன்பு வேதாசலம் ஆகியோர் சா. கணேசனின் கல்வித் தொண்டினை வியந்துரைத்தனர். அன்பர் எல்லாம் புகழ்ந்து பேசப் பேச ஆவி ஒடுங்கி, உடல் குறுகி, "தம்புகழ் கேட்டார் போல் தலைசாய்த்து" அமர்ந்திருந்த சா. கணேசன் நன்றிதெரிவித்துப் பேச எழுந்தார். கம்பனில் தமக்கு ஈடுபாடு எழக் காரணங்களைச் சொன்னார். கம்பன் ஒரு மாபெரும் பல்கலைக் கழகம் என்றும் வற்றாத அறிவூற்று என்றும் வியந்தார். கம்பனுக்கு எடுக்கப்படும் மணி மண்டபம் தமிழ் நாட்டிலேயே சிறந்த ஒன்றாக அமையப் போகிறது என்றும் ஆறு பட்டை வடிவில் அமையப் போகும் கலைக் கோவில், சிறந்த சிற்பச் செல்வங்களுடன் திகழும் என்றும், இருபது லட்ச ரூபாய் செலவாகும் என்றும் கூறி, இது தமிழ் நாட்டுக்கே பொது என்றார். சல்லி முதல் கோடிவரை தந்து எல்லோரும் இத்திருப் பணியில் பங்கேற்க வேண்டும் என்று அழைத்தார். தாம் பெற்ற அனுபவ அறிவெல்லாம் பெரியோரும், அறிஞர்களும் தமக்கு இட்ட பிச்சை என்றார்.

அரசியலில் ஈடுபட்டு உடைமைகளை எல்லாம் இழந்தவர் சா. கணேசன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நீட்டிய துப்பாக்கிச் சனியனுக்கு முன் சட்டையைக் களைந்தெறிந்து நெஞ்சு நிமிர்த்திச் சென்றவர் சா. கணேசன். மணி விழா நாளன்று, தம் சட்டையற்ற திருமேனி மறையப் பொன்னாடையை அணிந்து கொண்டு மணப் பெண் போல் அவர் அமர்ந்திருந்தார்.

வாழ்க அவர் பல்லாண்டு. வளர்க அவர்தம் தொண்டு!

—ச. குழந்தைநாதன்



மேலே: அன்னை ஜ்வாலாமுகியின் கோயில். (மலைவாசிகளின் குல தெய்வம்.)
கீழே: இமயக்கன்னி.

(படங்கள்: கட்டுரை ஆசிரியர் எடுத்தவை.)

பனிமலர்கள்

பாரத நாடு பல்வேறு தட்ப வெப்ப நிலைகளை உடையது. பனிபடர் மலைகளும், மணல் நிறைந்த பாலைகளும், கடல் நீர்ச் சதுப்பும் ஏரிகளை சூழ்ந்த நல்விலங்களும் இந்த நன்னாட்டின் சிறப்பியல்புகள். அவற்றை ஒட்டியே மக்களின் உருவமும், ஒழுக்கமும், மொழியும் உருவாகியிருக்கின்றன.

காங்டா பள்ளத்தாக்குக்கு வடமேற்கே தௌலாதார் மலையடுக்குகளிடையே உள்ள சம்பா வாழ் மக்கள் இந்த உண்மைக்கு ஓர் உதாரணம். சம்பாவாழ் பெண்கள் முழங்கால் வரை தொங்கும் 'துவாஞ்சடி'யை அணிகிறார்கள். இடுப்பைச் சுற்றிக் கம்பளிக் கயிறு. இதற்கு டோரா என்று பெயர். தலையையும் தோளையும் தழுவும் துப்பட்டா. கழுத்திலும் காதிலும், கையிலும் வெள்ளி நகைகள். நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு. தங்கத் தகட்டில் சந்தனத்தைக் குழைத்துத் தடவிய நிறமுடைய இந்தப் பெண்களின் நெற்றிச் சிந்தூரம் அவர்களுக்கு ஒரு தெய்வீகக் களையை ஊட்டுகிறது. கன்னங்கள் ரோஜாச் சிவப்பு. உதடுகளோ மாதுளையின் உட்புறம்.

இந்தச் சம்பாவாழ் மக்கள் அனைவரும் துர்க்கை உபாசிகள். இவர்களுடைய இசை, கூத்து, ஆடல் அனைத்தும் சமயத்தை அடிப்படையாகக் கொண்டவை. பாடல்கள் எல்லாம் அன்னை வைஷ்ணவியின் புகழைப் பேசும். மொழியோ மூக்காலும் சம்ஸ்கிருதம். அவர்கள் பேசுவதை பஹாடி பாஷா — மலை மொழி என்று கூறுகிறார்கள். அதிலிருந்து அந்த நாட்களில் மொழியின் தன்மை எப்படி இருந்தது என்பது விளங்குகிறது.

இந்த மலைவாசிகளுக்குக் 'கத்திகள்' ('க', 'த' இரண்டும் கன எழுத்து) என்று பெயர். ஆண்டில் பெரும் பகுதி இவர்கள் மலையின் மீது வசிக்கிறார்கள். பயிர்த் தொழில்தான் பிரதானம். அங்கே பட்டாணி அளவுள்ள உளுந்து விளைகிறது. பார்லியும் கோதுமையும் உண்டு. குடிப்பது ஆட்டின் பால்தான். ஆடுகளின் எண்ணிக்கை இவர்களது செல்வத்தின் அளவை நிர்ணயிக்கிறது. தசரா பண்டிகையைத் தம்ஹாரில் கொண்டாடி விட்டு இவர்கள் தங்கள் ஆட்டு மந்தையுடன் சாரலுக்கு வருகிறார்கள். கம்பள நூலும், போர்வைகளும், விரிப்புக்களும் மலைச் சாரலில் உள்ளவர்களுக்கு விற்கிறார்கள். குளிர் குறைந்ததும் மறுபடியும் மலை வாசம்.

ஔரங்கஜேபின் கொடுமை தாங்காமல் தங்கள் சமய ஒழுக்கத்தைக் காத்துக் கொள்ளும் பொருட்டுத் தொலைவிலுள்ள மலை உச்சிக்கு ஓடி வந்தவர்கள் இவர்களுடைய முன்னோர்கள். இவர்களிடையே நால்வருணத்தவரும் உள்ளனர். ஆனால் பேசும் மொழியும் உருவ அமைப்பும் ஒன்றுதான்.

பெண்களின் உருவ அழகும், நிறமும் உள்ளத்தில் கலை உணர்வை எழுப்பும். 'தீண்டப்படாத பனி மலர்' (அனாக்ராதம்—புஷ்பம்) என்று வடமொழிக் கவிகள் இந்த எழிலைத்தான் கூறினார்களோ?

வீரத் தொண்டரான பந்தா பைராகி, மொகலாயர்களிடமிருந்து தலை மறைவாகச் சில காலம் சம்பா மலை வெளியில் வாழ்ந்தார். திருமணம் செய்துகொள்ள வேண்டாம் என்ற குருவின் ஆணையையும் மீறி அவர் இந்த மலையரசனின் மகளை மணந்து கொண்டார். இந்தப் பெண்களை நேரில் கண்டால் அவர் அப்படிச் செய்ததில் வியப்பு எதுமில்லை என்பது தெளிவாகும்.

— தி. சா. ராஜு



ஸூ டஸ்ட் டீ தரமான தேநீரின் சுவையையும்
அழுத்தமான தேநீர் சத்தையும் அளிக்கிறது

ஸூப்பர் டஸ்ட் கிடைப்பவற்றுள்
மிகச்சிறந்த CTC டஸ்ட் டீ

ப்ரூக் பாண்ட் நிபுணர்களால் பக்குவம் செய்யப்பட்டிருப்பதே அது சிறந்து விளங்கக்காரணம்



★க்ரஷ், டியர், கர்ல் — இந்த தனிப்பட்ட டீ தயாரிக்கும் முறையானது விரைவில் கரையவும், மிகுந்த தேயிலைச்சத்துக் கிடைக்கவும் உறுதியளிக்கிறது.

அத்தியாயம் 14

வாகவின் சிடுசிடுப்புக்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. அன்று ஆபீசில் ரூபகுமாரை வாசு நேரில் சந்திக்கும் படியாகி விட்டது. ரூபகுமாரைச் சந்தித்ததுமே முதலில் அவ்விடத்தை விட்டு விலகத்தான் வாசு நினைத்தான். ஆனால் கூடவே ஒரு வீம்பும் பிடிவாதமும் தொடர்ந்தன. ரமாவை இவன் மணந்து கொண்டு விட்டதால் நாம் எதற்கு ஒதுங்கிப் போக வேண்டும்?

ரூபகுமார் தன் பெருமையைக் காட்டவே போல் வாசுவின் அருகில் வந்தான். அவன் ஆபீஸ் டைரக்டர் என்ற மரியாதை கூட வைக்காமல் வாசு குனிந்த தலைநிமிராமல் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

''மிஸ்டர் வாசு! உடம்பு நேராகி விட்டதா?'' ரூபகுமார் விசாரித்தான்.

''என்னைப் பார்த்தாலே தெரியுமே, உடம்பு மனம் எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றன என்று!'' வெடுக்கெனக் கூறினான் வாசு.

''அப்படித்தான் இருக்க வேண்டுமென்பது என் எண்ணம். கடவுள் விருப்பத்தில் எல்லாம் நடக்கும்போது நாம் ஒன்றையும் மாற்ற முடியாது. ரமாவும் அதைத்தான் கூறுவாள்.''

வாசு பதிலே கூறாமல் தன் வேலையில் ஈடுபட்டான்.

''மிஸ்டர் வாசு! உங்களுக்குப் பிரமோஷன் தர நினைக்கிறோம். நீங்கள் செய்திருக்கும் பணிகளைக் குறிப்பிட்டு எழுதினால் ஆவன செய்வேன்!''

''பிரமோஷனை விரும்பும் காலம் வரும்போது நான் அதற்கு உரியவரிடம் மனு அனுப்புகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்.''

''உரியவர் என்ற முறையில் என் பார்வைக்கு வரும். அப்போது நான் கண்டிப்பாகக் கவனித்துக் கொள்வேன்.'' ரூபகுமாரும் சளைக்காமல் சொன்னான். சற்று மௌனத்துக்குப் பிறகு மீண்டும் கூறினான். ''ரமாவுக்குத் தனியாக ஒரு கார் கொடுத்திருக்கிறேன். அவள் விரும்பும்போது உங்களை வந்து பார்க்கட்டுமே!''

வாசு ஏதோ கூற ஆரம்பிக்கு முன் அங்கு தலைமை மானேஜர் வந்துவிட்



டார். ரூபகுமாருடன் அவர் ஏதோ பேச விரும்பியவராய்த் தம் அறைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

வாசு மாலை வீடு திரும்பியபோது ரூபகுமாரைச் சந்தித்த நிகழ்ச்சிதான் மனத்தில் சுற்றிக் கொண்டிருந்தது. அவன் ரூபகுமாரின் எண்ணத்தைப் புரிந்து கொண்டிருந்தான். வேண்டு மென்றே ரமாவுடன் தான் நடத்தும் உயர் வாழ்வை எடுத்துக் காட்டுவதற்கும், வாசுவின் நிலையைத் தன்னால் உயர்த்த முடியும் என்ற அகம்பாவத்தைக் காட்டுவதற்குமே அவன் அப்படிப் பேசியிருக்கிறான்; மனத்தைக் கிளறி விட்டு வேடிக்கை பார்த்திருக்கிறான். வாசுவுக்கு இதெல்லாம் நன்றாகப் புரிந்தது. புரிந்தும் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லையே!

அந்த எரிச்சல் காரணமாகத்தான் அவன் தன் தாயாரிடம் 'எந்த மாட்டுப் பெண்ணுக்கு என்ன வாங்கப் போகிறாய்?' என்று கேட்டான்.

''நான் பாக்கியம் செய்தவளடா வாசு. மாட்டுப்பெண் கையில் இடிபட வேண்டாம்'' என்றவள், அவன் பனியனைச் சுட்டிக் காட்டி ''இந்தக் கிழிசல் பனியனை வீட்டைத் துடைக்கும் துணியாக எனக்குக் கொடு. அதை நான் அபகரித்துக் கொண்டு விட்டால் உனக்குப் போட்டுக் கொள்ளப் பனியன் வேண்டுமே! அதை வாங்கத்தான் கடைக்குப் போவோம் என்றேன்!'' என்றாள் தேவகி.

* * *

தன் வீட்டையும் தன்னையும் தேடிக் கொண்டு கல்லூரித் தோழி வசந்தி வந்து நிற்பாள் என்று ரமா சிறிதும் எதிர்பார்க்க வில்லை.

''வா வசந்தி!'' என்று வரவேற்றாள்.

வசந்தி தன் விவாகத்தைப் பற்றி ஏதேனும் கேட்டு விடுவாளோ என்று ரமாவுக்கு உள்ளூற அச்சம்தான். ஆனால் அந்தப் பேச்சே எடுக்காமல் என்ன என்னமோ பேசிக் கொண்டிருந்தாள் வசந்தி.

தான் வந்தது கூடத் தெரியாமல் ரமா யாருடனோ உற்சாகமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட ரூபகுமார் தன் மனத்தை அடக்க முடியாமல் அவர்கள் இருந்த இடத்துக்கே வந்து விட்டான்.

வசந்தி ரூபகுமாரைப் பார்த்ததுமே எழுந்து கரம் குவித்து வணக்கம் செலுத்



னுள். ரமாவின் முகத்தில் மெள்ள மகிழ்ச்சி மறைவதற்கான அறிகுறி தென்பட்டது. ஆனால் அதை வசந்தி கவனிப்பதற்குள்ளாக அவள் சமாளித்துக் கொண்டு விட்டாள்.

பதிலுக்கு வணக்கம் செலுத்திய ரூபகுமார் அங்கேயே எதிரில் அமர்ந்து விட்டான். "ரமா! இவர் யார் என்று அறிமுகப் படுத்தவில்லையே!"

"இவள் என் கல்லூரித் தோழி வசந்தி!" என்றாள் ரமா.

"அப்படியா?" என்றவன், வசந்தியை நோக்கி, "நீங்கள் எல்லோரும் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தால் ரமாவுக்குப் பொழுது போக்காக இருக்கும். நீங்கள் இந்த ஊரில் தானே இருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

வசந்தி மெள்ள முறுவலித்தாள். பிறகு தன் கைப்பையிலிருந்து ஒரு விவாக அழைப்பிதழை எடுத்து அவளிடம் நீட்டி, "இதுவரை இந்த ஊர்வாசிதான். இன்னும் பதினைந்து நாட்களில் பம்பாய் வாசியாகி விடுவேன்! ரமா, உன்னைத்தான் நான் முக்கிய விருந்தாளியாக எதிர்பார்க்கிறேன். உன் கணவரை அழைத்துக் கொண்டு நீ கண்டிப்பாக வர வேண்டும். என்ன?" என்றாள்.

"விவாகத்துக்கா அழைக்க வந்திருக்கிறாய்? முதலிலேயே கூறுவதற்கென்னவாம்?" என்று ரமா கோபித்தாள்.

"எப்போது கூறினால் என்ன ரமா? விவாக தினம் முழுதும் கூடவே இருந்து நடத்தி வைக்க வேண்டிய பொறுப்பு உங்கள் இருவரையும் சேர்ந்தது" என்று கூறி அவர்களிடமிருந்து விடைபெற்றாள் வசந்தி.

* * *

"ரமா! நானே வசந்திக்கு விவாகம் என்பதை மறந்து விட்டாயா?" மறக்காமல் கேட்டான் ரூபகுமார்.

"மறக்கவில்லை. அவளுக்கு ஏதாவது உயர்ந்த பரிசளிக்க விரும்புகிறேன்" என்றாள் ரமா.

"இந்த வீடும், பொருளும், நானும் உன்னுடையவர்கள். நீ எது வேண்டுமோ, கொடுக்கலாம்!" என்றவன் அவளோடு கடைக்குப் புறப்பட்டு விட்டான். இருவரும் ஒரு துணிக் கடைக்குச் சென்றனர். நாகரிக மோஸ்தரில் உயர் ரகப் புடவை தேடுவதில் முனைந்திருந்தாள் ரமா. வியாபாரக் கும்பலில் வாசுவும் தேவகியும் வந்திருப்பதை அவள் கவனிக்கவில்லை. ஆனால் ரூபகுமார் கவனித்தான்.

"இதோ பார், ரமா! இது உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்று பெரிய குரலெடுத்துக் கேட்டவன், இன்னொரு துணிகரமான காரியமும் செய்தான்.

அவள் பக்கத்திலிருந்த புடவையை எடுப்பது போல் அவள் இடுப்பைச் சுற்றி மெள்ளக் கையைப் போட்டான். புடவையைப் பொறுக்குவதில் முனைந்திருந்த ரமா அவன் செய்கையையோ, அதைக் கவனித்துக் கொண்டிருந்த வாசுவையோ பார்க்கவில்லை.

பின்னால் நின்றிருந்த வாசுவின் மனம் நிமிடத்துக்கு நிமிடம் கோபக் கனலையும், வெறுப்பையும் உமிழ்ந்தது. தேவகியோ மகனை நோக்கித் தவித்துக் கொண்டிருந்தாள். 'பனியனும் ஷர்ட்டும் வாங்க இன்றைய தினத்தை ஏன் தேர்ந்தெடுத்தோம்? அதோடு ஏன் இந்தக் கடைக்கு வந்தோம்?' என்றாகி விட்டது அவளுக்கு.

புடவையைப் பொறுக்கி விட்டுத் திரும்பிய ரமா வாசுவும் தேவகியும் நிற்பதைக் கண்டதும் துணுக்குற்றாள். உடலெல்லாம் நடுங்கியது. "வா...சு!" அவள் வாய் மெள்ளக் கூவியது.

"ரமா!"

கடை என்றும் பாராமல் வாசுவும் கர்ஜித்தான். தேவகி தவித்துப் போனாள்.


ரமா விடுவிடென்று கடையை விட்டு வெளியே வந்து காரில் அமர்ந்து கொண்டாள்.

அப்போதுதான் வாசுவைப் பார்த்தவன் போல் ரூபகுமார் அவன் அருகில் வந்தான். தேவகியை நோக்கிக் கரம் குவித்தான். "நீங்கள் இருப்பதை நான் பார்க்கவில்லை. ரமா ஒரு புடவை கேட்டாள். வாங்கலாம் என்று வந்தோம். எனக்கு அவள் மட்ட ரகப் புடவை உடுத்துவது பிடிக்காது. அதனால் உயர் ரகத்தைப் பொறுக்கினேன். இங்கிருந்து



இதோ ஒரு

மிக வலிமையான டயர்




அதிக மைலேஜையும்
அதிக பாதுகாப்பையும்
தர பயர்ஸ்டோனின்
மும்மடங்கு சக்தி அமைப்பு முறை

கல்தோறும் எண்ணற்ற குழிகள், ஏற்றத்தாழ்வுகள், கரடுமுரடான கற்கள், செப்பனிடப்படாத பாதைகள் இவற்றின் வழியே காரோட்டிச் செல்ல நேரிடுகிறதல்லவா? இதனால் சாதாரண டயர் மிக சீக்கிரம் தேய்ந்து விடுகிறது. புதிய டயர்களின் விலையோ சொல்லவே வேண்டாம். அதனால் தான் பயர்ஸ்டோன் தனக்கே உரிய இந்த விசேஷ மும்மடங்கு சக்தி அமைப்பைப் பின்பற்றுகிறது.

மும்மடங்கு சக்தி அமைப்பு என்றால் என்ன?

இந்த அமைப்பின்படி ஒரு விசேஷ முறையில்: 1. ட்ரெட், டயருடன் பாண்ட் செய்யப்படுகிறது 2. டயரின் பக்கங்கள் வலிமைப்படுத்தப் படுகின்றன 3. ஒவ்வொரு கார்டும் இன்ஸுலேட் செய்யப்படுகிறது.



40

பயர்ஸ்டோன்

இந்தியா முழுவதும் விற்கப்படுகிறது—
இன்றே பயர்ஸ்டோன் விற்பனையாளரை அணுகுங்கள்

நகைக் கடைக்குப் போக வேண்டும். முத்து பிரேஸ்லெட்டுக்கு ஆசைப் படுகிறாள்.''

தேவகியும் வாசுவும் ரமா—ரூபகுமாரின் அன்னியோன்யத்தைக் கண்டு குமுற வேண்டும் என்று திட்டம் தீட்டியே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இப்படிப் பேசினான் ரூபகுமார்.

வீட்டுக்குத் திரும்பியதும் வாசு பெரிதாகச் சத்தமிட்டுக் கூவினான்: ''பார்த்தாயா அம்மா, பணம் படுத்தும் பாட்டை! இந்தப் பணம் மனிதர்களின் மனத்தை எப்படியெல்லாம் மாற்றி விடுகிறது! இந்தப் பணத்துக்கு ஆசைப்பட்டுத்தானே ரமா திடீரென்று என்னை மறந்து ரூபகுமாரை அடைந்திருக்கிறாள்! இல்லாவிட்டால் தினம் ஒரு புடவை, தினம் ஒரு நகை இவளுக்குக் கிடைக்குமா?''

தேவகி பதில் கூற முடியாமல் தவித்தாள். என்ன இருந்தாலும் அவளது பெண் மனம் தப்பாக எடை போட விரும்பவில்லை. எந்தச் சூழ்நிலையில் தன் மனத்தை மாய்த்துக் கொண்டு ரமா இந்தத் திருமணத்துக்கு உடன்பட்டாளோ என்றுதான் எண்ணமிட்டது.

* * *

கோசல்ராம் அன்று திடீரென்று முன் அறிவிப்பு இல்லாமலேயே ரமாவின் வீட்டில் வந்து நின்றார். அப்பாவை எதிர்பார்த்திராத ரமா அவரைக் கண்டதும் திடுக்கிட்டாள்.

''என்ன ரமா, இப்படி வாடி இளைத்து நிற்கிறாய்? உடம்புக்கு ஒன்றுமில்லையே?'' என்று கேட்டதோடு நில்லாமல், கோசல்ராம் ரமாவின் நெற்றியையும் ஆதரவோடு தொட்டுப் பார்த்தார்.

''ஒன்றுமில்லை, அப்பா. கொஞ்சம் தலை வலியாக இருந்தது. படுத்து எழுந்தும் களைப்புப் போகவில்லை''

''தலைவலியாக இருந்தால் மருந்து வாங்கிச் சாப்பிடுவதற்கென்ன?'' என்றவர் ரூபகுமாரைப் பார்த்து''என்னப்பா, ரூபகுமார்! ரமாவை டாக்டரிடம் அழைத்துப் போய்க் காட்டவில்லையா?'' என்று கேட்டார்.

''அப்படித்தான் யோசனை செய்திருந்தோம். அதற்குள் நீங்கள் வந்து விட்டீர்கள்!'' ரூபகுமார் ரமா நடத்திய நாடகத்தில் ஓரளவு பங்கெடுத்துக் கொள்ள முன்வந்தான்.

''அப்படியானால் இப்போதே கிளம்பு!'' கோசல்ராமே டாக்டர் வீட்டுக்குப் புறப்படத் தயாராகி விட்டார்.

''வேண்டாம் அப்பா. எனக்கு இப்போது தலைவலி தேவலை. முகம் கழுவிக்கொண்டு வந்து விடுகிறேன். சரியாகப் போய்விடும்'' என்றவள், உடனே சென்று முகம் கழுவித் தலையை வாரிக் கொண்டு வேறு நல்ல புடவை உடுத்திக் கொண்டு திரும்பி வந்து விட்டாள்.

''உட்கார நேரமில்லை. நீங்கள் இருவரும் கிளம்புங்கள்.''

''டாக்டர் வீட்டுக்கா? அதுக்குத்தான் அவசியமில்லை என்று ரமா கூறி விட்டாளே!''

''அப்படியானால் டாக்டர் வீட்டுக்கு வேண்டாம். கோவிலுக்குப் போய் வருவோம், வா!'' என்றார் கோசல்ராம்.

''கோவிலுக்கா? திடீரென்று என்னப்பா விசேஷம்?'' என்று திகைப்புடன் கேட்டாள் ரமா.

''ரூப குமார் உன்னிடம் சொல்லவில்லையா? வியாபாரத்தில் எதிர்பாராது லாபம் கிடைத்திருக்கிறது. அதோடு புதுக் கிளை ஆரம்பித்த பிறகு இன்னும் கோவில் பக்கம் போகவே யில்லை!''

''காந்தி வரவில்லையா?''

''அந்தப் பெண்ணோடு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எப்போதும் சீதாபதியைக் கவனிப்பதிலேயே ஈடுபட்டிருக்கிறாள். அவருக்கு வீட்டோடு நடமாடு மளவுக்கு உடல்நிலை குணமாகிக் கொண்டு வருகிறது. அவரை வீட்டில் சேர்த்துவிட்ட பிறகுதான் நம் பெண் நம் வீட்டில் தங்குவாள் போலிருக்கிறது....'' என்றார் கோசல்ராம்.

சீதாபதியின் பெயரைக் கேட்டதுமே ரமாவுக்குப் பழைய நினைவுகள் பளிச்சிட்டன. சீதாபதியின் சேவைக்கு வாசுவையும் ரமாவையும் ஆனந்த் நம்பியிருந்தாரே! இப்பொழுது நம் செய்தி அவருக்குத் தெரிந்திருக்குமோ? அவள் சிந்தனையைக் கலைத்து ரூபகுமாரோடு அவளையும் அழைத்துக்கொண்டு கோவிலுக்குப் புறப்பட்டார் கோசல்ராம்.

கோவிலில் ஸ்வாமி தரிசனம் செய்த பிறகுதான் திடீரென்று அவருக்குத் தாம் ஒரு வியாபாரப் புள்ளியை அந்த நேரத்துக்குச் சந்திக்க வருவதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.


''அடடா! சந்துலாலைச் சந்திக்க வருவதாகச் சொல்லி யிருந்தேனே! நேரமாகிவிட்டதே!''

''சந்துலாலையா பார்க்க வேண்டும்? பெரிய புள்ளியாயிற்றே! ரொம்ப நல்லவர். நேற்றுத்தான் என் ஆபீஸ் அறைக்கு வந்து ஒன்றரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். அவரைச் சந்திக்காமல் இருந்து விடாதீர்கள். முத

நாம் முன்னுக்கு வருவதில் அக்கறை கொண்டுள்ள மிகச் சிலரில் ஒருவர்-பஸ் கண்டக்டர்!



லயோலா ஜோக்!



சபாக்காரர்: அடுத்த மாதம் நம்ம சபாவில் ஒரு கச்சேரி. கடம், சித்தார், கஞ்சிரா, தபேலா, மிருதங்கம், வயலின், மோர்சிங், கொன்னக்கோல் எல்லாம் உண்டு.

நண்பர்: அப்படியானால் மேடையிலாவது கூட்டம் இருக்கும்னு சொல்லுங்க!

லயோலா கல்லூரி மலரிலிருந்து எடுத்து அனுப்பியவர்: 'பாலி'

வில் கிளம்புங்கள். நானும் ரமாவும் டாக்ஸியில் வீட்டுக்குப் போய்க்கொள்கிறோம்!'' என்றான் ரூபகுமார்.

''உனக்கு அவரைத் தெரியுமா? அப்படியானால் நீயும் என்னுடன் வா. அறிமுகத்துக்கு உதவியாக இருக்கும். ரமாவை நாம் வீட்டில் இறக்கி விட்டு விட்டுப் போகலாம்!''

''வேண்டாம். நான் ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு போய் விடுகிறேன். நீங்கள் இருவரும் சந்துலாலைப் பார்க்கப் போய் வாருங்கள்!'' என்று ரமா குறுக்கிட்டுக் கூறினாள்.

இருவரும் சென்றுவிட்ட பிறகு ரமா தெருவில் தன் போக்கில் நடக்கலானாள். டாக்ஸியைப் பிடித்து உடனே வீடு திரும்ப வேண்டும் என்ற எண்ணமே அவளுக்கு ஏற்படவில்லை.

ஒரு கடை வாசலில் போய் நின்ற போது அவள் பார்வை அங்கு நின்றிருந்த தேவகியின் மீது விழுந்தது. தேவகியும் எதிர்பாராத நிலையில் ரமாவைப் பார்த்துவிட்டாள். இருவரும் ஒரு நிமிட நேரத்துக்குத் தங்கள் கண்களை அகற்ற முடியாமல் திணறினர்.

சட்டென்று தேவகி சமாளித்துக் கொண்டு விட்டாள். பரிசயமற்ற யாரோ ஒரு பெண்ணைப் பார்த்துவிட்டது போல் அவள் கடையில் சாமான் வாங்கத் தலையைத் திருப்பிக்கொண்டாள். ரமாவுக்கு நெஞ்சே வெடித்து விடும் போல் இருந்தது. அவளால் பொறுக்க முடியவில்லை. மெள்ளத் தேவகியின் அருகில் சென்று ''அம்மா!'' என்று அழைத்தாள்.

அப்படியும் தேவகி முகத்தைத் திருப்பவில்லை.

''அம்மா! நீங்க கூடவா என்னை மறந்து விட்டீர்கள்?'' என்ற ரமாவின் குரல் அடைத்தது. பேச முடியவில்லை.

தேவகியின் நெஞ்சம் துடிப்போடு உறவாடியது. மகனை அலைய விட்டுத் தவிக்க விட்டவள் இந்தப் பெண் என்ற வேதனை ஒரு புறம். இளைத்துத் துரும்பாகித் துயரே உருவாக நிற்கிறாளே, பாவம் என்ற சிந்தனை ஒரு புறம். தேவகி மெள்ளத் திரும்பி ரமாவை நோக்கினாள். பிறகு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

''அம்மா! பேசக்கூட விருப்பமில்லையா?'' ரமா மீண்டும் கெஞ்சினாள்.

''எத்தனையோ பேர்களிடம் பேசவில்லையா? அதுபோல் உன்னுடனும் பேசலாம். ஆனால் மகனைத் தவிக்க விட்டவள் என்ற நோக்குடன் தாயாரின் மனம் முன்னின்று உன்னோடு பேசுவதைத் தடைப்படுத்துகிறதே அம்மா! பேசினால் என் மனம் எதையாவது சொல்லத் தூண்டும். பிறகு இருவருக்குமே கெடுதல். அதனால் பரிசயமற்றவர்கள் என்ற நிலையில் நாம் ஒருவரோடு ஒருவர் பேசாமல் ஒதுங்கிவிடுவதே நல்லது'' என்று கூறிய தேவகி விழி ஓரத்தில் வந்து தேங்கிய கண்ணீரை மெள்ளப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

''ஐயோ அம்மா! அப்படியெல்லாம் பேசாதீர்கள். நான் தாயற்றவள். உங்களையே நான் அம்மாவாக நினைத்தவள். இப்போதும் அப்படியே நினைக்கிறேன். ஒரு மகளை ஒரு தாயார் தள்ளி விட முடியுமா, அம்மா?...அம்மா...அம்மா...'' ரமாவின் குரல் நெகிழ்ந்து உணர்ச்சியோடு கலந்து விட்டது.

சுற்று முற்றும் ஓரிருவர் அவர்களைக் கவனிப்பதைத் தேவகி பார்த்து விட்டாள். ரமாவின்மீது அவளுக்குச் சினம் தான் என்றாலும் அந்த நடுத் தெருவில் பல கேள்விகள் கேட்டு அவளை அவமானப்படுத்த விரும்பவில்லை.


உங்களை விட நான்
சக்தி மிகுந்தவன்
நான் பருகுவது ஓவல்டின்
HEALTH STRENGTH ENERGY
OVALTINE
The Supreme Food Beverage
ஆரோக்கியம்
வலிமை
சக்தி


ப்ளாஸ்டார்ச்
வாங்கும்போது
நீங்கள் பெறுவது
உள்ளும்
புறமும்
உன்னதமான
ஒரே
டார்ச்
STL
PLASTORCH
நிபுணத்துவம் வாய்ந்த
தொழில்நுட்பத்திறனின் பயனே ப்ளாஸ்டார்ச்!

"ரமா! இது வீதி. அதிகம் பேசுவது இருவருக்கும் நல்லதல்ல. தனித்துப் பேசுவதே நல்லது. ஆனால் அதற்குச் சந்தர்ப்பமே நமக்குக் கிடைக்காது. ஏனெனில் பணக்காரியான உன் வீட்டுக்கு ஏழையான நான் வருவது நல்லதல்ல. என் வீடோ குடிசை. மாளிகையில் வசிக்கும் நீ அங்கு வரவும் மாட்டாய்..." என்றாள்.

ரமா சட்டென்று தேவகியின் வாயைப் பொத்தினாள். "அம்மா, நீங்களா அம்மா இப்படிப் பேசுகிறீர்கள்? நீங்களா...? நீங்களா...?" கூவிவிட்டாள் ரமா. உடனே அப்பக்கம் சென்று கொண்டிருந்த டாக்ஸியை நிறுத்தினாள். தேவகியை அதில் ஏறும்படி கட்டாயப் படுத்தினாள். டாக்ஸியை வாசுவின் வீட்டுக்கே விடச் சொன்னாள்.

"ரமா! நீ ஏதோ துணிச்சலில் வந்துவிட்டாய். உன் கணவன் என்ன நினைப்பானோ?" என்றாள் தேவகி.

"அதற்காகக் கவலைப்பட வேண்டாம். என் இஷ்டம், நான்வருகிறேன்!" தைரியத்துடன் சொன்னாள் ரமா.

"அதுதான் தெரிகிறதே! உன் விருப்பத்தில்தான் எல்லாம் நடக்கிறது. உன் விருப்பத்தில்தான் நீ வாசுவை நேசித்தாய். உன் விருப்பத்தில்தான் அவனை மறந்து ரூபகுமாரை மணந்தாய். உன் விருப்பத்தில்தான் இப்போது வாசு தவித்துக் கொண்டிருப்பதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். உன் விருப்பத்தில்தான் மகன் துயரைச் சகியாது ஒரு தாயும் வேதனையில் அல்லாடுவதை நீயே பார்க்கிறாய்..." தேவகியின் வாயிலிருந்து முட்டி மோதிக் கொண்டு சுடச் சுட வந்தன சொற்கள்.

"அம்மா! உண்மையாகச் சொல்லுகிறேன். என் உயிருக்கு உயிரான வாசுவின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். வாசுவின் உயிரைக் காப்பாற்றவே நான் ரூபகுமாரை மணந்தேன்.... அம்மா! என்னை நம்புங்கள். வாசுவைக் காட்டிலும் அதிக வேதனையிலும் துடிப்பிலுமே நான் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறேன்!" — ரமா 'ஓ' வென்று கதறி விட்டாள்.

தேவகியின் கைகள் பெண்மையின் உருவில் தானாகவே ரமாவை அணைத்துக்கொண்டன. ஆனால் மனம் மட்டும் துயருற்றிருக்கும் ஒரு மகனின் தாயார் என்ற உருவில் அத்துயருக்குக் காரணமான ரமாவை நம்ப மறுத்தது.

"நீ சொல்கிறாய், ரமா. ஆனால் ரூபகுமாரோடு நீ மகிழ்ச்சியுடன் வெளியே செல்வதையும், புதுப் புதுப் புடவைகளும், நகைகளும் வாங்குவதையும், விவாகங்களுக்குப் போய் வருவதையும் பார்த்த பிறகு வாசுவால் நீ சொல்வதை நம்ப முடியுமா?" தேவகி நேராகவே கேட்டுவிட்டாள்.

"மகிழ்ச்சியா? யாருக்கு மகிழ்ச்சி?"

"எனக்குத் தெரிந்த வரையில் உன் அப்பா ரூபகுமாரை மணக்கும்படி உன்னைக் கட்டாயப்படுத்தினதாகத் தெரியவில்லையே! நீயாகத்தானே ரூபகுமாரை மணந்தாய்?" என்றாள் தேவகி.

(தொடரும்)

‘தடக், தடக்’ என்று வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. வானமெங்கும்... மல்லிகைப் பூவாய் மலர்ந்து சிரிக்கும் விண் மீன்களும் வண்டியோடு ஓடி வருகின்றன. எத்தனை நேரம்தான் ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பது?


சிலுசிலுக்கும் குளிர் காற்றுக்குப் பயந்து சாந்தி கண்ணாடிக் கதவைப் பொருத்தி விட்டு உள்ளே திரும்புகிறாள். அந்த முதல் வகுப்பு 'கூபே'யில் இன்னொரு பிரயாணியும் இருக்கிறார். அவரும் தூங்கவில்லை. ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்து கிடக்கிறார் போலும். அடிக்கடி தனக்குள் புன்னகை செய்தவாறு அவர் கதையின் போக்கிலே மனத்தைத் தேக்கிச் சுவைத்து ரசிப்பதை அவளால் உணர முடிகிறது.

சாந்திக்கு அந்த மௌனம் பிடிக்கவில்லை. இரவின் அமைதியில் ரயில் ஆற்றுப் பாலத்தின் மீது எழுப்பும் பயங்கர ஓசையும் பிடிக்கவில்லை. அமானுஷ்ய தன்மையிலிருந்து மனுஷத் தன்மைக்கு வர அவரை —அந்த எதிர்ப் பெஞ்சு பிரயாணியை — எப்படியாவது பேச வைத்தாக வேண்டும். ஆனால், அவரோ விளக்கின் ஒளி ஒரு கன்னத்தில் படும்படியாக முகத்தைத் திருப்பியவாறு பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருக்கிறார்.

ஒருவேளை ஏதாவது பரீட்சைக்குப் படிக்கிறாரோ என்னவோ என்று அவருடைய

அந்தச் சம்பவம்....

சரோஜா ராமமூர்த்தி



போக்கைத் தடை செய்யச் சாந்தி பெரிதும் தயங்குகிறாள். இருப்பினும் முயன்று பார்க்கும் நோக்கத்துடன் கூடையிலிருந்து ஆரஞ்சுப் பழங்களை எடுத்து வைத்து அவரை எப்படிக் கூப்பிட்டுக் கொடுப்பது என்று சிறிது யோசிக்கிறாள்.

ஓர் ஆடவனுடன் வலுவில் சென்று பேசத் தயங்க, தான் ஒன்றும் இளம் பெண் அல்லவே என்கிற நினைப்புடன், ''ப்ளீஸ்... பழம் சாப்பிடுகிறீர்களா?'' என்று அவரைக் கூப்பிட்டு விடுகிறாள் சாந்தி.

''எஸ்...'' என்று திரும்பிய அந்தப் பிரயாணி சாந்தியை விட வயதில் சிறியவர்.

பழத்தை எடுத்து அவரிடம் கொடுத்த சாந்தி திரும்பிய வாக்கில் அவள் கரத்திலிருந்து அதைப் பெறுபவரின் முகத்தை நன்றாகப் பார்க்க முடிந்தது.

கூர்மையான நாசி, மேட்டு நெற்றி. துருதுருக்கும் விஷமக் கண்கள். படிப்படியாக அலைபோல் பரவிக் கிடக்கும் கிராப்பு. பென்சிலால் வரையப்பட்ட மீசை போல் அரும்பாக மீசை. அந்த முகம்... அந்தக் கண்கள். அவளுக்கு எத்தனையோ வருஷங்களுக்கு அப்புறமும் நினைவில் பளிச்சென்று தெரிந்தன.

''நானும் உங்களுக்கு ஏதாவது தர வேண்டும். சற்று இருங்கள்'' என்றவாறு மேலேயிருந்து கீழே குதித்துத் தன் கூடையைத் திறந்து இரண்டு மைசூர்ப் பாகு வில்லையை அவள் முன்பு நீட்டியபடி நேருக்கு நேர் நிற்கிறார் அந்தப் பிரயாணி.

''மன்னியுங்கள்... நீங்கள்... நீ... சங்கர் இல்லை?... தவறானால் மன்னியுங்கள்...'' சாந்தி மைசூர்ப்பாகைக் கையில் வாங்காமல் உற்றுப் பார்த்தபடி கேட்கிறாள்.

''ஆமாம்... என் பெயர் உங்களுக்கு? அடே! நீங்கள் சாந்தி டீச்சர் இல்லே? வணக்கம்மா... உங்களைப் பார்த்து எத்தனை வருஷமாச்சு? கிட்டத்தட்ட இருபத்தைஞ்சு வருஷமிருக்குமே. ரொம்ப மாறிட்டீங்க. தலையெல்லாம் நரைச்சுப் போச்சு. இப்போ எங்கே வேலை பார்க்கிறீங்க?'' என்று கேள்விகள் சரங்களாக வருகின்றன.

சாந்தி சிரிக்கிறாள். அதே அமைதியான சிரிப்பு.

அந்த நாட்களில் அவள் டீச்சராகவும் அவன் மாணவனாகவும் இருந்த போது சிரித்த அதே சிரிப்புத்தான்.

''சங்கர்! மொதல்லே பழத்தை எடுத்துச் சாப்பிடு... ரொம்ப நேரமாப் படிக்கிறே. நானும் கவனிச்சுண்டுதான் இருந்தேன்.... அப்புறமாப் பேசலாம் —'' வாத்தியாரம்மாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து சங்கர் இரண்டு பழங்களையும் உரித்துத் தன் கையில் முழுசாக ஒன்றை ஏந்தியபடி அவள் பக்கம் இன்னொரு பழத்தை நகர்த்துகிறான்.

இருவரும் பழம் சாப்பிடுகின்றனர். ரயில் தன் இரு பக்கங்களிலும் ஓடிவரும் காடுகளைப் பின்விருந்தி முன்னே விரைந்து கொண்டிருக்கிறது. வானத்தில் ரூனியாக உலா வரும் நிலவு. சாந்தி அவனைக் கனிவுடன் பார்க்கிறாள்.

''இப்போ நீ என்ன செய்து கொண்டிருக்கே? அதை மொதல்லே சொல்லு.. எனக்கு வயசாயிடுத்துன்னு நீயே சொல்லியாச்சு. நான் போன வருஷம்தான் 'ரிடையர்' ஆனேன். அப்புறமா எத்தனையோ பள்ளியிலேருந்து வேலைக்கு அழைப்பு வந்தது. மனசுக்கும் உடம்புக்கும் கொஞ்சம் ஓய்வு தேவைப்படறது இல்லேயா? இப்படி காசி, ஹரித்வார், பத்ரின்னு போயிட்டு ஊருக்குத் திரும்பிண்டிருக்கேன்... உன்னைப் பத்திச் சொல்லு சங்கர்—''

சங்கரும் சிரிக்கிறான். அதே விஷமத்தனமான சிரிப்புத்தான்.

''சிரிக்காதே சங்கர்! கேட்டதுக்குப் பதில் சொல்—'' சாந்தி இடுக்கிட்டவளாக ''மன்னிச்சுக்கோப்பா! பழைய நினைவிலே அதட்டிவேன்... உன் குணம் மாறலேன்னு தோணறது. இப்ப என்ன பண்ணிண்டு இருக்கே? கல்யாணம் ஆகிக் குழந்தை குட்டிகள் இருக்கா?''


''மன்னிக்க என்ன இருக்கு டீச்சர்? உங்க புண்ணியத்திலே நல்ல நிலைமையிலே இருக்கேன். 'விஜிலென்ஸ் ஆபீசரா'க இருக்கேன். எல்லோரையும் கண்காணிக்கிற பெரிய பொறுப்பு. கல்யாணமாகி மூணு குழந்தைகள் இருக்கு. அவள் ரொம்ப அழகி இல்லாவிட்டாலும் உங்க மாதிரி அடக்கமான அழகி...''

''உஞ்... விஷமத்தனம் மட்டும் இன்னும் போகலேயே—'' சாந்தி மறுபடியும் அதட்டுகிறாள்.

''குழந்தைங்க எங்கேக் கொள்ளலே. எல்லாம் அவ மாதிரி. எல்லாத்துலேயும் ஒழுங்கு தான்—''

''இப்ப நீ மாத்திரம் என்ன ஒழுங்கு இல்லாம இருக்கியா? அது ஒரு காலம் சங்கர். உனக்கு நினைவு இருக்கா?—''

''ஏன் இல்லாம டீச்சர்?'' சங்கரின் கண்கள் பனிக்கின்றன.



சாந்தி அந்த நினைவுகளில் ஒன்றி இருந் தாள். ரயில் இரு மருங்கிலும் ஓடி வரும் மலைத் தொடரின் இடையே ஓடிக் கொண் டிருக்கிறது.

2

அந்தப் பத்தாவது வகுப்பறை சங்கர் உள்ளே நுழைந்தவுடன் களைகட்டி விடுகிறது. பாட்டும் சிரிப்புமாகப் மாணவர்கள் கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கின்றனர். சாந்தி வேலைக்குப் புறப்பட்டவுடன் 'பெண்கள் பள்ளியாக இருந்தால் தேவலை' என்றுதான் அவள் பெற்றோர் அபிப்பிராயப்பட்டனர். ''எந்தப் பள்ளியானால் என்னம்மா? என் னிடம் படிக்கப் போகிற குழந்தைகளுக்கு நான் தாய் மாதிரி. ஆண், பெண் என்கிற பேத உணர்ச்சி டாக்டர்களுக்கு எப்படி இல் லையோ அப்படிப் பாடம் போதிக்கும் ஆசிரியர் களுக்கும் இருக்கக் கூடாது... நான் தைரிய மாகச் சமாளிக்கப்பேன். என்னோடே என்னை விட வயசில் மூத்தவர்களாக நாலைந்து பெண்கள் வேலைக்கு வருகிறார்கள்'' என்று சாந்தி தன் பெற்றவளிடம் வாதாடி ஜெயித்துப் பள்ளியில் ஆசிரியையாகச் சேர்ந்தாள்.

எந்தக் காலத்திலும் படிப்பில் சிறு வயதில் துடியாக முன்னேறும் குழந்தைகளும் உண்டு. பின்தங்கி விடுகிற குழந்தைகளும் உண்டு. சாந்தி தன் வகுப்பறையில் நுழைந்தபோது கடைசி பெஞ்சியில் உட்கார்ந்திருந்த மூன்று பெரிய பையன்களைப் பார்த்தாள். அவர்கள் வயதில் முன் வரிசையில் உட்கார்ந்திருந்தவர் களைவிட மூத்தவர்கள். அந்த வயதுக்கேற்ற முதிர்ச்சியும் அவர்கள் முகத்தில் நிழலாடின. அப்போதுதான் அரும்பி வருகிற மீசையும் அதனால் ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியின் காரணமாக அடிக்கடி சலிக்கும் மனத்தையும் படைத்த அந்த மாணவர்கள் சாந்தி போதிக் கும் பாடங்களைக் கவனிப்பதை விட அவளை அதிகமாகக் கவனிக்க ஆரம்பித்தனர். இதிலே சங்கர் மிகவும் துடியாக இருந்தான். அவனுடைய துருதுருக்கும் பார்வையும், சிரிப்பும் அவனை ஒரு விஷமக்காரனாகக் காட்டியது. வகுப்பில் எந்தக் கேள்விக்கும் சரியான பதில் சொல்ல மாட்டான். பேசா மல் நிற்பான்.

சாந்தியினால் அவனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இடையில் ஒரு நாள் அவள் விலாசத்துக்கு ஒரு கடிதம் வந்தது. விஷமத் தனமான காதல் கடிதம்!

இரவிலும், பகலிலும் எந்நேரத்திலும் அவள் நினைவாகவே ஓர் ஆத்மா (!) துடித்துக் கொண்டிருப்பதாகக் கடிதத்தில் காணப் பட்டது. முத்து முத்தாக ஒரு பெண்ணின் கையெழுத்துப் போல் காணப்பட்ட அந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டு சாந்தி மூன்று இரவுகள் தூங்காமல் யோசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். பள்ளிக்குப் போகும் வழி யிலோ, திரும்பும்போதோ இந்த ரகசியக் காதலனை அவள் எங்கேயும் பார்க்கவில்லை. பள்ளியின் தலைமை ஆசிரியர் அவளுடைய தந்தையைப் போன்றவர். மற்றவர்கள் அவ ளிடம் பழகும் முறையிலிருந்து அவளால் எந்தக் கணிகத்தையும் யார் மீதும் சுமத்த முடியவில்லை.

சில நாட்களில் அவள் அதை ஒதுக்கிவிட்டு முன்போல் இருக்க ஆரம்பித்தாள். சங்கரிடம் பல மாறுதல்கள் தெரிந்தன. மற்ற மாணவ மாணவிகள் அவளை நேருக்கு நேர் பார்த்துப் பேசிப் பழகும்போது அவன் அவளைக் கண்ட தும் தலை குனிந்தவாறு வெளியே போய்க் கொண்டிருந்தான்.

மறுபடியும் ஒரு மாதம் கழித்து அதே கையெழுத்தில் இன்னொரு கடிதம் வந்தது. அன்று சங்கரின் நோட்டுப் புத்தகம் ஒன்றை வாங்கி மிகவும் உன்னிப்பாகக் கவனித்தாள் சாந்தி. கையெழுத்து அவனுடையது அல்ல. 'சே! பாவம்... ஒரு சின்னப் பையன்மீது சந்தேகப்படுகிறோமே'' என்று அவள் தனக் குள் வருந்தினாள். அத்துடன் இந்தக் கடித விஷயமாக ஏதாவது செய்தாக வேண்டும் என்று நினைத்துத் தலைமை ஆசிரியரிடம் அவள் அந்த இரண்டு கடிதங்களையும் கொடுத்தாள்.

அவர் படபடப்புடன் அவளை நிமிர்ந்து பார்த்தார். அமைதி தவழும் அவள் முகத்தில் சலனம் ஏதும் இல்லாமல் இருப்பதைப் பார்த்துவிட்டு, ''மிஸ் சாந்தி! வாட் கான் ஐ டூ பார் யூ?'' என்று கேட்டார். ''தந்திங் சார்! இந்தக் கடிதாசிகளை எங்க அப்பா விடமே காட்டியிருப்பேன். அனாவசியமாகப் பயந்து போய் என்னை இங்கே வேலைக்கு வர வேண்டாம் என்று சொல்லிடுவாங்க. இந்த மாதிரி அநாமதேயக் கடுதாசிகளைப் பார்த்துப் பயந்து போக முடியுமா? இல்லே வேலையைத் தான் விட முடியுமா? எதுக்கும் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கட்டும்னு...''

''ஆல் ரைட்! திரும்பி இந்த மாதிரி ஏதா வது வந்தால் பார்க்கலாம்...''

''தாங்க்யூ ஸார்!'' என்று சொல்லிவிட்டுச் சாந்தி போய்விட்டாள்.

ஆனால், ''சுவர்களுக்கும் காதுகள் உண்டு'' என்கிற பழமொழியை உறுதிப்படுத்துவது போல் அந்நேரத்தில் தலைமை ஆசிரியரின் அறைக்கு வெளியே காத்திருந்த இன்னொர் ஆசிரியையின் காதில் இந்த விஷயம் அரை குறையாக விழ, அவள் அதற்குக் கண் காது மூக்கு வைத்துப் பேச, சாந்தியைப் பார்த் தாலே எல்லோரும் கசமுசவென்று ரகசியம் பேச ஆரம்பித்தார்கள்.

அன்று வகுப்பில் புதிதாக ஆங்கிலச் செய்யுள் ஒன்றைப் போதிக்க வேண்டியிருந் தது. புத்தகத்துடன் தன் மேஜைக்கு அருகில் வந்து அந்தச் செய்யுளைப் படிக்கும்படி சங் கரை அவள் அழைத்தாள். அவன் முதலில் தயங்கினான். பிறகு எழுந்து நின்றான்.

''சங்கர்! சீக்கிரம் வாப்பா — இந்தவகுப்பில் நான் இந்தப் பாடலுக்கு விளக்கம் தந்தாக வேண்டும். பரீக்ஷை நெருங்குகிறது பார்—''

சங்கர் தடுமாற்றத்துடன் மேஜை அருகில் வந்தான். பிரித்த அவன் புத்தகத்திலிருந்து ஒட்டப்பட்ட தபால் கவர் ஒன்று கீழே விழுந் தது. அதன் மேல் கொட்டையாக அதே முத்துச் சரங்கள் போன்ற எழுத்தில் சாந்தி யின் விலாசம் எழுதப்பட்டிருந்தது.

சாந்தி அந்தக் கவரை எடுத்துக்கொண்டு அவனையே உற்றுப் பார்த்தாள். இத்தனை



சென்னை
சாந்தி · கிரௌன் · புவனேசுவரி
(டீலக்ஸ் ஏர்கண்டிஷன்ட்)
மற்றும் தென்னாடெங்கும்
சிவாஜி கணேசனின்
வியட்நாம் வீடு
டைரக்ஷன் P. மாதவன் B.A.,
சிவாஜி புரொடக்ஷன்ஸ் தயாரிப்பு

பூண்டு பொடிப் பையன்! ஆள் வளர்ந்திருந்தால் போதுமா? தன்னிடம் அறிவுப் பிச்சைக்காக மண்டியிட்டு வணங்கும் நிலையில் உள்ள மாணவன்!

''சங்கர்! இந்தக் கடிதாசி யார் எழுதினது? பொய் சொல்லாமல் சொல்லு—''

அவன் தன் உதடுகளைக் கடித்தவாறு தரையைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

''சரி! என்னோடு வா இப்படி'' என்று தன் தளிர்க் கரங்களினால் அவனைப் பற்றித் தரதரவென்று தலைமை ஆசிரியரின் அறைக்குள் அழைத்துப் போய் நிறுத்தினாள்.

பிறகு உண்மை மளமளவென்று வெளியாகியது. சங்கரின் நண்பன் — அந்தப் பள்ளியில் பயிலாத மாணவன் — இம்மாதிரிக் கடிதங்களை வரைந்து கொடுக்கச் சங்கர் ஏதோ ஓர் ஆவலின் உந்தலினால் கடிதங்களை தபாலில் போட்டுக் கொண்டு வந்திருக்கிறான்.

''மிஸ் சாந்தி! இவனை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? பள்ளியை விட்டு டிஸ்மிஸ் செய்யட்டுமா? வேறு பள்ளியில் சேர 'டிரான்ஸ்பர் சர்டிபிகேட்' தந்து வெளியே அனுப்பிவிடவா?''

சாந்தி சங்கரை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்களுக்கு அவன் இத்தனூண்டு பொடிப் பையனாகக் காட்சி தந்தான். இவனுக்குச் சரி சமமாகத் தான் எதற்காக எதிர்த்துப் போராட வேண்டும்? தன்னிடம் அறிவுப் பிச்சைக்காகக் காத்திருக்கும் மாணவனைப் பழி வாங்குவதால் தனக்கு ஏதும் நன்மை வந்து விடப் போவதில்லை.

''ஒன்றும் வேண்டாம் சார். பாவம்.... இனிமே இந்தமாதிரிச் செய்யாதே சங்கர்... என்னை நிமிர்ந்து பாரடா. நான் உனக்குத் தாயார் மாதிரி....''

வருடங்கள் ஓடிவிட்டன. சாந்தி டீச்சர் பிறகு பல தரப்பட்ட மாணவ மாணவியர்களைத் தன் வாழ்க்கையில் சந்தித்துவிட்டாள்.

அந்துடன் அவளுக்குக் காதல் கடிதங்கள் வரைந்த சங்கரைப் பற்றி அவள் தன் கணவனிடமே சொல்லிச் சிரித்து, வருந்தியுமிருக்கிறாள்.

3

மலைத் தொடர்களை விட்டு நீங்கி ரயில் சமதரையில் ஓடிக் கொண்டிருக்கிறது. விடியற்காலை. கீழ் வானத்தில் தங்க நிறம். அந்தக் காலை நேரத்தில் சாந்தி சங்கர் கூறிய அந்தப் பழைய நினைவுகளைக் கேட்டு மீண்டும் சிரித்தாள்.

''இப்போ நினைச்சா உனக்கே வெட்கமாகவும் வேடிக்கையாகவும் இருக்கு இல்லையா சங்கர்!''

''ஆமாம் டீச்சர்! நான் பத்தாவது பாஸ் பண்ணி மேலே படிக்க ஆரம்பிச்சதும் அந்தச் சம்பவத்தை நினைக்க நினைக்க ஊமைக் குரலின் அழுது உள்ளத்தை ரணமாக்கிக் கொண்டிருக்கிறேன். அன்று 'என்னை மன்னியுங்கள் டீச்சர்!' என்று ஒரு வார்த்தை உங்களிடம் கேட்கத் துணிவில்லை. ஏதோ மகத்தான காரியத்தைச் சாதிக்க முனைந்தது போலவும், அந்த முனைப்பிலிருந்து சறுக்கி விழுந்து விட்டது போலவும் மறுகினேன்.



''உங்கிட்டே பரம ரகசியம் ஒண்ணு சொல்லலாம்னு ஓடி வந்திருக்கேன். ரகசியங்களை வெளியிலே பரப்புற வழக்கம் உண்டா உனக்கு?''

''இல்லவே இல்லே!''

''அப்ப உங்கிட்டே அதைச் சொல்லிப் பிரயோசனம் இல்லே. நான் வரேன்!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

பிறகுதான் நான் எவ்வளவு பெரிய தவற்றைச் செய்து விட்டேன் என்பது தெரிந்தது. ஆனால், உங்களை நான் மீண்டும் பார்க்கவில்லை. உங்கள் விலாசம் எப்போதாவது கேள்விப்பட்டாலும் பார்க்கிற துணிவும் இல்லே. என்னுடைய கல்யாணத்துக்கப்புறம் என் மனைவிகிட்டே மனம் திறந்து பேசுகிற போது இந்த விஷயத்தைத்தான் முதலில் கூறி வருந்தினேன். 'உன் புருஷன் ஒரு விதத்தில் அயோக்கியன்' என்று கூடச் சொன்னேன். அவளும் உங்களைப் போலச் சிரித்துவிட்டு மௌனமாக இருந்துவிட்டாள். அதன் பிறகு என் குழந்தைகளிடம் அவர்கள் புரிந்து கொள்கிற வயது வந்தவுடன் இந்தச் சம்பவத்தைக் கூறி அவர்களை எச்சரித்தேன்.''

சாந்தி இரக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.


''சங்கர்! நீ இந்த அற்பமான விஷயத்தை இவ்வளவு பெரிதுபடுத்தியிருக்கக் கூடாது. மனிதனின் மன வளர்ச்சி அவன் வாழ்க்கையில் முன்னேறும்போதுதான் ஏற்படுகிறது. பள்ளிகளில் அல்ல. அங்கே அந்த வளர்ச்சிக்காக அஸ்திவாரம் போடுகிறோம். அவ்வளவுதான்....''

ரயிலின் வேகம் குறைகிறது. சங்கர் இறங்க வேண்டிய ஊர் நெருங்குகிறது. அவன் சாந்தி டீச்சரை அங்கு இறங்கித் தன்னுடன் ஒரு நாள் தங்கிவிட்டுப் போக வேண்டும் என்று அழைக்கிறான்.


அந்த அழைப்பை ஏற்க மறுத்த சாந்தி, ''என்னைப் பற்றிய அந்தச் சம்பவம் உன் குடும்பத்தில் ஒரு நினைவாகவே இருக்கட்டும், சங்கர்... அதை உண்மையாக்க நான் விரும்பவில்லை'' என்று கூறுகிறாள்.

ரயில் விரைகிறது. காலத்தைக் கடந்து அது எங்கோ விரைவது போல் ஓர் அக்கறுத் தல் பாவனை எழுகிறது. சாந்தி படிக்க ஆரம்பிக்கிறாள்.

ஒரே இனம்: ஒரே மக்கள்



''ஒரே கொடியின் கீழுள்ள ஒரே நாட்டு மக்களிடையே நிறைய ஒற்றுமை இருக்கிறது. நாட்டின் மீது ஒன்றாக மெய்ப்பற்றுக்கொண்டு, இந்தியா ஒரே நாடு என்று நம்புகிறவர்களிடம் சிறுபான்மையோர் அல்லது பெரும்பான்மையோர் என்னும் பிரச்சினையே எழ முடியாது. எல்லோரும் சமமான சலுகைக்கும் சமமாக நடத்தப்படுவதற்கும் உரிமை உடையவர்கள். நமது கருத்திற்கிசைந்த நாடு, அதன் ஒவ்வொரு அங்கமான பிரதேசங்களுக்கிடையே முற்றிலும் ஒற்றுமையுள்ள மதச்சார்பற்றதாயிருக்க வேண்டும்; குடியரசு நாடாகவும் இருக்க வேண்டும்.''—மகாத்மா காந்தி



IOL இண்டியன் ஆக்ஸிஜென் லிமிடெட்

IOC-171 TAM

கண்ணாடியின் முன்னால் உட்கார்ந்து கொண்டு தன் அழகை இப்படியும் அப்படியுமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் ரம்பா. உண்மையிலேயே பெயருக்கேற்ற அழகி தான் அவள்.

இப்படிக் கொள்ளை அழகு எப்படி அவள் உடலில் குடிபுகுந்தது?

அவள் அழகு என்னை ஆனந்தப்பட வைக்க வில்லை. அழத்தான் வைக்கிறது! ஆம்! அருமை மகளுக்கு எப்படிக் கல்யாணம் செய்து வைக்கப் போகிறேனோ என்று அவளைக் காணும் தோறும் என் நெஞ்சு அழுகிறது. மனசு மாய்கிறது.

அவளுடைய கட்டழகைக் கண்டு களிப்பதற்குப் பதிலாக நான் கலங்கித் தவிக்காத நாட்களே கிடையாது.

'வடிச்ச கஞ்சியில் உப்பைப் போட்டுக் கொடுக்கிறேன். அதைக் குடித்துவிட்டு இப்படி வளர்ந்து நிற்கிறாளே இவள்! இவளுடைய எதிர்காலத்துக்கு எப்படி வழி செய்யப் போகிறேன்!'

வாய் விட்டு அழ வேண்டும்போல் உள்ளம் துடிக்கிறது. நாவிலிருந்து நழுவ எத்தனிக்கும் சொற்களைச் சிரமப்பட்டு விழுங்கிக் கொள்வேன்.

கஞ்சியிலும் இன்பம் கண்டு கண் கவரும் போலி நகைகளிலும் திருப்தியுற்று நிறைந்த மனத்துடன், சதா மலர்ந்த முகத்துடன் காட்சிதரும் மகளிடம் என் சஞ்சலத்தை எடுத்துரைத்து வாட்டமடையச் செய்தால் யாது பயன்?

அடுத்த தெருவிலிருக்கும் இரண்டு பெண்களுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுத்து மாதம் பதினைந்து ரூபாய் சம்பாதித்து வந்தாள் ரம்பா. ஐந்தாவது, மூன்றாவது வகுப்புக் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லித் தர இதை விட அள்ளியா கொடுப்பார்கள்?

கஷ்டத்தோடு கஷ்டமாக ரம்பாவை எஸ். எஸ். எல். ஸி. வரையிலாவது படிக்க வைத்திருந்தால் கவலையிராது. சம்பளம் கட்ட வேண்டாம் என்று பெயர்தான் இந்தக் காலத்தில். ஆனால், ஸ்பெஷல் பீஸ், யூனி பாரம் அது இது என்றுதான் அதற்கு மேலாகக் கட்ட வேண்டி ஆகிவிடுகிறதே! நோட்டுக்கள்



புத்தகங்கள் வேறு! அரை வயிற்றுக் கஞ்சிக்கே பஞ்சாய்ப் பறக்க வேண்டிய நிலையில் ஐந்தாவது பாரத்துடன் அவள் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதாயிற்று.

அவள் தந்தை எங்கோ ஒரு கடையில் கணக்கெழுதி மாதம் ஐம்பது ரூபாய் கொண்டுவந்தார். பெற்றோருக்கு ஒரே பிள்ளையாய்ப் பொறுப்பில்லாமல் வளர்ந்தவர் அவர். எப்படியோ அவரை அனுசரித்து நடக்கப் பழகிவிட்ட என் இல்லறமாகிய புத்தகத்தில் பல ஏடுகள் புரண்டன. இன்று ரம்பாவின் வாழ்வை வசதி மிக்கதாக அமைத்துத் தரும் கடமை தலையாய செயலாகக் காத்துக் கிடக்கிறது.

ரம்பாவுக்குப் படிப்பு அதிகம் இல்லைதான். ஆனாலும் அவள் தன் அழகுக்கு ஒத்த ஒருவனையே மணம் புரிந்து கொள்ள விரும்புவாள் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

எங்கேயிருந்து, எப்படி அவளுக்குக் கணவன் கிடைக்கப் போகிறானோ? அடுத்த வேளைச் சோற்றுக்கு என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டு உதவ முன்வராத உற்றார் உறவினர் எல்லாம் என்னைக் காணுந்தோறும், அவள் திருமணத்தைப் பற்றிக் கேட்கலானார்கள். இயன்றவரை என்னவரிடம் இதுபற்றி எடுத்துரைத்தேன்.

"கையில் ஒரு பைசா இல்லை! கல்யாணமாம் கல்யாணம்! அவளுக்கு அப்படி ஒன்றும் வயசாகவில்லை. அதிர்ஷ்டமிருந்தால் தானே எவனாவது தேடி வருவான்!" என்று அவரிடமிருந்து பதில் வந்தது.

முயற்சியற்ற மூட நம்பிக்கை மட்டும் அயர்ச்சியைப் போக்கிவிடுமா?

'மகளுக்கு வாழ்வு கொடுப்பது எப்படி?' மனத்துள் மறுகிய வண்ணம் துயரத்தின் கனவுகளால் காலம் செய்யும் ஜாலத்தைக் காணும் வெறுமை நிலையில்—

ஒரு நாள்...

ரம்பாவின் பாட்டி ஒரு நல்ல செய்தியைக் கொண்டு வந்தாள். அவளுடைய தூரத்து உறவினர் வகையில் ஒரு பிள்ளை, முப்பத்தி ஐந்து வயது ஆகிறதாம்; சற்றுக் கறுப்பாக இருப்பானாம்; ஜாதகம் வாங்கி வந்திருந்தாள்.

மறுநாளே ஜோஸியரிடம் போனேன். இருவர் ஜாதகங்களும் சரிவரப் பொருந்தியிருந்தன. என் நெஞ்சில் படபடப்பு; சஞ்சலம்-சந்தோஷம்! எப்படியாவது இந்த வரனை ரம்பாவுக்கு முடித்து விட வேண்டும்!

வயசு சற்று அதிகமோ? கறுப்பு அவளுக்கு வெறுப்பைத் தருமோ? தாயுள்ளத்தின் தவிப்புத் தெரிந்ததுதானே?

ரம்பாவை விடக் கிட்டத்தட்ட பதினைந்து வயது அதிகம். பரவாயில்லை. பெண்களைவிட ஆண்கள் வயசு அதிகமானவர்களாக இருந்தால்தான் கணவனின் பார்வைக்கு என்றென்றும் இளமையுள்ளவளாக இருப்பாள் மனைவி.

நானே நேரில்போய்ப் பையன் வீட்டாரிடம் பேசிவிட்டு வந்தேன். குறிப்பிட்ட தினத்தில் வந்து பெண்ணைப் பார்க்கவும் ஏற்பாடு செய்தேன். எப்படியாவது இந்த வரனை ரம்பாவுக்கு முடித்துவிட வேண்டும்!

"தேவி! என் மகளுக்கு வாழ்வு கொடு, தாயே!"

அன்னை உள்ளம் அகிலத்துக்கெல்லாம் அன்னையான பராசக்தியை இறைஞ்சியது.

பெண் பார்த்துச் சென்றவர்கள் சம்மதம் தந்துவிட்டார்கள். பாதிக் கிணறு தாண்டிய நிலை. இனி பணத்துக்கு ஏற்பாடு செய்வது எப்படி? அவர்களும் அப்படி ஒன்றும் அதிகம் எதிர்பார்க்கவில்லை. ரம்பாவின் அழகில் ஒருவேளை மயங்கியிருக்கலாம்.

ஒரு வழியாகத் திருமணம் 'இனிது' நடந்து முடிந்தது. ஆம்! பூவுக்கொரு சண்டை, பொன்னுக்கு ஒரு சண்டை என்று பொழுதெல்லாம் சம்பந்திச் சண்டையுடன் கழிந்த கல்யாணங்களைக் கூட அவை பற்றிக் குறிப்பிடும்போது — 'இனிது' முடிந்தது என்று கூறும்போது பரஸ்பரம் மனத்தின் இனிமையின் மகிழ்வுடன் நடந்து முடிந்த நிகழ்ச்சியைப் பரிபூரணமாக 'இனிது முடிந்தது' என்று கூறுவது மிகையல்லவே?

'பொன் வைக்கும் இடத்தில் பூ வைத்து' என்பார்கள். பூவைக்கூட அதிகமாக வைக்கப் பொருள் வசதியற்றவள் நான். ஆனால் அவர்கள் பூவையோ, பொன்னையோ அதிகம் எதிர்பாராமல், 'பூவை'யை மட்டும் விரும்பி ஏற்றுக் கொண்டது என் ரம்பாவின் அதிருஷ்டத்தைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியும்?

அவர்கள் எதிர்பார்த்த அந்தக் கொஞ்சத்தைக்கூட, கெஞ்சாத இடங்களில் கெஞ்சி, கேட்காதவர்களிடமெல்லாம் கேட்டு, பார்க்காதவர்களை யெல்லாம் பார்த்து, 'புரட்ட' வேண்டியதாயிற்று.

'பளு'வின் ஒரு பகுதி குறைந்தது. இனி அடுத்தவளைப் பற்றிய கவலையை எடுக்க ஐந்தாறு வருஷங்கள் கழியலாம்.

ரம்பாவைப் புக்ககத்தில் கொண்டு விடச் சென்றிருந்த எனக்கு ஒரே பிரமிப்பு. உள்ளூரிலேயே சில தெருக்கள் தள்ளித்தான் அவர்கள் வீடு. அவளுடைய கணவருடைய அலுவலகமும் நாங்கள் இருந்த பகுதியிலேயே இருந்தது. நினைத்தபோது அக்காவைப் பார்த்துக் கொள்ளலாம் என்று நித்யாவுக்கும், சத்யனுக்கும் ஆறுதல்.

அழகான சின்னஞ் சிறிய வீடு; நாகரிகமான அமைப்பு. குடித்தனம் நடத்துவதற்குத் தேவையான பாத்திரம் பண்டங்கள் முதல் மளிகைச் சாமான்கள் வரை பாங்காக அடுக்கி வைக்கப்பட்ட ஒழுங்கு. தற்கால நாகரிக வாழ்வுக்குத் தக்கபடி எவர்சில்வர் சாமான்கள், 'காஸ் ஸ்டவ்' முதலியன. முதன் முதலாகக் குடும்பம் நடத்தப் போகும் பெண்ணுக்குப் பார்த்துப் பார்த்து ஒரு தாயார் என்னவெல்லாம் செய்து வைப்பாளோ அதைப் போல் அத்தனையும் நிறைந்திருந்தது.

மாப்பிள்ளையின் தமக்கை எல்லாவற்றையும் அருமையாகச் செய்து வைத்து, பெருமையுடன் காத்திருந்தாள்.

எனக்கு ஒருபுறம் அவமானம்...

மறுபுறம் ஆனந்தம்!... ஆனால் அவமான உணர்ச்சியை அனுபவிக்கக் கூட அருகதையற்ற ஏழை அன்னையான நான் என்ன செய்ய முடியும்? 'ஆசை இருக்கு தாசில் செய்ய' என்பது போல் வறட்டு ஆசையை மட்டுமே


சிறந்த டிரைவிங்
கன்ட்ரோலுக்கு
உகந்த டயர்
இந்தியா
சூப்பர்
உன்னதமான
நவீன கார்
டயர்
இந்தியா டயர்
அண்ட் ரப்பர்
கம்பெனி
(இந்தியா)
பிரைவேட்
லிமிடெட்.

கொண்டு மகளின் வாழ்வைச் சிறப்பிப்பது இவ்வளவும்?

'எனக்கு எப்போதோ தெரியும் என் ரம்பா அதிருஷ்டசாலி என்று. ரம்பா என்ன, என் குழந்தைகள் எல்லாமே அதிருஷ்டசாலிகள் தாம்!...' என்று என் கணவர் கூடப் பெருமைப்பட்டுக் கொண்டார்.

அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஊரில் நாட்டில் இல்லாத அதிசயமாய் இப்படி யெல்லாம் நடக்குமா ஒரு பெண்ணுக்கு!

முப்பத்தி ஐந்து வயது மாப்பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுக்கிறோமே என்று என் மனம் தாபப்பட்டதுண்டு; நான் கழித்து மணம் செய்து கொண்டால்தான் ஆண்கள் மனைவியின் அருமை தெரிந்து நன்றாக வைத்துக்கொள்வர் என்று சமாதானமும் செய்து கொண்டதுண்டு.

ரம்பாவின் வாழ்வின் அமைப்பு திருப்தி தருவதாகவே இருந்ததில் ஆனந்தமடைந்தது உள்ளம். அவளிடம் சொல்லி, அவள் மூலம் நாளடைவில் நித்யாவுக்கும், சத்யனுக்கும் கூட வழி செய்து விடலாம் என்று 'நப்பாசை' கூட எழுந்தது அடிமனத்தில்!

நாலு நாளைக்கு ஒரு தரம் ஆளனுப்பி விடுவாள் ரம்பா. 'பால்கோவா செய்யவேண்டும், கோல்கொண்டா ஸ்வீட் போடவேண்டும், வற்றல் வடகம் தயாரிக்க வேண்டும், அரிசி அப்பளம் அவருக்குப் பிடிக்கும்...' இவையெல்லாம் செய்ய அம்மா வர வேண்டும்; கணவருடன் அவள் வெளியே போகும்போது வீட்டையும் பார்த்துக் கொண்டு அவள் திரும்புவதற்குள் எல்லாம் செய்து வைக்க வேண்டும்.

அப்போதெல்லாம் நான் மட்டுமே அவள் வீடு செல்வேன். சத்யனும் நித்யாவும் வர மாட்டார்கள். பண்டிகை சமயங்கள் தவிர மற்ற நேரங்களில் அவளும் அவர்களை அழைத்ததில்லை.

சத்யனுக்கும் நித்யாவுக்கும் ரம்பாவின் மூலம் வழி செய்துவிடலாம் என்ற 'நப்பாசை'யில் நானும் அதை அவ்வளவாய்ப் பொருட்படுத்துவதில்லை.


நைலக்ஸ் புடவை வாங்குவாள், நாலு மாதங்கள் கட்டிய பின் அதை நித்யாவுக்குத் தாவணியாகக் கிழித்துத் தருவாள்.

''இதையெல்லாம் ஏம்மா வாங்கிண்டு வரே? அக்கா மனசு வைச்சால் புதிசாவே எடுத்துத் தரலாமே? ஆறு அவ வாங்கித் தந்தாலும் நான் உடுத்திக்க மாட்டேன்.... அதைவிட உன்னோட அரைப் பழசு — சின்னாளம்பட்டிப் புடவையையே ஆனந்தமா உடுத்திப்பேன்...'' என்று பொரிந்து தள்ளுவாள் நித்யா.

''போடி அசடே! உனக்கு ஒரு 'வழி' செய்ய நாளைக்கு நான் ரம்பாவைத்தான் நம்பிண்டிருக்கேன்...'' என்று அவளை அடக்கி விடுவேன்.

நாளடைவில்...

ரம்பாவின் போக்கு நான் எதிர்பாராததாக இருந்தது. பிறந்த வீட்டில் இருக்கும் போது பழையமுதைக் கூட என்னுடனும் தன் உடன் பிறந்தவர்களுடனும் பகிர்ந்து



"உங்கள் பாக்கெட்டில் இருந்த ஓட்டையை நான் தைத்து வைத்துவிட்டேன், நீங்கள் படுக்கப் போன பிறகு."

"பாக்கெட்டில் ஓட்டை இருப்பதை நீ எப்படிக் கண்டு பிடிச்சே?"

கொண்டு உண்பவள், அவளுடைய வீட்டில் பகல் முழுதும் நான் 'சாப்பிட்டேனா' இருக்கிறேனா என்றுகூடக் கவனியாமல், சுகமாகக் காமிரா அறைக் கட்டிலிலேயே படுத்துக் கிடப்பாள்.

கஞ்சியோ, கூழோ, குடிசையோ, மாளிகையோ ஒவ்வொருவருக்கும் தனக்கென இருக்கும் பொருளில்தான் உரிமை கொண்டாட முடிகிறது. 'எலி வளையானாலும் தனி வளை' என்றிருத்தல் நல்லது என்று தெரியாமலா சொன்னார்கள்? என்னதான் பெற்ற பெண்ணாயிருந்தாலும், அவளுடைய வீடு என்று ஏற்பட்டு விட்டால், பெற்ற வீடு, பிறர் வீடாகி விடுகிறது. அதுவே மகன் வீடு என்றிருந்தால் அவனுக்கு வந்தவள் பிறர் வீட்டுப் பெண்ணாயிருந்தாலும் உரிமையுடன் உட்கார்ந்து சாப்பிடத் தோன்றுகிறது.

உலக நியதி இது.

'எவ்வளவுதான் செய்வது' என்பதுபோல ஓர் அலட்சிய மனப்பான்மை மகள் வெளியிடுவது போல் எனக்குத் தோன்றவே, கூடுமானவரை அவள் வீட்டுக்குப் போவதைக் கூட நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன்.

ஆனால்...அவளுக்கு அம்மா வராமல் எதுவுமே முடிவதில்லையாம்!

ஐந்தாறு தினங்கள் சென்றன.

ரம்பா வேலைக்காரியை அனுப்பியிருந்தாள். உடல் நலம் சரியாக இல்லையாம். உடனே நான் வரவேண்டுமாம்!

பெற்ற மனசு கேட்காமல் புறப்பட்டேன்.

''அவர் கேசரியும் அரிசி உப்புமாவும் டிபன் செய்யணும் அம்மா! அவர் சொல்லியனுப்பிச்சார்... சாமான்களெல்லாம் வாங்கியாச்சு... நல்லா 'ஸ்ட்ராங்காக' டிகாக்ஷன் இறக்கி வை... நாலு மணிக்கு நாலு பேரோட அவர்

வராராம். எனக்கு ஒரே தலைவலி'' என்று கருமமே கண்ணும் அறிவித்தாள்.

பாவம்!... ஆபீஸ் நண்பர்கள் வரும்போது ரம்பா தலைவலியால் துடிக்கிறாளே... மாப்பிள்ளை வந்து என்ன வேதனைப்படுவார்? சூடாக 'டிகிரி' காப்பி போட்டு, தலை வலி தீர மாத்திரையையும் வாங்கி வரச் செய்து முதலில் அவளைக் கவனித்துவிட்டு; விருந்து வேலைகளில் புகுந்தேன்.

இந்து வீடுகளுக்கு மணம் கூட்டும் அவல் கேசரி... அரிசி உப்புமாவின் கமகமக்கும் வாசனை....

மாதிரி பார்த்த மகள், ''அம்மா! இதைச் சாப்பிட்டு விட்டுத் தினம் தினம் இங்கேயே டிபனுக்கு வந்துடப் போறு அவாள்ளாம்!'' என்று பெருமைப்பட்டுக் கொண்டாள்.

நித்யாவும் சத்யனும் காலையில் ஒரு வாய் சாப்பிட்டதுதான்! மத்தியான டிபனுக்கு எதுவும் இல்லாததால், விளக்கு வைத்ததும் மறுபடியும் சாப்பாடு போடுவதாய்ச் சொல்லி விருந்தேன்.

ஒரு கணம் உள்ளம் வெட்கத்தை விட்டு மகளிடம் கேட்டு, செய்து வைத்த சிற்றுண்டியில் குழந்தைகளுக்குக் கொஞ்சம் கொண்டு போக விழைந்தது. உள்ளத்தின் ஒரு மூலையில் சிறு ஆவல்... ''சத்யனுக்கும் நித்யாவுக்கும் கொஞ்சம் கொண்டு போ' என்று ரம்பா சொல்ல மாட்டாளா என்று.

ஆனால் அவளோ?... நான் புறப்பட்டவுடன் ''எல்லாத்தையும் பத்திரமா மூடி வைச்சுட்டுப் போ அம்மா... மெள்ள மெள்ள நான் வந்தவாளைக் கவனிச்சுக்கறேன்... ஆறு அஞ்சு மணி வாக்கிலே மறுபடியும் கொஞ்சம் வந்துவிட்டுப் போ. வேலைக்காரி வருவாள். பாத்திரமெல்லாம் போட்டு விடணும்'' என்றாள்.

பாத்திரம் போடுவது மட்டுமல்ல; ராத்திரிக்கும் ஏதாவது செய்ய வேண்டும்!

'பரவாயில்லை... டிபன் எல்லாம் நிறையத் தான் செய்து வைத்திருக்கிறேன். வருகிறவர்கள் அவ்வளவையுமா தீர்த்துக் கட்டி விடப் போகிறார்கள்? மீதியுள்ளதை நித்யாவுக்கும் சத்யனுக்கும் அப்புறம் எடுத்துப் போனால் போச்சு!' என்று என்னையே சமாதானம் செய்து கொண்டேன்.

ஆசை வெட்கமறியாது என்பார்கள். பாசம்கூட அப்படித்தானோ? அந்த நினைப்பிலேயே வீட்டுக்குப் போனதும் பொழுதோடு இருக்கிற சாதத்தைப் பிசைந்து குழந்தைகளுக்குப் போட்டேன்.

அலுப்பு மீற அயர்ந்துவிட்டேன் போலும். கண் விழித்தபோது மணி ஆறு.

ரம்பா ஐந்து மணிக்கே வரச் சொன்னாளே! வந்தவர்கள் போயிருப்பார்கள். நாகரிக விருந்தினர்கள் நாசூக்காய் உண்டிருப்பார்கள். நித்யாவுக்கும் சத்யனுக்கும் 'நல்ல வேட்டை' தான்.

இல்லாமையின் கோரப் பிடியிலும் கூட எல்லையற்ற பாசம் கொண்ட தாயாரின் மனம் எப்படியாவது மக்களின் வயிற்றை இட்டு நிரப்ப விழைவதில் வியப்பில்லையே?

நான் போனபோது, கணவருடன் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தாள் ரம்பா.

''அஞ்சு மணிக்கே வருவேன்னு எதிர் பார்த்தேன், அம்மா.... நாங்களும் வெளியே போக வேண்டியிருக்கு... வேலைக்காரியும் வந்துட்டா... மிஞ்சியிருக்கிறதை எடுத்துண்டு பாத்திரத்தைத் தேய்க்க வைச்சுட்டுப் போடின்னு அவளண்டே சொல்லி விட்டேன். ராத்திரிக்கு எங்களுக்கு ஒண்ணும் வேண்டாம்.... அவசியம்னு வெளியிலேயே பார்த்துப்போம். நீ சிரமப்பட வேண்டாம்!...''

எனக்குப் பேச நா எழவில்லை.

'மிஞ்சி யிருக்கிறதை எடுத்துண்டு பாத்திரங்களைத் தேய்க்க வைச்சுட்டுப் போகச் சொல்லி விட்டேன்...'

ரம்பாவின் வார்த்தைகள் ரம்பங்களாய் என் உள்ளத்தை அறுத்தன. தமர் கடையும் போது தெறித்து விழும் கட்டையைப் போல் வேகத்துடன் வீட்டில் வந்து விழுந்தேன்.

அங்கே –

தன் அப்பாவுக்குக் கோதுமைக் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தாள் நித்யா. வெற்றிலையை மென்றபடியே பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார் அவர்.

எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

''பணமும் பவிஷும் வந்துட்டா, பாசம் கூட நாசமாய்ப் போய் விடுமா ? இவளுக்கு இந்த வாழ்வு தர நான் என்ன பாடுபட்டிருப்பேன்? துளி நினைச்சுப் பார்த்தாளா அவள்?''

வயிற்றெரிச்சல் தீர நடந்ததையெல்லாம் அவரிடம் கொட்டித் தீர்த்தேன்.

நிதானமாய்ச் சிரித்தார் அவர்.

''அசடு... அசடு....'' என்றார்.

''யார் அசடு... உங்கள் பெண்ணு?....''

''...நீதான் அசடு... என்ன இருந்தாலும் பெண்ணைப் பிள்ளையைப் போல் வளர்த்தாலும் சில விஷயங்களைத்தான் அவளிடமிருந்து எதிர்பார்க்கலாம்....தாரை வார்த்துத் தந்த பொருளைத் தன்னுடையதாய் உரிமை கொள்ள முடியுமா? பணமும் பவிஷும், வசதியும் கொண்ட வாழ்வின் அதிருஷ்டத்தை அவள் நம்முடன் பங்கிட்டுக் கொள்ளவில்லையே என்று நீ நினைப்பது தவறு. இந்த மட்டும் அவளுக்காவது அந்த அதிருஷ்டம் வாய்த்திருக்கிறதே என்று நீ ஆனந்தப்பட வேண்டும்; அவள் அதைச் செய்யவில்லையே, இதைக் கொடுக்கவில்லையே என்று ஆதங்கப் படக் கூடாது....'' என்றார் அவர் !

''ஆமாம், அம்மா ! அவள் அப்படியே நமக்குச் செய்ய முன்வந்தாலும் அத்திம்பேர் நம்மைப் பற்றிக் கேவலமா நினைக்கமாட்டாரா?.... நம்மோட சுயகௌரவத்தை விட்டுக் கொடுக்க அக்கா எப்படி நினைப்பாள்?'' நித்யாவின் விளக்கம் இது.

''பார்த்தாயா?.... என் குழந்தைகள் அதிருஷ்டசாலிகள் மட்டுமல்ல... அதிக புத்திசாலிகளும்கூட....'' என்று பெருமை பொங்க நித்யாவைப் பார்த்தார் அவர்.

உண்மைதான் !


அன்னை, ஒரு கல்...

தாய்மை என்பது உப்பு...

அம்மா ஒரு தெய்வம்.... என்பதெல்லாம் போல அம்மா ஓர் அசடு(ம்)தான் ! ஆம் ! பாசம்தான் அவளை இப்படியெல்லாம் மாற்றுகிறது ! இல்லையா ?

'ஆஸ்ப்ரோ'

மட்டுமே மைக்ரோஃபைண்ட் செய்யப்படுகிறது அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக



கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோ ஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்:
நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளூ • ஜுர வேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி.

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.



புதிய மைக்ரோஃபைன்ட்
'ஆஸ்ப்ரோ' அதிவேகமாக
வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

நிக்கோலஸ் (N) தயாரிப்பு

AG.37.TAM

பப்பியின் ஜக்கு..!

'கதிர்'



இரண்டரை வயதுகூட நிரம்பாத பப்பிக் குட்டிக்குத்தான் எத்தனை ரசிகத் தன்மை !

அடுத்த வீட்டில் உஷாவும் அவளுடைய கல்லூரித் தோழி சாயாவும் டிரான்ஸிஸ்டரைத் திருகி விட்டு ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். டிரான்ஸிஸ்டர் பாட்டரி சிறிது 'வீக்' ஆகியிருக்கிறது போலும். கம்மிய . ஒருவிதமான கொரகொரக் குரலில் நேயர்கள் விரும்பிக் கேட்ட (கொர கொரப்புக் குரலில் இராதென்று நினைக்கலாம்) திரை இசையாம் அது — ஒலித்துக் கொண்டிருந்தது.

திடீரென்று ஒரு பாட்டு... கொர கொரப்புக் குரலில். அதில் ஒரு பேர் வழி.... ''ஜாம்பஜார் ஜக்கு....!'' என்று அழைக்கிறது. அழைத்து விட்டுத்தான் யார் என்பதையும் கூறுகிறது. ''நான் சைதாப்பேட்டைக் கொக்குவாக்கும்....!'' என்று பெருமிதம் பேசுகிறது.

இந்தப் பாட்டைக் கேட்டதுதான் தாமதம் தொட்டிலில் அரை விழிப்பில் படுத்திருந்த பப்பிக் குட்டி, தொட்டிலை விட்டுக் கீழே இறங்கி முகப்புத் தோட்டத்தைக் கடந்து சென்று அடுத்த வீட்டுக்குள் குடுகுடுவென்று ஓடினாள். ஆனால் அவள் மட்டுமா ஓடினாள் ...?


தொட்டில் ஓசை கேட்டதும் பப்பியின் தாயாருக்குத் தெரியாதா? அதுவும் வீட்டில் உள்ள பெரியவர்களே சினிமாப் பாட்டுக்களைக் கேட்க ரேடியோப் பெட்டியை நோக்கி ஓடும் போது பப்பிக்கு அந்தப் பழக்கம் வராமலா போகும்? வீட்டு ரேடியோவை ரிப்பேருக்கு அனுப்பாமல் — ஷாக் அடிப்பதால்கழற்றிப் போட்டுவிட்ட கணவனைக் கடிந்து கொள்ளத்தான் வேண்டும். வீட்டு ரேடியோவை ரிப்பேர் செய்திருந்தால் தொட்டிலில் படுத்திருந்து தூங்கி விழித்த குழந்தை, பப்பிக் குட்டி பால் குடிப்பதைக் கூட மறந்து 'ஜாம்பஜார்.... ஜக்கு...!' என்ற பெயர் காதில் விழுந்ததும் அந்த ஒலி வந்த இடத்தை நோக்கி ஓடி யிருக்குமா ?

பிறகு பப்பியைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினால் அது கேட்டால்தானே?

ஒரு திமிறு திமிறிக் கொண்டு, ''உஹூம்.... இன்னும் ஜக்கு பாட்டு கேக்கணும்...... உஷா அக்கா....!'' என்று கிரீச்சிட்டவாறு உஷா பக்கம் தாவினாள். தோளில் தொங்கிக் கொண்டிருந்த டிரான்ஸிஸ்டரைக் கீழே வைத்துவிட்டு, பப்பியை வாங்கித் தோளில் அவள் முகத்தைப் பதிய வைத்துக் கொண்டாள் உஷா. பிறகு சிறிது நேரம் அவளுக்குப் புத்திமதி வார்த்தைகளை அன்பொழுக அள்ளிச் சொரிந்தாள்.

''கண்ணில்லே, பப்பி! வீட்டுக்குப் போய், டிபன் சாப்பிட்டுப் பால் சாப்பிட்டு வா. மறுபடியும் ஜக்கு பாட்டு வரும். வைக்கலாம் காக்கா வடையைத் தின்கிற பாட்டும் வரும். கேட்கலாம்...!'' என்று கூற வேண்டியதாயிற்று.

''ஜாம்பஜார் ஜக்கு இந்த ரேடியோவுக்குள் எப்படி வந்து உட்காருவான்? எங்கே நாற்காலி இருக்கு?'' என்று கேட்



கடமைக்குப் பின் கண்ணியம்!

பெல்காமில் போலீஸார் சுட்டதில் சிலர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் உயிரைக் காப்பாற்ற அவர்களைத் துப்பாக்கியால் சுட்ட போலீஸ் அதிகாரிகளே ரத்ததானம் செய்தனர்.

-டெக்கான் ஹெரால்ட்—பாபு

◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊

காமல் விடுவாளா பப்பி? படு புத்திசாலிப் பொண்ணு ஆயிற்றே அவள்?

''அதுவா? ஜக்கு இந்த டிரான்ஸிஸ்டர் பெட்டியில் உட்கார, ஜாம்பஜாரிலிருந்து சின்னச் சின்ன எறும்பு உயரத்துக்கு ஒரு நாற்காலியும் வாங்கிக் கொண்டு வருவான்.... அதைப் போட்டுக் கொண்டு இந்த டிரான்ஸிஸ்டரில் உட்கார்ந்து கொள்வான்....''

''எங்க அப்பா ரேடியோவிலே?'' குறுக்கிடுகிறாள் பப்பி.

''ஆமாம், ஆமாம்... அப்பா ரேடியோ விலேயும்தான் ஜக்கு வந்து உட்காருவான். வாடி, போகலாம்!'' என்று சற்றுக் கடிந்து கொண்டபடியே பப்பியை உஷாவிடமிருந்து இழுத்துக் கொண்ட அவள் தாயார், வீடு திரும்பினாள்.

மறு நாள் ஞாயிற்றுக்கிழமைக்கு ஓய்வு என்பதே இல்லாமல் போய் விட்டது. பப்பியின் தகப்பனார் செய்த காரியங்கள். எங்கிருந்தோ சில கள்ளிப் பெட்டிகளைக் கொண்டு வந்து அவற்றைப் பிரித்துப் பலகைகளைத் தனித்தனியாக எடுத்தார். எப்படியோ இருட்டும் நேரத்துக்குள் முகப்புத் தோட்டத்தின் வாயிலுக்குக் 'கள்ளிப் பலகை கேட்' ஒன்று தயாராகி விட்டது! அந்தப் புது 'கேட்'டுக்கு மஞ்சள் நிறத்தில் வர்ணம் பூசவும் அவர் தவறவில்லை. பப்பி, இந்தக் கதவைத் திறந்து கொண்டு வெளியே செல்லாமலிருக்கும் விதத்தில் கயிற்றினால் கதவை இறுகக் கட்டி விட்டார். தகப்பனுக்கு நல்ல தூக்கம். மறு நாள் எழுந்தபோது நேரம் போனதே அவருக்குத் தெரியவில்லை.

''பப்பி! பப்பிம்மா! பப்பிக் கண்ணு!'' என்று அழைத்தபடியே படுக்கையை விட்டு எழுந்த அவரை நோக்கி, ''பப்பி எங்கே?'' என்று அவர் மனைவியும் கேட்டாள் எப்படி இருக்கும்?

இருவரும் டிரான்ஸிஸ்டர் ஒலி கேட்கும் அடுத்த வீட்டை நோக்கி ஓடினார்கள். முதல் நாள் 'அவசர' செய்து போட்ட புதிய கேட்டு திறந்திருந்தது. 'மேஜை கட்டியிருந்த கயிறு அவிழ்க்கப்பட்டிருந்தது.

''இந்தக் கயிற்றைப் பப்பி எப்படித்தான் அவிழ்த்தாளோ? பொல்லாத பொண்ணு புத்திசாலிக் கண்ணு!'' என்று வாய்விட்டுப் பாடாக் குறையாகத் தகப்பனின் நெஞ்சு பதறிற்று. அடுத்த வீட்டில், உஷா அக்காவுக்கு அருகில் அமர்ந்து கொண்டு, சுவாரசியமாகத் திரை இசை ஒன்றைக் கேட்டபடி தலையை அசைத்துக் கொண்டிருந்த பப்பி திரும்பிப் பார்த்துக் கண்களைக் குழித்துக் கொண்டதோடு விடவில்லை. பற்களையும் இலேசாக வெளிக் காட்டி இளநகை செய்தாள். அந்த நகைப்பில் இருவருடைய கோப தாபங்களும் மறைந்து விட்டன.

இதற்குப் பப்பி பதில் ஏதும் கூறாமல், ''அப்பா... ஜக்கு... வந்து இப்போ காக்கா பாட்டுப் பாடப் போறானே! உஷா அக்காவைக் கேட்டுப் பாரு!'' என்றாள்.

''ஆகட்டும் அம்மா கண்ணு. உஷா அக்காகிட்டே சொல்லி நம்ம வீட்டு ரேடியோவிலேயும் அந்த ஜக்குவை வந்து பாடிட்டுப் போகச் சொல்லலாம். இப்போ நீ வந்து காப்பி சாப்பிட்டுட்டுப் போ!'' என்று நயமாகக் கூறி அழைத்தாள் தாயார்.

''போம்மா, பப்பி! ஜக்குவை உங்க வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்!'' என்று உஷா கூறினாள்.

பப்பியை எடுத்துக் கொண்டு தாயாரும் தகப்பனும் வீடு திரும்பினார்கள்.

அன்று இரவு பப்பியின் தந்தை தூங்கப் போகுமுன், தோட்டத்துக் கதவைக் கயிறு போட்டுக் கட்டாமல் கம்பி போட்டுக் கட்டி வைத்தார். குழந்தையினால் இந்தக் கம்பியை அசைத்துத் திறக்க முடியாதென்று அவர் நினைத்தது இயற்கையே. ஆனால் பொழுது விடிந்து பார்த்தால், நடந்தது வேறாக இருந்தது!

கம்பி முடிச்சுகளையும் வளைத்துக் கதவைத் திறந்து கொண்டு பப்பி பக்கத்து வீட்டுக்குப் போயிருப்பது தெரிந்தது.

''அப்படியா சமாசாரம்? பப்பிக் கண்ணு! கம்பி போட்டுக் கட்டினாலும் கதவைத் திறந்து விட்டாயே, உன் சாமர்த்தியம்கூட என்னிடமிருந்துதான் பிறந்திருக்க வேண்டும் என்பதை மறந்து விட்டாயா கண்ணு! இதோ இன்று அந்தக் கேட்டை எப்படி மூடுகிறேன், பார்!'' என்று சொல்லிக் கொண்டு துள்ளிக் குதித்த பப்பியைக் கீழே விட்டு விட்டு அவள் தகப்பன் கடைக்குச் சென்றார். இரண்டு மூன்று ஆணிக் கட்டைகளும், சில இரும்பு வளையங்களும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பி, அவற்றைக் கொண்டு புது மாதிரியான கட்டைத் தாழ்ப்பாள் ஒன்று தயாரித்து அதைக் கேட்டில் பொருத்தினார். ஒரு பக்கம் கட்டையை அமுக்கிக் கொண்டால்தான் இன்னொரு பக்கம், வளையத்துடன் இணைந்த கட்டை திறந்து கொள்ளும். தாழ்ப்பாளும் திறக்கும். இந்த யுக்தியையும் பப்பி இலட்சியம் செய்யவில்லை. மறு நாள் மீண்டும் கேட் திறந்து கிடந்தது. பக்கத்து வீட்டில் உஷாவுடன் பப்பி அரட்டை அடிக்கும் குரல் கேட்டது.

[illegible] அந்த கேட்டைக் [illegible] மான வளையத்தைக் கொண்டு வந்து: அதை


வேலை? வேலை? வேலை?
ஊக்கமளித்திடும் காப்பி—
நெஸ்கஃபே யிக்கென்று
5 விநாடிகள் ஒதுக்குங்கள்!
அவ்வளவு குறைந்த நேரத்தில்
ஒரு கப் தயார்!
தென்னிந்திய காப்பி விதைகளிலிருந்து தயாரித்த முற்றிலும் சுத்தமான காப்பி
NESCAFÉ
instant
coffee
நெஸ்லே தயாரிப்பு
MCE 5749
உணர்ச்சி ஊட்டிடும் நெஸ்கஃபே, ஊக்கமளித்திடும் நெஸ்கஃபே!

மிகவும் கஷ்டப்பட்டுப் பொருத்தினர் அந்த மனுஷன்.

இந்தப் புது விசையில் தந்திரமாக ஒரு கம்பியை இணைத்திருந்தார். அதைக் காலால் அழுத்தினால்தான், மேலே முதலை போன்ற ஒரு முகம் வாயைத் திறக்கும். கதவையும் திறக்க முடியும். பப்பி, கட்டாயம் இந்தத் தடவை தோற்றுப் போவாள் என்று அவர் எண்ணியதில் தவறில்லை. ஆனால், அவ்வாறும் அவர் எண்ணம் பலிக்கவில்லை. மறு தினம் காலையில், பப்பி இந்தத் தந்திரத்தையும் தகர்த்தெறிந்து விட்டுப் புறப்பட்டு விட்டாள். பக்கத்து வீட்டுக்கு என்பது வெளியாயிற்று.

இப்போது அவருக்குக் குழந்தையைக் கண்டவுடன் சற்று முகம்கூடக் கடுகடுத்து விட்டது. "நீ பொல்லாத பொண்ணு! தினம் ஒரு முறை நான் 'கேட்'டை இழுத்துக் தந்திரமாகக் கட்டுகிறேன். நீயும் அதை எப்படியோ திறந்து விடுகிறாய்?"

"நான் இல்லேப்பா? ஜக்கு.... உம்... ஜாம்பஜார் ஜக்கு... பாடல்லே? அந்த ஜக்குப்பா!"

"ஜக்குவாவது மக்குவாவது? எனக்குத் தெரியாதா, உன் தந்திரமெல்லாம். பார்க்கிறேன், நாளைக்கு!"


மறுபடியும் தந்திரத் தாழ்ப்பாள் ஒன்றைக் கண்டுபிடித்து அதைக் கதவுக்குப் பொருத்தினர் அந்த மனிதர்.

அவர் எண்ணியது கடைசியாக நிறைவேறிவிட்டதென்றே கூற வேண்டும். காலையில் எல்லோருக்கும் முன்னால் எழுந்துவிடும் பப்பி, கேட்டைத் தாண்டிப் பக்கத்து வீட்டுக்குச் சென்று விடுவாளே? இன்று அவ்வாறு செய்யவில்லை. 'கேட்'டை அசைத்தவாறே நின்று கொண்டிருந்தாள். கேட்டுக்குப் போட்டிருந்த பொறியும் கழற்ற முடியாமல் அப்படியே போட்டபடி இருந்தது. அதில் சொருகியிருந்த ஒரு சிறு 'கிளிப்'புதான், தாழ்ப்பாளுக்குப் பாதுகாப்பாக விளங்கியிருக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை.

அதையெல்லாம் நீக்கிவிட்டு, கேட்டைத் திறந்தார், பப்பியின் அப்பா. அடுத்த வீட்டுக்கு ஒரே தாவாகத் தாவி ஓடினாள் குழந்தை. அங்கு வழக்கம்போல் உஷா பப்பியின் கன்னத்தை நெறித்தவாறு வரவேற்றாள். கூடவே வந்த பப்பியின் தகப்பனாரையும் வரவேற்ற உஷா, "உங்கள் வீட்டுக்குப் பேப்பர் போடுகிற ஆளு ரொம்ப சத்தம் போட்டுட்டு, பேப்பரை எங்களிடத்திலே கொடுத்துட்டுப் போயிருக்கிறான் சார்! உங்க வீட்டில் தினம் தினம் கேட்டைத் திறக்கிறதுக்குள் அவன் சக்தியெல்லாம் போய் விடுகிறதாம். இன்று கொஞ்சம்கூட அதைத் திறக்க முடியவில்லையாம். உங்க வீட்டுக்கு இதைக் கொடுத்தனுப்புங்க என்று சொல்லி விட்டு, அந்தச் சைதாப்பேட்டை 'சக்கு பேப்பர் மார்ட்' கார ஆளு சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்" என்று உஷா கூறும் போது, பப்பியைக் கட்டிக் கொண்டார் தகப்பன்.

"உண்மைதானு பப்பி! கதவைத் திறக்க ஜக்கு வருவான் என்றுயே, உண்மைதான். அவன் பெயர் சக்கு...ஜக்கு என்றும் உன் மழலை மொழியில் கூறலாம் நீ! கேட்டை இவ்வளவு நாட்களாக நீ திறக்கவில்லையா? நீதான் புத்திசாலித்தனமாகத் தினம் அதைத் திறப்பதாக நினைத்தேன். உன் ஆசாமி ஜக்குவா திறந்தான்? அவனுக்காகவா என் புத்திசாலித்தனத்தை யெல்லாம் உபயோகித்து ஒரு பொறி கண்டு பிடித்தேன். என்ன முட்டாள்தனம் எனக்குத்தான்!" என்ற போது உஷாகூடச் சற்று வாய்விட்டுச் சிரிக்காமலில்லை.

டிரான்ஸ்போர்ட் ஆபீஸா! நான்தான் கண்டக்டர் முனிசாமி பேசறேன்! கூட்டம் என்னாலே சமாளிக்க முடியல்லே. இந்த வேலையை விட்டுட்டு பழையபடி புளி மண்டியில் புளியடைக்கற வேலைக்கே போயிடறேனுங்க.






"ரொம்பப் பசியுங்க. எதினாச்சியும் கொடுங்க, நின்னு வீட்டு வேலை வேண்டுமானும் செய்து விட்டுப் போகிறேன்!"

"இந்நா பிடி என் மனைவி செய்த அடை! ஆகாரத்துக்குஆகாரமாச்சு! வேலைக்கு வேலையுமாச்சு!"

காதலன்: நீயே என் விளக்கு! என் ஒளி! என் பிரகாசம்.....!

மாடியில் தகப்பனார்: ஏ விஸ்வி! முதல்லே வாசல் விளக்கை அணைத்து விட்டுக் கதவைச் சாத்திண்டு உள்ளே வா!





இசையில் ஆசை!

ஓசை நயம் தேடுவதும் தருவதும் குற்றமல்ல. இசைக் கலையே ஓசை நயத்தைக் காப்பாற்றிக் காப்பாற்றுவதுதானே? ஆனால் சிலர் ஓசை நயம் என்பது ஏதோ ஓர் இழுக்கான செயல் போலவும் அதன் பயனாக மாபெரும் கேடு மனித இனத்துக்கு ஏற்படுவது போலவும் பேசுவர். ஆராய்ந்து பார்த்தால் அவர்தம் போக்குக்குக் காரணம் கவலை என்பதும், கவலைக்குக் காரணம் அவர்கள் ஓசை நயம் காட்ட முயன்று ஏற்பட்ட தோல்வி என்பதும் விளங்கிவிடும். - அறிஞர் அண்ணா

ஜொலிக்கவும் சிரிக்கவும்!

கோமதி சுவாமிநாதன்



கல்யாண வீட்டில் நமக்கு இரண்டாம் பந்தியிலோ மூன்றாம் பந்தியிலோதான் சாப்பிட இடம் கிடைக்கிறது என்று அங்கலாய்த்துக் கொள்பவர்கள் ஔவையாரைத் தங்களுக்கு முன்னோடியாகக் கொள்ளலாம்! எப்படி?

பாண்டியன் மாளிகையில் நடந்த திருமணம் ஒன்றுக்கு ஔவையார் சென்றிருந்தார். சாப்பாட்டு



ஔவை கண்ட கலாட்டா கல்யாணம்

வேளையில் விருந்து நடக்கு மிடத்துக்குச் சென்றார். கூட்டம் அவரை நாலா பக்கத்திலிருந்தும் இடித்துத் தள்ளியது. சிறிது நேரம் கழித்து உணவருந்தப் போகலாம் என்று நினைத்து அவர் ஒதுங்கி வந்து நின்றார். அவர் உணவை முடித்துக் கொண்டுதான் அப்படி வந்து நிற்கிறார் என்று நினைத்த ஒருவர் அவரை அணுகி, ''பாட்டி! சாப்பாடாகிவிட்டதா? விருந்து எப்படி?'' என்று கேட்டார். உடனே ஔவையார்,

''வண்பரிசைத் தேர்ந்த வழுதி கல்யாணத்
துண்ட பெருக்கம் உரைக்கக்கேள் - அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியினாலே
சுருக்குண்டேன் சோறுண்டிலேன்!''

என்று நகைச்சுவைப் பாடலால் பதிலளித்தார்.



ஏ ஸ் ஜெ ஸ் ஜென் பிரொட்டர்ஸ் நாடகக் குழுவின் நகைச்சுவை நடிகராகப் பங்கெடுத்துக் கொண்டும் நண்பர் ஐ. எஸ். ஆர். பாலி டெக்னிக்கில் பரீட்சை எழுதி பாஸ் செய்து விட்டு போர்ட்டிரஸ்டில் வேலைக்காக மனுப் போட்டிருந்தார். நேர முகத் தேர்வுக்கு வரச் சொன்னார்கள்.

இவரைப் பார்த்த வுடன் அந்தப் பரிசோத கர்களுக்கு என்ன தோன் றியதோ? ''கோழிக் குஞ்சுக்கு ஆங்கிலத்தில் என்ன பதம்?'' என்று கேட்டார்கள். இஞ்சி னீயரிங் கல்வி சம்பந்த மாக எதை எதையோ கற்பனை செய்து கொண்டு போயிருந்த ஐ. எஸ். ஆருக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்த அதிர்ச்சியில் பழகியிருந்த கோழிக் குஞ்சின் ஆங்கி லப் பெயர் மறந்து போய்விட்டது. ஆனால் முழுமையாக மறந்து விடவில்லை. 'கிச்சன்' என்று பதில் சொன்னார்!

அவர் 'சிக்கனை'க் 'கிச்ச'னாக்கியதற்காகப் பரிசோதகர்கள் மனம் விட்டுச் சிரித்தார்கள். ஆனால் வேலையை வேறு யாருக்கோ கொடுத் தார்கள்! 'நான் அன் றைக்கே போர்ட் டிரஸ்ட் இண்டர்வியூவில் நகைச் சுவை நடிகனாக்கப்பட் டேன்' என்கிறார் ஐ. எஸ். ஆர்.

மாடர்ன் தமிழ் 'ஷார்ட் ஸ்டோரி'யில் ஒரு போர்ஷன்

"யு ஆர் ராங்" என்றான் ராகவன்.

"நோ! ஐ ஆம் அப்ஸல்யூட்லி ரைட்" என்றாள் லதா.

ராகவன் முகவாய்க் கட்டையைத் தடவிக் கொண்டான். பிறகு "யு ஆர் எ விக்டிம் ஆஃப் பெட் தியரீஸ்" என்று சொல்லிக் கொண்டே மேஜைமீதிருந்த ரிக்கார்ட்



பிளேயரை இயக்கினான். மைசூர் துரைசாமி ஐயங்காரின் வீணை இசை சன்னமாகப் பரவத் தொடங்கியது.

"மை காட்! யூ ஹாவ் நாட் ஆன்ஸர்ட் மை கொஸ்ச்சன்?" என்று சீறினாள் லதா. ராகவன் டையின் முடிச்சை நிதானமாகப் போட்டான்.

"மை அட்வகேட் வில் ரைட் டு யூ" என்று சொல்லிப் போர்டிகோவை நோக்கி நடந்தான்.

பித்துப் பிடித்த புத்தகப் பிரியர்கள்

விநோதமான புத்தகங்களைத் தேடி சேகரித்து ஆனந்தப்படும் நபர்கள் மேலை நாடுகளில் அதிகம் பேர் உண்டு. பிரசித்தியடையாத மொழிகளில் வெளியாகியிருக்கும் பிரசித்திபெற்ற புத்தகங்களை ஒருவர் சேர்க்கிறார். அவரிடம் உக்கிரேனிய மொழியில் வெளியான 'அங்கிள் டாம்ஸ் காபின்' ஹீப்ரு மொழியில் பிரசுரமான 'பென்ஹர்' உருது மொழியில் அச்சிடப்பட்ட 'ஹாம்லெட்' எல்லாம் இருக்கின்றன. இன்னொருவர் ஆப்ரஹாம் லிங்கன் தம் ஓய்வு நேரத்தில் எந்த எந்தப் புத்தகங்களைப் படித்தாரோ அந்தப் புத்தகங்களின் முதல் பதிப்பின் பிரதியைத் தேடி வாங்குகிறார். ஒருவர், சாதாரண அமைப்பைத் தவிர, வட்டம், முக்கோணம், நீண்ட சதுரம் என்று இருக்கும் புத்தகங்களைச் சேர்க்கிறார்.



ஒருவர் முற்றும் பெறாமல் ஆசிரியர் அகாலமடைந்ததால் அரைகுறையாகப் பிரசுரமாகும் புத்தகங்களுக்கும் பறக்கிறார். அகஸ்டின் பிர்ரெல் என்ற ஆங்கிலேயர் ஏராளமான புத்தகங்களை விலை கொடுத்து வாங்கித் தம் தோட்டத்தில் குழி தோண்டிப் புதைத்தார். அதற்கு அவர் சொல்லும் விளக்கம் : "என் புத்தக அலமாரியில் இடம் இல்லை. அப்படியே அங்கு வைத்தாலும் எடுத்துப் படிக்கப் போவதில்லை. அதனால் தோட்டத்தில் இருப்பதினால் நஷ்டம் ஒன்றுமில்லை!" இங்கிலாந்தைச் சேர்ந்த சௌதி தன் புத்தக அலமாரிகளில் ஆண் எழுத்தாளர்களின் புத்தகத்துக்கருகில் பக்கத்தில் பெண் எழுத்தாளர் புத்தகத்தை வைக்க மாட்டார்! தம்பதிகளாக இருந்து இருவரும் புத்தகங்கள் எழுதியிருந்தால் அவற்றை மட்டும் அருகில் வைப்பார்!



பட்டு மாமா சிட்டு மாமி!

மனைவி: இந்த மளிகைக் கடையை மாற்றுங்கள். சாமான்கள் ரொம்ப மோசம்.

கணவன்: மந்திரி சபையைக் கூட மாற்றிவிடலாம். மளிகைக் கடையை மாற்ற முடியாதும்மா! வேறு எந்தக் கடையில் நமக்கு இப்படிக் கடன் கொடுப்பான்!



குட்டுப் பட்ட பேட்டி!

ஓர் இளைஞர் வேலைக்கான மனுவை அனுப்பி வைத்தார். நேரடிப் பேட்டிக்கு வரும்படி அவருக்கு உத்தரவு வந்தது. உற்சாகத்துடன் திருநெல்வேலி எக்ஸ்பிரஸில் ஏறித் திருச்சிராப்பள்ளியில் வந்து இறங்கினார்.

'எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டு அவர் பதில் அளிக்கும் முறையில் உள்ள பணிவையும் பக்குவத்தையும் சோதித்து அறிந்து கொள்ள விரும்பிய ஒரு பரிசோதகர் 'வாட் பிராட் யு ஹியர்' (What brought you here?) என்று முதல் கேள்வியைப் போட்டார்.

'திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் பிராட் மீ ஹியர்' என்று பளிச்சென்று பதில் வந்தது. கேள்வியின் நோக்கத்தை அவர் புரிந்து கொள்ளவில்லை. 'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் வில் டேக் யு பாக்' என்று சொல்லிப் பேட்டியை முடித்து விட்டார் பரிசோதகர்.

பக்கம் இரண்டு: கதைகள் நான்கு!

நெஞ்சம் மறப்பதில்லையே...!



வேப்பத்தூர் கிட்டு

ஒரு சமயம் பாரி முனை செல்வதற்காக இராயப்பேட்டை பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தேன். திடீரென்று மழைத் துளிகள் விழத் தொடங்கின. மரத்தடியில் சற்று ஒதுங்கி நின்றேன்.

அப்போது குடையுடன் ஒரு சிறுவன் பஸ் ஸ்டாப்புக்கு வந்து சேர்ந்தான். இரண்டொரு நிமிடங்களில் மழை 'சோ'வென்று பொழியத் தொடங்கியது. அந்தச் சிறுவன் தானாகவே என் பக்கத்தில் வந்து நின்று குடையை என் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்தான். அவனுடைய மற்றொரு கையில் கனமான பை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. எனது நன்றியறிதலைத் தெரியப்படுத்த எண்ணி நான், "அந்தப் பையை இப்படிக் கொடு. நான் சற்று நேரம் தூக்குகிறேன்" என்றேன். அதற்கு அவன், "பரவாயில்லை, ஸார், நானே வைத்துக் கொள்கிறேன். பைக்குள் கறி, பால் எல்லாம் தனித்தனியாய் இருக்கின்றன. ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் ஒன்றோடு ஒன்று மோதிப் பைக்குள்ளேயே கொட்டி விடும்" என்றான்.



சிறிது நேரத்துக்கெல்லாம் நாலாம் நம்பர் பஸ் ஒன்று வந்து நின்றது. அவன் என்னை ஒண்டியவாறே பஸ்ஸை நோக்கி நெருங்கினான். நான் நகர்ந்து கொடுக்காமலே அவனைப் பார்த்து, "இது பாரி முனைக்குப் போகாது, தம்பி!" என்றேன். "ஆமாம், ஸார், இது போகாது. 3, 31, 5 பஸ்கள் தான் போகும்" என்றான் அவன் இனிய சிறு புன்முறுவலுடன். அதற்குள் அந்த 4ம் நம்பர் பஸ் புறப்பட்டுப் போய் விட்டது.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு 5ம் நம்பர் பஸ் ஒன்று வந்து நின்றது. அப்பொழுதும் மழை பெய்து கொண்டிருந்தபடியால் நானும் அச்சிறுவனும் பஸ்ஸின் ஏறும் இடம் வரையில் குடையை மடக்காமலே நடந்து சென்றோம். முதலில் அவனை ஏறச் சொல்வதற்காக நான் சற்று ஒதுங்கி நின்று, "நீ ஏறிக் கொள், முதலில்" என்றேன். அதற்கவன் சிரித்துக் கொண்டே, "நான் ஸ்டான்லி ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் ஸார். அடுத்த நாலாம் நம்பர் பஸ் வந்ததும் போகிறேன். நீங்கள் ஏறிக் கொள்ளுங்கள்" என்றான். நான் ஏறிக் கொண்டதும் பஸ் புறப்பட்டுச் சென்றது.

அப்பொழுதுதான் எனக்குப் பளிச்சென்று புரிந்தது. முதலில் வந்த நாலாம் நம்பரில் அவன் ஏன் ஏறாமல் இருந்துவிட்டான் என்பது. அந்த மழையில் என்னை நனைய விட்டுவிட்டுப் போக அவனுக்கு மனம் வரவில்லை.

திரும்பிப் பார்த்தேன். என் கண்களில் கண்ணீர் கசிந்தது. கொட்டும் மழையில் குடையையும் பிடித்துக் கொண்டு, கனமான பையையும் தூக்கிக் கொண்டு அந்தப் பஸ் ஸ்டாப்பில் மறுபடியும் நாலாம் நம்பர் பஸ்ஸை எதிர்நோக்கித் தன்னந் தனியாக நின்ற அந்த எழில் உருவம் இன்றைக்கும் என் கண்களை விட்டு அகலவில்லையே!

*

திருமணமாகிப் பத்து ஆண்டுகளாகியும் மகாதேவன் — சாமனா தம்பதிக்குக் குழந்தைப் பேறு கிட்டாமலே இருந்து வந்தது. மனமொத்த தம்பதியாக அவ்விருவரும் வாழ்க்கை நடத்தி வந்தும் குழந்தை இல்லாக் குறை அவர்களைப் பெரிதும் வாட்டியது.

சாமனா, நாள் தவறாமல் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டு வந்தாள்.

அவளுடைய பிரார்த்தனை வீண் போகவில்லை. அவள் கருவுற்றாள். உரிய காலத்தில் மருத்துவ மனையில் குழந்தையும் பிறந்தது.

டாக்டர் வெளியே வந்ததும் மகாதேவனிடம், "குழந்தையின் இடது கால் பாதம் திரும்பியும் சற்றுச் சூம்பியவாறும் காணப்படுகிறது. கர்ப்பத்திலேயே ஏற்பட்ட கோளாறு ஆகையால் நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை. தற்சமயம் உங்கள் மனைவிக்குத் தூக்க மருந்து கொடுத்திருப்பதால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறாள். அவள் விழித்தெழுந்ததும் இந்த அதிர்ச்சி தரக்கூடிய செய்தியை மிக நாசுக்காக அவளிடம் தெரிவிக்க வேண்டும்" என்றார்.

நாலு மணி நேரத்துக்குப் பிறகு சாமனா விழித்துக் கொண்டாள்.

மகாதேவன், குழந்தையின் ஊனத்தைப் பற்றி அவளிடம் தயங்கித் தயங்கித் தெரிவித்தார்.

சாமனாவின் முகத்தில் இனிய புன்னகை மலர்ந்தது. "அக்குழந்தை நம்மிடம் இருந்தால் தான் மன நிம்மதியோடு நன்றாய் வளரும் என்று தான் கடவுள் நம்மிடம் அவனை அனுப்பியுள்ளார். அவருக்கு நம்மிடம் எவ்வளவு நம்பிக்கையும் கருணையும் பார்த்தீர்களா?" என்றாள் அவள்.



தன் கண்களில் பசபசத்த கண்ணீரை வெகு பாடுபட்டு அவ விடமிருந்து மறைத்துக் கொண்டார் மகாதேவன்.



✽

அந்த வீட்டு மாடியில் குடியிருந்தனர் சந்திரமௌளியும் அவனுடைய இளம் மனைவி சாந்தாவும். கீழ் வீட்டில் வீட்டின் சொந்தக்காரரான ஜேம்ஸ் வேதநாயகமும் அவருடைய மனைவி ஒடில்லாவும் வசித்து வந்தனர். வேதநாயகம், காட்டு இலாக்காவில் பெரிய பதவி வகித்து உபகாரச் சம்பளம் பெற்று வந்தார்.

ஒரு நாள் சந்திரமௌளி, வேதநாயகம் தம்பதிகளிடம், "சாந்தாவுக்கு இது எட்டாவது மாதம். தாயில்லாப் பெண்ணாதலால் ஊரில் அவளைக் கவனித்துப் பிரசவம் பார்த்து அனுப்பி வைக்க யாரும் இல்லை. ஆகையால் இங்கேயே வைத்துக் கொள்வதுதான் சரி என்ற முடிவுக்கு வந்து விட்டேன். நான் 'நைட் டியூட்டி'க்குப் போகும்போது அவளைக் கவனித்துக் கொள்ள உங்களைத் தவிர எனக்கு யார் இருக்கிறார்கள்?" என்றான் உருக்கமாக. உடனே ஒடில்லா, "கவலைப்படாதே மேன்; எந்த நேரத்தில் இடுப்பு வலி ஏற்பட்டாலும் உடனே எங்கள் காரில் சாந்தாவை ஏற்றிக் கொண்டு 'நர்ஸிங் ஹோமில்' அட்மிட் செய்து விட்டுப் பிரசவம் ஆகிற வரையில் நாங்கள் இருவரும் கூடவே இருப்போம்' என்றாள்.

ஒரு நாள் நடு இரவில் சாந்தாவுக்கு வலி கண்டது. "ஒடில்லாம்மா, ஒடில்லாம்மா" என்று கத்தினாள். ஒடில்லா வேகமாக ஓடி வந்து படிக்கட்டில் ஏறிச் சாந்தாவைப் பிடித்துக் கொண்டு தாங்கி அணைத்தவாறு கீழே இறங்கிப் போர்டிகோவில் உள்ள காருக்குள் அவளை ஏற்றினாள். "ஜேம்ஸ் தற்சமயம் காரை ஓட்டிக் கொண்டு நம்முடன் கூட வர முடியாத நிலையில் இருக்கிறார். நானே ஓட்டிக் கொண்டு வருகிறேன்" என்று கூறித் தானே காரைச் செலுத்திச் சென்று, 'நர்ஸிங் ஹோமில்' அவளை ஒப்படைத்து விட்டு வீடு திரும்பினாள் ஒடில்லா.

அன்றிரவு சாந்தாவுக்கு இடுப்பு வலி ஏற்படுவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னால்தான் ஜேம்ஸ் வேதநாயகம் மாரடைப்பினால் இறந்து விட்டிருந்தார் என்ற உண்மையை ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு குழந்தையுடன் வீட்டுக்குத் திரும்பி வந்தபோதுதான் தெரிந்து கொண்டாள் சாந்தா.

✽

தன்னந்தனியாக நானே காரை ஓட்டிக் கொண்டு கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்தேன். பாதி வழியில் கார் மக்கார் செய்ய ஆரம்பித்தது. கடைசியில் நின்று விட்டது. 'பானெட்டைத் தூக்கி எனக்குத் தெரிந்த மட்டில் பழுது பார்க்கத் தொடங்கினேன். பலன் இல்லை. அதற்குள் இருளும் சூழ்ந்து கொண்டது. என்ன செய்வதென்று புரியாமல் சாலையின் ஓரமாகத் திகைத்து நின்றேன். அப்பொழுது வேகமாக அவ்வழியே வந்த கார் ஒன்று என் அருகில் வந்து நின்றது. அதனுள் அமர்ந்திருந்த பெரியவர் என்னுடைய நிலைமையைத் தெரிந்து கொண்டதும் என்னைப் பார்த்து, "நீங்கள் என் காரில் ஏறிக் கொள்ளுங்கள். இன்றிரவை எங்களுடன் கழிக்கலாம். உங்கள் காரைப் பழுது பார்த்துத் தர நாளைக் காலையில் நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

அவருடன் ஒரு மைலுக்கு அப்பாலிருந்த அவருடைய பங்களாவுக்குச் சென்றேன்.

அந்தப் பெரியவர் என்னிடம், "நாங்கள் காங்கிரஸ் அபிமானிகள். எங்கள் தொகுதியில் .காங்கிரஸ் வெற்றி பெற்றதைக் கொண்டாடும் வகையில் இன்றிரவு ஏழெட்டுத் தொண்டர்களை விருந்துக்கு அழைத்திருக்கிறேன். நீங்களும் எங்களுடன் விருந்துண்டு எங்களைக் கௌரவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

பிறகு அவர் தம் இரண்டு பிள்ளைகளையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

கடைசியில் விருந்துண்ண உட்காரும்போது அவரது இரண்டாவது பிள்ளையைக் காணவில்லை. நான் பெரியவரைப் பார்த்து, "உங்களுடைய மற்றொரு பிள்ளையை எங்காவது அனுப்பியிருக்கிறீர்களா?" என்று வினவினேன். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே, "அவன் இன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மாட்டான். எங்காவது ஒரு நண்பருடைய வீட்டில் சாப்பிட்டுக் கொள்வான்" என்றார். எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. அதைக் கவனித்த மூத்த பிள்ளை "அவனுக்குக் காங்கிரஸைப் பிடிக்காது. காங்கிரஸ் கட்சிக்கு அவன் பரம விரோதி. அவன் சுதந்திரக் கட்சியில் அபாரப் பற்றுடையவன்" என்றார்.

மறுநாள் அதிகாலையில் நான் எழுந்து என் காரை நிறுத்தி விட்டு வந்த இடத்துக்கு விரைந்தேன். என்ன ஆச்சரியம்! இரவு முழுதும் அந்த இரண்டாவது பிள்ளை என்னுடைய காரைப் பழுது பார்ப்பதிலேயே கழித்திருந்தார். அவருடைய சொக்காயும் பாண்டும் எண்ணெய்க் கரியினால் திட்டுத் திட்டாய் அழுக்கடைந்திருந்தன. என்னைப் பார்த்ததும், "ஸார்! தங்கள் காரை ஒன்றும் நம்பராகச் செய்து விட்டேன். குறைந்தது ஒரு வருடத்துக்காவது மக்கார் செய்யாமல் ஓடும்" என்றார்.



கட்சிப் பகைமை வேறு; மனிதாபிமானம் வேறு என்ற பேருண்மையை அந்தச் சிறிய இளைஞரிடம் அன்று கண்டறிந்தேன். (உண்மைக் கதைகள்)

வட்ட மேஜை

பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூபாய் 15/- பரிசு பெறுகிறது:

அண்மையில் சென்னைத் துறைமுகத்தைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கே இருந்த அரசாங்கக் கிடங்கில் சிதறிக் கிடந்த கோதுமைத் தானியங்களைப் பார்த்து நான் வியப்பிலே மூழ்கிவிட்டேன். அதுமட்டுமல்ல, கப்பலிலிருந்து எடுக்கும் கோதுமைகள் அங்கே எங்கு பார்த்தாலும் சிதறிக் கிடந்து குப்பை மேடுகளாகக் காட்சி தந்தன. ரயில் தண்டவாளங்களிலும் உள்ளேயிருக்கும் சாலைகளிலும் சிதறிக் கிடக்கும் கோதுமையைக் கொண்டே நகரத்தின் ஒரு நாள் தேவையைப் பூர்த்தி செய்துவிட முடியும் என்று கருதுகிறேன்.

அப்படிச் சிதறும் கோதுமைகளை அங்குள்ள ஏழைத் தொழிலாளிகள் கொண்டு சென்றாலும் பரவாயில்லை. அப்படி அவர்களையும் எடுக்க விடாமல் தானாக அதற்கு ஓர் ஆளை நியமித்துச் சேதாரமடையாமல் பாதுகாக்கவும் இல்லாமல் வீணே குப்பை மேடாகக் காட்சியளிக்கும் கோதுமைத் தானியத்தைப் பார்த்தபோது வருத்தம் அடைந்தேன். அந்தத் தானியத்தை விளைக்க விவசாயிகள் படும் பாட்டைச் சொல்லி முடியாது. அப்படியிருக்க ஏன்தான் அரசாங்கம் இதைக் கவனியாமல் இருக்கிறதோ தெரியவில்லை. தனியார் துறையில் இப்படிப்பட்ட சேதங்கள் நடக்குமா ?

சென்னை — 5
20—3—70 மு. கு. தணிகாசலம்

நான் எஸ். எஸ். எல். சி. வரை படித்திருக்கிறேன். எனது வலது கால் கட்டியின் காரணமாக அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு முழங்காலுக்கு மேல் துண்டிக்கப்பட்டு விட்டது. நான் வேலூரில் இருக்கும் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸில் ரிஜிஸ்தர் செய்திருக்கிறேன். நெ: 11529-65.

கடந்த ஐந்தாண்டு காலமாக எனக்குச் சில இண்டர்வியூக்கள் வந்தன. நான் நிறைய மார்க்குகள் பெற்றிருக்கிறேன். பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். இவ்வளவு இருந்தும் நான் எந்த இண்டர்வியூவிலும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. காரணம் நான் ஊனமுடையவனாக இருப்பதுதான்!

அரசாங்க அலுவலகங்கள் என்னைத் தேர்ந்தெடுத்து வேலை தராவிடில் தனியார் மட்டும் எனக்கு எப்படி வேலை தருவார்கள்? மத்திய அமைச்சர்களும் மாநில அமைச்சர்களும் மேடை போட்டு, விழா எடுத்து, ஊனமுற்றோர் தினம் கொண்டாடுகின்றனர். என்ன பயன்? பொறிக உள்ளோர் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலையும் செய்கின்றனர்.

இனி தற்கொலை செய்துகொள்ள வேண்டும் அல்லது பிச்சை எடுக்க வேண்டும். இதைத்தான் இந்த அரசும், அதிகாரிகளும் விரும்புகின்றனரா?

6—4—70 க. இரத்தினசபாபதி,
175, பூக்கடைத் தெரு,
அம்பூர்ப்பேட்டை,
வாணியம்பாடி (வ. ஆ. மா.)


பட்ஜெட் மீது திரு எம். ஆர். மஸானி ஆற்றிய உரை அனைவரும் ஊன்றிப் படிக்கத்தக்கது. வெறுமனே இலட்சியங்களின் பெயரைச் சொல்லிக் கூப்பாடு போட்டு, பாமர மக்களை ஏமாற்றி வரும் போலி அரசியல்வாதிகள் சுதந்திரக் கட்சியின் தராதரத்தைச் சரியாக மதிப்பிடாது துஷ்பிரசாரம் வேறு செய்கின்றனர். மஸானியைப் பற்றிக் 'கல்கி'யில் வெளிவந்துள்ள கட்டுரையை நோக்கினால் உண்மைகள் தெளிவாகும்.

திருவிடைமருதூர்,
6—4—70 டி. வி. கண்ணன்

எங்கள் கிராமத்து டாக்டர் வழக்கம்போல் நோயாளிகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். நாலைந்து பேர் ஒரு நோயாளியை அழைத்து வந்தனர். டாக்டர் உடனே பார்க்க வேண்டிய சீரியஸான கேஸ். டாக்டர் நோயாளியை நெருங்கவும் தபால்காரர் ஒரு தந்தியை நீட்டவும் சரியாக இருந்தது. பிரசவத்துக்காக ஊருக்குச் சென்றிருந்த டாக்டரின் மனைவிக்கு மிகவும் ஆபத்தான நிலை என்றும், உடனே வரும்படியும் தந்தியில் கண்டிருந்தது. நோயாளியைப் பக்கத்து டவுனுக்கு அழைத்துச் செல்லும்படி கூறிவிட்டு டாக்டர் ஸ்டேஷனுக்கு ஓடினார் ரயிலைப் பிடிக்க. ஊர் போய்ச் சேர்ந்த டாக்டரை வரவேற்றது அவர் மைத்துனன். "என்ன அத்தான், ஏமாந்து விட்டீர்களே! இன்று என்ன தேதி? ஏப்ரல் ஒன்று. ஏப்ரல் முட்டாளாகி விட்டீர்களே!" என்று கூறிய மைத்துனனிடம் எரிச்சலைக் காட்ட முடியாமல் அடக்கிக் கொண்டு அடுத்த ரயிலில் ஊர் வந்து சேர்ந்தார். அவருக்காகக் காத்திருந்த முதல் செய்தி: "கிராமத்து டாக்டர் சரியான சமயத்தில் பார்த்திருந்தால் ஓர் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம்." டாக்டரின் மைத்துனன் விளையாடிய 'ஏப்ரல் பூல்' விளையாட்டால் டாக்டருக்கு வீண் அலைச்சல், கெட்ட பெயர், ஓர் உயிர் பலி !

திருநெல்வேலி
2—4—70 ஆர். அனந்தராமகிருஷ்ணன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



Kleertone

கிளீயர்டோன் ஆட்டோமேட்டிக் இஸ்திரிப் பெட்டி மின்சார செலவை மிச்சப்படுத்துகிறது.

இம்பீரியல் ஆட்டோமெட்டிக் இஸ்திரிப் பெட்டி

- 230/250 ஏஸி அல்லது ஏஸி/டிஸியில் இயங்குகிறது
- 800 வாட்ஸ்கள்
- 2.7 கிலோ எடை
- சூட்டை கூட்டி, குறைக்கும் தெர்மோஸ்டட் வசதி

Kleertone

கிளீயர்டோன்- உன்னத
மின்சார சாதனங்கள்

நேஷனல் ரேடியோ & எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி லிட்.,
(ஜெனரல் ரேடியோ & அப்ளீயன்ஸஸ் பிரிவு)
பம்பாய் • கல்கத்தா • டெல்லி • சென்னை.

ULKA-KLI TM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

